www.padippakam.com

டிசம்பர் 2007
ரூ. 7.00

# புதிய ஜனநாயகம்



## நந்திகிராமம்:
# சி.பி.எம். கட்சியின் பாசிச வெறியாட்டம்

படிப்பகம்

www.padippakam.com

# "கம்யூனிசமே வெல்லும்!"

## -புரட்சிகர அமைப்புகளின் நவம்பர் புரட்சிநாள் விழா சூளுரை

நவம்பர் 7, 1917. இப்பூவுலகின் ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பில் பாட்டாளி வர்க்க ஆட்சி மலர்ந்த நாள். ஏகாதிபத்தியம் என்பது காகிதப்புலியே என நிரூபித்துக் காட்டி காலனிய நாட்டு மக்களின் மனங்களில் விடுதலைக் கனலை மூட்டிய நாள். ரஷ்யாவில் பாட்டாளிகளின் - பஞ்சைப் பராரிகளின் முதல் சோசலிச அரசு உதித்த அந்த நவம்பர் புரட்சிக்கு இன்று 90-ஆவது ஆண்டு நிறைவுநாள்.

ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் இந்நவம்பர் புரட்சிநாள் விழாவை, நாடு மறுகாலனியாக்கப் படுவதற்கும் இந்துவெறி பாசிசத்துக்கும் எதிரான விழாவாகத் தமிழகமெங்கும் நடத்தின.




குற்றவாளிக் கூண்டில் கொலைகார ராமன்: அரங்கை அதிரவைத்த இளந்தோழர்களின் "ராமன்-இரட்டைக் கொலை வழக்கு" நாடகம்.

**சென்னையில்** ரஷ்யப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் 90-வது ஆண்டு விழாவை வரவேற்று ஆர்ப்பரித்தது சேத்துப்பட்டு. அங்கு அம்பேத்கர் திடலில் பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் செங்கொடியேற்ற, வேட்டுகளும் பறைமுழக்கமும் இடியென முழங்க, விண்ணதிரும் முழக்கங்களுடன் ஊர்வலமாகப் புறப்பட்ட தோழர்கள் சமுதாயக் கூட அரங்கில் சங்கமித்தனர். ம.க.இ.க. தோழர் சோமு தலைமையில் தோழர் துரை.சண்முகம் துவக்க உரையுடன் தொடங்கிய விழாவில் இளந்தோழர்கள் தமிழ்ச் சுடர், செந்தமிழ்ச் செல்வன் ஆகியோர் ரஷ்யப் புரட்சியை பறைகொட்டிப் பாடினர். சிறீராம் ஃபைபர்ஸ் தொழிலாளர்களான பு.ஜ.தொ.மு. தோழர்கள், "தொழிலாளர்களை இன்று பகத்சிங் சந்தித்தால்..." எனும் நாடகத்தின் மூலம், அடிமை மோகமும் அரசியலற்ற போக்கும் கொண்ட கணினித்துறை தொழிலாளர்களையும் உணர்வற்றுக் கிடக்கும் ஆலைத் தொழிலாளர்களையும் புதிய சமுதாயத்துக்காகப் போராடும் புதிய மனிதனாக மாற்றிக் காட்டினர்.

சினிமா, நாடகத் தொடர்கள் மட்டுமின்றி, தொலைக்காட்சிகளில் விளம்பரங்களும் நுகர்வு வெறியையும் மூடத்தனத்தையும் வளர்ப்பதைச் சாடி, "விளம்பர இடைவேளை எச்சரிக்கை!" என உணர்த்திய இளந்தோழர் வெண்மணி; காஞ்சி சங்கராச்சாரி - ஐயப்பன் கோவில் தந்திரி முதலான கழிசடைகளைக் காறி உமிழ்ந்து தனது பிஞ்சுக் குரலால் பாடி எள்ளி நகையாடிய இளந்தோழர் அனுசுயா; "நான் பெரியார் பேசுகிறேன்" என்று பார்ப்பனியத்தைச் சாடிய இளந்தோழர் சங்கரி; "குஞ்சிதம் குருசாமி பேசுகிறேன்" என்று மூடத்தனங்களையும், பெண்ணடிமைத்தனத்தையும் சாடிய இளந்தோழர் ஓவியா மற்றும் புரட்சிகரப் பாடல்களை இசைத்த இளந்தோழர்கள் - என புதிய தலைமுறையினர் புரட்சிகர உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சினர்.

திருச்சியில் செங்கொடி ஏற்றி நவம்பர் புரட்சி நாளில் சூளுரைக்கும் தோழர்கள்.



குதிரைக்குப் பிறந்த வருணாசிரமக் கொலைகாரன் ராமனைக் குற்றவாளிக் கூண்டிலேற்றிய இளம் தோழர்களின் "ராமன்: இரட்டைக் கொலை வழக்கு" நாடகம் பெருத்த வரவேற்புடன் அரங்கை அதிர வைத்தது. அடுத்து நடந்த கவியரங்கில், "வர்க்கப் போராட்டத்தில் வார்க்கப்பட்டவர்கள் நக்சல்பாரிகள்; வர்க்கத் தீயை ஓமக்குண்டத்தில் வளர்க்க நினைக்கிறார்கள் மார்க்சிஸ்டுகள்" எனக் கவிஞர் தமிழேந்தி தனது குத்தீட்டி கவிதையால் குறிதவறாமல் போலி கம்யூனிஸ்டுகளைச் சாடினார். கவிஞர் கருணாகரன் சமூகக் கொடுமைகளைத் தன் கனல் மணக்கும் கவிதை வரிகளால் சுட்டெரித்துப் புரட்சித் தீயை மூட்டினார். இறுதியாக, பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 23

**இதழ் 2**

டிச. 2007

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
[அ.பெ.எண்: 2355]
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில்

# கூலிப்படைகளின் ஆதிக்கம்

**தி**ருவாரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் பூண்டி கலைச் செல்வனும், செங்கல் பட்டு நகர அ.தி.மு.க. செயலாளர் குமார் மற்றும் 2 பேரும் கடந்த மாதம் கூலிப்படை யினரால் பட்டப் பகலில் வெட்டிக் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து,''தமிழ் நாட்டு அரசியலில் கூலிப் படைகளும், ஆயுத வன்முறைக் கலாச்சாரமும் சமீப காலங்களில் பெருகிப் போய்விட்டன; அவை ஈவிரக்கமின்றி ஒடுக்கப்பட வேண் டும்'' என்று ஓட்டுக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் அச்சமும், எச்சரிக்கையும், கோரிக்கையும் முன்வைத்துள்ளனர். கொலை செய்யப்பட்டவர்கள் ஒன்றும் அப்பா விகள் அல்ல. இவர்களே கொலைக் குற்றங்கள் புரிந்துள்ளனர். கிரிமினல் குற்றக் கும்பல்களுடன் நெருங்கிய உறவு வைத்துக் கொண்டிருந்தவர்கள். மேலும் சொல்வ தானால், அவற்றின் நிழல் தலைவர்களாகவும் புரவலர்களாகவும் இருந்தவர்கள். அவற்றுக்கிடையிலான பழிவாங்கும் சங்கிலித் தொடர் கொலைகளின் ஒரு பகுதியா கவே இக்கொலைகள் நடந்துள்ளன. உள்ளூராட்சி மற்றும் கட்சி நிர்வாகிகளிடையே நடந்துவந்த அரசியல் காரணங்களுக்கான கொலைவெறியாட்டங்கள் நகர-மாநகர, மாவட்ட ஆட்சி மற்றும் கட்சி நிர்வாகிகள் மட்டத்துக்கு உயர்ந்துவிட்டது.

கள்ளச் சாராயம், போதை மருந்து விற்பனை, சங்கிலி பறிப்பு, வழிப்பறி, வீடு புகுந்து திருட்டு - கொள்ளை, இந்த நோக்கங்களுக்காகக் கொலைகள் புரிவது போன்ற கிரிமினல் குற்றங்கள் பல்கிப் பெருகி வருகின்றன. ஆனால், அவையெல் லாம் கட்டுப்படுத்தவோ, ஒழிக்கவோ முடியாதவை என்றும் அவற்றோடு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்; அவற்றுக்குப் பலியாகாமல் பொது மக்கள்தாம் எச்ச ரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அரசும் போலீசும் பிரச்சாரம் செய்கின்றன. இவை சாதாரணக் கிரிமினல் குற்றங்கள் என்றாகி விட்ட நிலையில் கூலிக்குக் கொலைச் செய்வது, ஆட்களைக் கடத்திப் பணயக் கைதி களாக வைத்துப் பணம் பறிப்பது, போதை மருந்து, நவீன ஆயுதங்கள் கடத்துவது, ''பாதுகாப்புக் கட்டணங்கள்'' வசூலிப்பது, அரசு மற்றும் தனியார் நிலங்களைக் கையகப்படுத்துவது போன்ற கிரிமினல் வேலைகளையே தொழிலாகக் கொண்ட கிரிமினல் குற்றக் கும்பல்களும், அவற்றுக்கிடையிலான பழிவாங்கும் சங்கிலித் தொடர் கொலைகள், போலீசின் கண்முன்னே உயர்நீதி மன்றம் உட்பட எல்லா வழக் குமன்ற வளாகங்களுக்குள்ளேயே படுகொலைகள் - வன்முறை வெறியாட்டங்கள் இரவு-பகல், கிராமங்கள்-நகரங்கள் என்ற பாகுபாடின்றி அன்றாட நிகழ்வாகிவிட்டன.

இப்போது கிரிமினல் குற்றக் கும்பல்கள் - கூலிப் படைகளுக்கும் அரசியல் கட்சி கள் மற்றும் உயர் அதிகாரிகள் வரை போலீசுக்கும் உள்ள கூட்டும் உறவும் குறித்த செய்திகள் ஒன்றும் இரகசியமானவை அல்ல. ஆனால், பெரும் வங்கிகளின் கடன் வசூல், வீடு-வீட்டுமனைத் தொழில், சங்கிலித் தொடர் விற்பனைக் கடைகள், சினிமா தயாரிப்பு - திரையரங்குகள், சுயநிதிக் கல்லூரிகள், போக்குவரத்து நிறுவ னங்கள், பன்னாட்டு - ஏகபோகத் தொழில் நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் கூலிப் படைகளை வைத்துக் கொண்டிருக்கின்றன. மேற்படி கும்பல்களைத் தமது சம்பளப் பட்டியலில் வைத்துக் கொண்டுள்ளதோடு தொழில் ஒப்பந்தக்காரர்களாகவும் கொண்டுள்ளன.

கூலிப்படைகளை நம்பி அரசியல் நடத்தும் ஓட்டுக் கட்சிகளும் பிழைப்புவாதத் தில் மூழ்கிப் போயுள்ள அரசியலற்ற நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமே மேற்கண்ட யதார்த்த நிலையைக் கண்டு கொள்ளாமல் இருந்தன; ஆனால், கூலிப்படைகளின் கோரக் கொலைகளை நேருக்கு நேர் பார்க்கும் போதெல்லாம் அரசியலற்ற நடுத்தர வர்க்கத்தினர் அலறுகின்றனர். ''அமைதிப் பூங்கா'' சவடால்கள் மூலம் அரசியலற்ற இந்த நடுத்தர வர்க்கத்தினரின் ஓட்டுக்காக வேண்டி ஓட்டுக் கட்சித் தலைவர்கள் இப் போது கூலிப்படை - வன்முறைக் கலாச்சாரம் குறித்து கூப்பாடு போடுகின்றனர். ஆனால், போலீசுக்குக் கூடுதல் அதிகாரம் கொடுப்பதைத் தவிர வேறு தீர்வு எதுவும் இவர்களுக்கு கிடையாது. கிரிமினல் கும்பல்களை ஒடுக்குவதற்கென்று மராட்டிய மாநில அரசைப் பின்பற்றித் தனிச்சட்டம் கொண்டு வரவேண்டும் என்று போலீசு அதிகாரிகள் கோரி தமிழக முதல்வரும் அதை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால், நாட்டிலேயே மும்பைதான் கிரிமினல் குற்றக் கும்பல்களின் தலைநகரமாக இன்ன மும் விளங்குகிறது. குற்றக் கும்பல்களின் கூட்டாளிகளான போலீசு, கூடுதலாகக் கிடைக்கும் அதிகாரத்தையும் அப்பாவி மக்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தும். ●

www.padippakam.com

# நந்திகிராமம்:
# சி.பி.எம். கட்சியின் பாசிச வெறியாட்டம்



தீயிடப்பட்ட வீடு, சாம்பலான உடமைகள்... அவலத்தில் விவசாயக் குடும்பம்

**உ**ழைக்கும் மக்களின் அரசு என்று மார்தட்டிக் கொண்ட மே.வங்க 'இடதுசாரி' அரசு இன்று இரத்தக் கவிச்சி வீசும் பாசிச கொலைகார அரசாக நாடெங்கும் நாறிப் போயுள்ளது.

நந்திகிராமத்தில் மீண்டும் சி.பி.எம். கட்சியின் பாசிச கொலை வெறியாட்டம். 6-க்கும் மேற்பட்டோர் படுகொலை. நூற்றுக்கணக்கானோர் படுகாயம். 5,000-க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் நந்திகிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்டு சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்ட கொடூரம். விவசாயிகள் வீடுகள், உடமைகள், கால்நடைகள், பயிர்கள் அனைத்தையும் எரித்து சாம்பலாக்கிய சி.பி.எம். குண்டர்படையின் அட்டூழியம். மனித உரிமை-ஜனநாயக உரிமைகளை காலில் போட்டு மிதிக்கும் இப்பாசிச வெறியாட்டத்தை எதிர்த்த அறிவுத்துறையினர், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமூக ஆர்வலர்கள் மீது அடக்குமுறை; இக்கொடுஞ் செயல்களை மூடி மறைக்க கோயபல்சையும் விஞ்சும் அண்டப்புளுகள்; தகிடு தத்தங்கள்.

வர்க்க விரோதிகள், மக்கள் விரோதிகள், பாசிஸ்டுகள், கொலைகாரர்கள் என்று உழைக்கும் மக்களாலேயே குற்றம் சாட்டப்பட்டு காறி உமிழப்படுகிறது மே.வங்க 'இடதுசாரி' ஆட்சி. மறுகாலனியாதிக்கத்தின் கீழ் போலி கம்யூனிஸ்டுகள் எடுத்துள்ள பாசிச அவதாரம் இன்று நாடெங்கும் சந்தி சிரிக்கிறது.

மே.வங்கத்தின் ஹால்டியா வட்டாரத்தில் நிறுவப்படவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக விளைநிலங்களை இழக்கப் போகும் கிராமங்களில் ஒன்றுதான் நந்திகிராமம். விளைநிலங்களை ஆக்கிரமித்து விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராக இப்பகுதிவாழ் மக்கள் கடந்த ஓராண்டு காலமாகத் தொடர்ந்து போராடி வருகிறார்கள். சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவி தரகுப் பெருமுதலாளிகளுக்கும் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளுக்கும் சேவை செய்ய முடியாமல் நந்திகிராம மக்கள் தடையாக நிற்பதைக் கண்டு ஆத்திரமடைந்த சி.பி.எம். கட்சி, தனது குண்டர் படையை ஏவி கடந்த ஜனவரியில் இக்கிராம மக்கள் மீது கொலைவெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டது. ஜனவரி 6-ஆம் நாளன்று 250 பேருக்கும் மேலாகத் திரண்டுவந்து, நந்திகிராமம்-சோனாசுரா கிராம மக்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்திய சி.பி.எம். குண்டர்கள், நாட்டுத் துப்பாக்கியால் கண்டபடி சுட்டு 6 விவசாயிகளைக் கொன்று, பலரைப் படுகாயப்படுத்தினர்.

இக்கொலை வெறியாட்டத்தைத் தொடர்ந்து நந்திகிராம வட்டார விவசாயிகள், கொலைகார சி.பி.எம். கட்சிக் கிளை அலுவலகங்களைத் தீயிட்டுக் கொளுத்தியதோடு சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த ஆள்காட்டிகள், துரோகிகளை அவர்களது குடும்பத்தோடு சேர்த்து கிராமத்தை விட்டே வெளி



படிப்பகம்

www.padippakam.com

யேற்றினர். நந்திகிராமத்துக்கு வரும் சாலைகள்-பாலங்களைத் துண்டித்து போராட்டதைத் தொடர்ந்தனர். இப்பகுதியில் அரசு நிர்வாகம் முற்றாகச் செயவிழந்து முடமாகிப் போனது.

''நந்திகிராம அராஜகத்தை இனி மேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது'' என்று வெளிப்படையாகவே கொக்கரித்த சி.பி.எம். கட்சி கடந்த மார்ச் 14-ஆம் தேதியன்று 5,000-க்கும் மேற்பட்ட போலீசாரையும் சி.பி.எம் குண்டர்களையும் கொண்டு நந்திகிராமத்தைச் சுற்றி வளைத்து கொலைவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டது. இதில் 14 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். பல பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாயினர். இவ்வளவு அட்டூழியங்களுக்குப் பின்னரும் நந்திகிராம மக்களின் போராட்ட உறுதியைக் குலைக்க முடியவில்லை.



**சி.பி.எம். வெறியாட்டம்: சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ள நந்திகிராம மக்கள்.**

## நந்திகிராமப் படுகொலை: ''போலீசின் துப்பாக்கிச் சூடு சட்ட விரோதமானது!'' — உயர் நீதி மன்றத்தின் கண்டனத் தீர்ப்பு

கடந்த மார்ச் 14-ஆம் தேதியன்று ''நந்திகிராமத்தில் மே.வங்க போலீசு நடத்திய துப்பாக்கிச் சூடு முற்றிலும் சட்ட விரோதமானது'' என்று கொல்கத்தா உயர்நீதி மன்றம் கடந்த நவம்பர் 16-ஆம் தேதியன்று தீர்ப்பளித்துள்ளது. 172 பக்கங்களைக் கொண்ட அத்தீர்ப்பில், ''நந்திகிராம மக்கள் போலீசு தனது கடமையைச் செய்வதைத் தடுக்கவில்லை; வன்முறையில் ஈடுபடவில்லை; ஆத்திரமூட்டும் செயலில் இறங்கவில்லை; சமூக அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தலாக அவர்களது ஆர்ப்பாட்டம் அமையவில்லை. அம்மக்கள் கூட்டத்தைக் கலைப்பதற்கு இதர வழிமுறைகள் அனைத்தையும் கைவிட்டு, கொல்வதையே குறிக்கோளாகக் கொண்டு போலீசு செயல்பட்டுள்ளது. இம்மக்களை ஒடுக்க வேண்டும் என்ற நோக்கில் கண்மூடித்தனமாக போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதை எந்தச் சட்டத்தின்படியும் நியாயப்படுத்தவே முடியாது.

''துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவர்களைத் தூக்கிச்சென்று காப்பாற்ற முற்பட்டவர்கள் மீது போலீசு தடியடித் தாக்குதல் நடத்திய காட்டு மிராண்டித்தனத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 14 பேரின் குடும்பங்களுக்கும் படுகாயமடைந்த 162 பேருக்கும் மே.வங்க அரசு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும். இத்துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல் பற்றிய மையப் புலனாய்வுத் துறையின் (சி.பி.ஐ.) விசாரணையைத் தொடரவேண்டும்'' என்று நீதிபதிகள் குறிப்பட்டுள்ளனர்.

மேலும், ''நந்திகிராம மக்கள் போலீசை நோக்கி கையெறி குண்டுகளை வீசும் போது, கை தவறி அவர்கள் மீதே குண்டு விழுந்ததால்தான் 14 பேர் மாண்டனர்'' என்று போலி கம்யூனிச பாசிச அரசு கூறும் அண்டப்புளுகை இத்தீர்ப்பு நிராகரித்துள்ளது. நந்திகிராம மக்கள் நாட்டுத் துப்பாக்கிகளுடன் ஆயுதபாணியாக வந்து போலீசைத் தாக்கினர் என்ற 'இடதுசாரி' அரசின் கோயபல்சு புளுகையும் இத்தீர்ப்பு கண்டனம் செய்துள்ளது.

இத்தீர்ப்பைக் கேட்ட சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவரும், மே.வங்க 'இடதுசாரி' அரசின் அமைச்சருமான பினய் கோனார், ''நந்நிகிராமத்தில் ரௌடிக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த அவர்கள் மீது போலீசார் கங்கை நீரைத் தெளித்து, அவர்களுக்கு கீதோபதேசம் செய்ய வேண்டுமென்று இந்த நீதிபதிகள் எதிர்பார்க்கிறார்களா? வன்முறைக் கூட்டத்தின் முன் போலீசார் சட்டப் புத்தகத்தையா படித்துக் கொண்டிருக்க முடியும்?'' என்று பாசிஸ்டுகளுக்கே உரித்தான மொழியில் ஜனநாயக உரிமைகளின் மீது வெறுப்பைக் கக்கினார்.

1980-களில் தர்மபுரி-வட ஆற்காடு மாவட்டங்களில் நக்சல்பாரி புரட்சியாளர்கள் தேவாரம் தலைமையிலான போலீசு கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்டபோது, இதற்கெதிராக மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்த போது, ''நக்சல்பாரிகளை ஒடுக்க போலீசார் சட்டப் புத்தகத்தையா படித்துக் கொண்டிருக்க முடியும்?'' என்று இக்கொலை வெறியாட்டத்தை நியாயப்படுத்தினார் பாசிச எம்.ஜி.ஆர்.

கிளிப்பிள்ளையின் கூற்றாக பாசிச எம்.ஜி.ஆரின் அதே வார்த்தைகள்; கொலைவெறியாட்டத்தை நியாயப்படுத்தும் எம்.ஜி.ஆரின் அதே பாசிசத் திமிர். எம்.ஜி.ஆரின் பாசிச அரசியல் வாரிசாக தமிழகத்துக்கு ஒரு ஜெயா; மே.வங்கத்துக்கு ஒரு பினய் கோனார்!


படிப்பகம்

www.padippakam.com

இந்நிலையில், கடந்த அக்டோபர் மாத இறுதியில் நந்திகிராமத்தை மீண்டும் கைப்பற்றுவதற்கான கொலை காத் திட்டத்தை சி.பி.எம். கட்சி வகுத்துக் கொடுத்தது. போராடும் நந்தி கிராம மக்கள் மீது குண்டர் படையை ஏவி சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தி, அம்மக்களை வெளியேற் றுவது; ஆள்காட்டிகளாகவும் துரோகி களாகவும் செயல்பட்டதால் நந்தி கிராம மக்களால் விரட்டியடிக்கப்பட்ட சி.பி.எம்.கட்சியினரை மீண்டும் நந்தி கிராமத்தில் குடியமர்த்துவது; அதன் மூலம் தமது ஆதிக்கத்தை நிறுவி சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைப்பது என்கிற நோக்கத்துடன் ''நந்திகிராமத்தை விடுதலை செய் வது'' என்று இத்தாக்குதலுக்குப் பெயர் சூட்டப்பட்டது.



கட்சிக் கொடியைக் கைக்குட்டையாக்கித் தலையிலே கட்டிக் கொண்டு நந்திகிராமத்தில் 'வெற்றி' ஊர்வலம் நடத்தும் சி.பி.எம். குண்டர்கள்.

இதன்படி, ஹால்டியா வளர்ச்சி ஆணையகத்தின் தலைவரும் சி.பி.எம்.கட்சி எம்.பி.யுமான லட்சு மண்சேத் மற்றும் கேஜூரி வட்டாரக் கமிட்டிச் செயலரும் பஞ்சாயத்துத் தலைவருமான ஹிமாங்ஷுதாஸ் ஆகியோர் தலைமையில் கேஜூரி யிலுள்ள ஜனனி செங்கற்சூளையில் சி.பி.எம் கட்சிக் குண்டர்களைத் திரட்டி தாக்குதல் விளக்கக் கூட்டம் நடத்தப் பட்டது. இந்த செங்கற் சூளையிலிருந் துதான் நந்திகிராமத்தில் கடந்த மார்ச் 14 அன்று நடத்த கொலைவெறியாட் டத்துக்குப் பிறகு நடந்த சி.பி.ஐ. விசார ணையின் போது, வெடிகுண்டுகளும் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டு சி.பி.எம்.குண்டர்கள் கைது செய்யப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தச் செங்கற்சூளைதான் சி.பி.எம் கட்சியின் பயங்கரவாதப் பாசறை என்று இப்போது மீண்டும் நிரூபணமா கியுள்ளது. சதித்திட்டம் வகுக்கப்பட்ட பிறகு, இக்கூட்டத்தில் ''இன்குலாப் ஜிந்தாபாத்'' (புரட்சி ஓங்குக!) என்ற முழக்கத்துக்குப் பதிலாக, ''நந்திகிரா மத்தைச் சூறையாடு; அனைவரையும் கொன்றொழி; இல்லையேல் நீ கொல் லப்பட்டுவிடுவாய்'' என்று கட்சிக்குண் டர்கள் முழக்கமிட்டுள்ளனர்.

திட்டமிட்டபடியே, மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து சி.பி.எம்.குண் டர்களும் கூலிப்படையினரும் தனி வாகனங்களில் கொண்டு வரப்பட்டு ஜனனி செங்கற் சூளையில் பதுக்கி வைக்கப்பட்டனர்.

நவம்பர் 5-ஆம் தேதியிலிருந்து இக்குண்டர்படை தாக்குதலை நடத்தியது. நாட்டு வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், கண்ணி வெடிகளைக் கொண்டு தாக்குதல் நடத்திய இக்குண் டர்படை, நந்திகிராம மக்களில் ஒரு பிரிவினரை பணய கைதிகளாக்கி, அவர்களை மனிதக் கேடயமாக நிறுத்தி ஒவ்வொரு பகுதியாக தாக் குதலை நடத்தியது. இதனை எதிர்கொள்ள முடியாமல், நந்திகிராம மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தப்பியோடியதும், ஒவ்வொரு வீடா கப் புகுந்து சூறையாடிய பிறகு, அவ் வீடுகள், பயிர்கள் அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்திய சி.பி.எம். குண் டர்படை, ஒவ்வொரு பகுதியிலும் தமது கட்சிக் கொடியைக் கட்டி வைத்து நந்திகிராமத்தை 'விடுதலை' செய்தது. அதைத் தொடர்ந்து மோட்டார் சைக் கிள்களில் வந்த சி.பி.எம். ரௌடிகள் வெற்றி ஊர்வலங்களை நடத்தி வெறிக் கூச்சலிட்டனர். நவம்பர் 10-ஆம் தேதிவரை இப்பாசிச வெறியாட்டம் நடந்துள்ளது.

பசுமை குலுங்கும் நந்திகிராம வட் டாரமெங்கும் மரண ஓலம்; தீயிட்டு சாம்பலாகிக் கிடக்கும் வீடுகள், கருகி நிற்கும் பயிர்கள் என அப்பகுதியே மயான பூமியாகக் காட்சியளிக்கிறது. ஆக்கிரமிப்போரைப் போன்ற இத்தாக் குதலில் பச்சிளம் குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டு 6 பேர் கொல்லப் பட்டுள்ளதாக நாளேடுகள் குறிப்பிடு கின்றன. கொல்லப்பட்டோரின் பிணங்களை சி.பி.எம். குண்டர் படை உடனடியாக அகற்றி தடயங்களை அழித்து விட்டதால், கொல்லப்பட் டோரின் எண்ணிக்கை இன்னும் அதி கமாக இருக்கும் என்று அஞ்சப்படுகிறது.

உழுது பயிரிட்டு மே.வங்க மக்க ளுக்கு உணவளித்த நந்திகிராம விவசா யிகள் இன்று வீடு வாசலை இழந்து, சொந்த மண்ணிலிருந்து வெளியேற் றப்பட்டு அகதிகளாகி நிற்கிறார்கள். நந்திகிராமத்துக்கு அருகிலுள்ள பள்ளி, கல்லூரிகளில் அடைக்கலமா கியுள்ள இம்மக்கள் இன்று அடுத்த வேளை உணவுக்குக் கையேந்த வேண்டிய நிலையில் உள்ளனர். இம் மக்களுக்கு 'இடதுசாரி' அரசு உணவ ளிக்கக்கூட முன்வராமல் பழிவாங்கும் நிலையில், பல்வேறு அரசியல் கட்சி களும் தன்னார்வ அமைப்புகளுமே உணவும் மருத்துவ உதவிகளும் செய்து வருகின்றன.

போராடும் மக்களை அகதிகளாக்கி நந்திகிராமத்தை 'விடுதலை' செய்த பிறகு, இப்போது மத்திய ரிசர்வ் போலீசைக் குவித்து நந்திகிராம மக்களை அச்சுறுத்தும் சி.பி.எம். அரசு, நந்திகிராமத்தில் மீண்டும் சி.பி.எம்.கட் சியினரை குடியமர்த்தியுள்ளது. நந்தி கிராம மக்களால் வெளியேற்றப்பட்ட துரோகிகளும் ஆள்காட்டிகளும் மீண்டும் நந்திகிராமத்துக்குத் திரும்பி யதும், நந்திகிராமத்தில் இப்போது 'அமைதி' நிலவுவதாக சி.பி.எம் அரசு மார்தட்டிக் கொள்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

நந்திகிராமத்தில் சி.பி.எம் குண்டர்கள் தாக்குதல் நடத்துவதை அறிந்து, நவம்பர் 7-ஆம் தேதியன்று அங்கு உண்மை நிலவரத்தை அறியச் சென்ற நர்மதா பாதுகாப்பு இயக்கத் தலைவியான மேதாபட்கர் பாதி வழியிலேயே தடுத்து நிறுத்தப்பட்டு சி.பி.எம் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளார். வழக்குரைஞர்கள், பத்திரிக்கையாளர்கள், சமூக ஆர்வலர்களோடு போலீசு பாதுகாப்புடன் நந்திகிராமத்தை நோக்கி சென்ற அவரது வாகனம் கேபாஸ்பேரியா கிராமத்தின் அருகே செங்கொடி ஏந்திய சி.பி.எம். குண்டர்களால் தடுக்கப்பட்டது. போலீசார் சமரசம் பேசி, பின்னர் ஒதுங்கிக் கொண்டனர்.

''அந்த குண்டர்கள் எங்களது வாகனங்களை அடித்து நொறுக்கினர். எங்களைக் காரிலிருந்து வெளியே இழுத்துப் போட்டுத் தாக்கினர். எனது முடியையும் சேலையையும் பிடித்து இழுத்து முகத்திலே குத்தினர்'' என்று அந்த தாக்குதலைப் பற்றி மேதாபட்கர் அனைத்துப் பத்திரிகைகளுக்கும் பேட்டியளித்துள்ளார்.

நந்திகிராமத்தில் சி.பி.எம். கட்சி நடத்திய பாசிச வெறியாட்டத்தை எதிர்த்து மேதாபட்கரும் பல்வேறு மனித உரிமை அமைப்புகள், எழுத்தாளர்களும் கொல்கத்தாவில் உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தினர். அப்போராட்டத்தில் பிரபல எழுத்தாளர் மகாஸ்வேதா தேவி, திரைப்பட இயக்குனர் மிருணாள்சென் உள்ளிட்ட பல பிரமுகர்கள் பங்கேற்று இப்போலி கம்யூனிச ஆட்சியை ''பாசிச ஆட்சி'' என்று சாடினர்.

கொல்கத்தாவில் அரசு சார்பில் நடந்த 13-வது திரைப்பட விழாவைப் புறக்கணித்து, எழுத்தாளர்களும் கலைஞர்களும் அறிவுத்துறையினரும் மே.வங்க பாசிச ஆட்சியை எதிர்த்து நவம்பர் 11-ஆம் நாளன்று பேரணியை நடத்தினர். அப்பேரணிக்குத் திடீர் தடை விதித்த போலீசு, அவர்கள் மீது தடியடி நடத்தி விரட்டியது. இதை எதிர்த்து சாலை மறியல் - மனித சங்கிலி போராட்டத்தில் அவர்கள் இறங்கியதும், திரைப்பட நடிகையும் தயாரிப்பாளருமான அபர்ணாசென், பிரபல கவிஞர் ஷங்கோ கோஷ் உள்ளிட்டு அனைவரையும் போலீசு கைது செய்து லால்பஜார் போலீசு நிலையக் கொட்டடியில் அடைத்தது. இக்கைது நடவடிக்கையை தொலைக்காட்சிகள் படம் பிடித்து ஒளி பரப்பியதும், ஆயிரக்கணக்கான மக்கள் லால்பஜார் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அதன் பின்னரே 'இடதுசாரி' போலீசு இக்கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் விடுவித்தது.

நந்திகிராமத்தில் சி.பி.எம். கட்சியின் பாசிச வெறியாட்டத்தையும், உண்மையைக் கண்டறிய முற்பட்ட பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள் மீதான இடதுசாரி அரசின் தாக்குதலையும் கண்டு ''அதிர்ச்சியில் உறைந்துள்ளதாக''க் கூறி பிரபல

## குண்டர்கள்... குண்டுவெடிப்புகள்... அண்டப்புளுகுகள்

நந்திகிராமத்துக்கு அருகேயுள்ள பங்கபோரா பாலத்தருகே நவம்பர் 6-ஆம் தேதியன்று குண்டு வெடித்து இருவர் மாண்டு போயினர். உடனே, ''ஐயோ, பயங்கரவாதம்! நிலப் பாதுகாப்பு இயக்கத்தினர் மாவோயிஸ்டு பயங்கரவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர். வெளியிலிருந்து ஆயுதக் குழுக்களைக் கொண்டு வந்துள்ளனர். பதுங்குக் குழிகள் வெட்டப்படுகின்றன. கண்ணி வெடிகள் புதைக்கப்படுகின்றன. நவம்பர் 6-ஆம் தேதியன்று நடந்த கண்ணி வெடித் தாக்குதலில் 2 சி.பி.எம். தொண்டர்கள் கொல்லப்பட்டுள்ளனர்'' என்று அலறியது சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக்குழு.

அதே நேரத்தில், நவம்பர் 7-ஆம் தேதியன்று வெளியான வங்க நாளேடுகளில், மித்னாபூர் மாவட்ட போலீசு உயரதிகாரிகள், ''இது கண்ணிவெடியா, நாட்டு வெடிகுண்டா என்று தெரியவில்லை; மாவோயிஸ்டுகளின் கைவரிசையா என்று உறுதிப்படுத்த முடியவில்லை; விசாரணை நடக்கிறது'' என்று பேட்டியளித்தனர். மே.வங்க அரசின் உள்துறை செயலரும் ''விசாரணை நடத்தி வருகிறோம்'' என்று அறிவித்தார்.

போலீசும் உள்துறை செயலரும் விசாரணை நடப்பதாகக் கூறும் இக்குண்டுவெடிப்பு விவகாரத்தில், மாவோயிஸ்டுகள்தான் குண்டு வைத்தார்கள் என்று சி.பி.எம். கட்சித் தலைமைக்கு எப்படித் தெரிந்தது? அதற்கான ஆதாரங்கள் என்ன? பங்கபோரா பாலம் மற்றும் அதையொட்டியுள்ள மன்சிங்பெரா கிராமத்தில் சி.பி.எம்.மின் கைவலுவாக உள்ள நிலையில் அங்கு எப்படி மாவோயிஸ்டுகள் ஊடுருவ முடியும்? அதுவும் அப்பகுதியில் பெருமளவு போலீசு குவிக்கப்பட்டுள்ள நிலையில் மாவோயிஸ்டுகள் எப்படி குண்டு வைக்க முடியும்?

உண்மையில், பங்கபோரா பாலத்தருகே குண்டு தயாரிப்பில் ஈடுபட்டு எதிர்பாராத விபத்துக்குள்ளாகி சி.பி.எம்.குண்டர்களும் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக விரோத கூலிப்படையினரும் தாம் மாண்டு போயுள்ளனர். நந்திகிராமத்தில் தாக்குதல் தொடுப்பதற்காகவே இக்குண்டு தயாரிப்புகள் நடந்துள்ளன. இதே போல கேஜூரி வட்டாரத்திலுள்ள ஷேர்கான்சவுக் கிராமத்திலும் சி.பி.எம். குண்டர்கள் நாட்டு வெடிகுண்டுகள் தயாரித்தபோது விபத்துக்குள்ளாகி மாண்டு போயுள்ளனர். நக்சல்பாரிகள், மாவோயிஸ்டுகள் என்றால் வன்முறையாளர்கள், பயங்கரவாதிகள் என்று ஆளும் வர்க்கமும் அதன் ஊடகங்களும் அவதூறு பிரச்சாரம் செய்து வருவதைச் சாதகமாக்கிக் கொண்டு, மாவோயிஸ்டுகள் மீது பழியைப் போட்டு தனது பயங்கரவாதத்தை மூடி மறைக்க எத்தனிக்கிறது, சி.பி.எம். கட்சி.

ஈராக் மீதான ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த ஈராக்கில் மனிதகுல பேரழிவுக்கான ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பயங்கரவாத புஷ் அண்டப்புளுகை அவிழ்த்து விட்டார். நந்திகிராமத்தின் மீதான ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த, மாவோயிஸ்டுகள் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தியதாக பயங்கரவாத சி.பி.எம். கட்சி அண்டப்புளுகை அவிழ்த்து விடுகிறது. அண்டப்புளுகு, ஆகாசப்புளுகுகளுக்கு உலக மேலாதிக்கப் பயங்கரவாதி புஷ் என்றால், அவரது உண்மையான வாரிசுகள் தாங்கள்தான் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டனர், சி.பி.எம். கட்சியினர்.



படிப்பகம்

www.padippakam.com



''கொலைகார புத்ததேவே பதவி விலகு!'' - சி.பி.எம். கட்சியின் பாசிச வெறியாட்டத்தை எதிர்த்து நவம்பர் 14 அன்று கொல்கத்தா நகரை உலுக்கிய பேரணி.

வரலாற்றாசிரியர் சுமித் சர்க்கார், ஆவணப்படத் தயாரிப்பாளர் ஆனந்த் பட்வர்த்தன், உச்சநீதிமன்ற வழக்குரைஞர் பிரசாந்த் பூஷண், பேராசிரியர் மனோரஞ்சன் மொகந்தி, பத்திரிகையாளர் பிரஃபுல் பித்வாய் உள்ளிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட அறிவுத்துறையினர் கையெழுத்திட்டு நவம்பர் 13-ஆம் தேதியன்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். அதில், ''நந்திகிராமத்தில் காட்டுமிராண்டித்தனமான வன்முறைக் கட்டவிழ்த்து விட்டு சி.பி.எம் குண்டர்களும் சமூக விரோதிகளும் கூட்டுச் சேர்ந்து வெறியாட்டம் போட்டுள்ளனர். நந்திகிராம மக்களுக்குப் பாடம் புகட்டவும், மீண்டும் நந்திகிராமத்தைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தவும் திட்டமிட்டு நடந்த இக்கொலை வெறியாட்டத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். சி.பி.எம் கட்சி மீது ஜனநாயக சக்திகள் வைத்திருந்து நம்பிக்கை அனைத்தையும் இக் கொலைவெறியாட்டம் தகர்த்தெறிந்து விட்டது. நந்திகிராம மக்கள் அனைத்து உடைமைகளையும் இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு உணவும் மருத்துவ உதவியும் செய்யக் கூட இடது சாரி அரசு முன்வரவில்லை. மனித உரிமை இயக்கத்தினரும் சமூக ஆர்வலர்களும் சி.பி.எம் குண்டர்களாலும் போலீசாராலும் தாக்கப்பட்டுள்ளதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். நாங்கள் நந்திகிராம மக்களுக்கு என்றும் ஆதரவாக நிற்போம்'' என்று மே.வங்க பாசிச ஆட்சியைச் சாடியுள்ளனர்.

இது தவிர, மே.வங்கத்தின் அனைத்து பிரிவு உழைக்கும் மக்களும் பல்வேறு அமைப்புகளின் தலைமையில் போலிகம்யூனிச பாசிச ஆட்சிக்கு எதிராக தொடர்ந்து பேரணிகள்-ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். இவற்றுக்கெல்லாம் சிகரமாக கடந்த நவம்பர் 14-ஆம் நாளன்று கொல்கத்தா நகரமே குலுங்கும் வகையில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு நந்திகிராமத்தில் சி.பி.எம். கட்சி நடத்திய பாசிச வெறியாட்டத்தை எதிர்த்து மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். சி.பி.எம். கட்சியின் கொலைவெறியாட்டம் நாடெங்கும் அம்பலப்பட்டுப் போயுள்ள பின்னரும், அக் கட்சித் தலைமை பாசிஸ்டுகளுக்கே உரித்தான கோயபல்சு புளுகுடன் எதிப்பிரச்சாரம் செய்து வருகிறது.

நந்திகிராமத்தில் நடந்துள்ள பாசிச பயங்கரவாத வெறியாட்டங்கள், 'நக்சல்பாரி பயங்கரவாதி'களுக்கு எதிரான போராட்டத்தில் நடந்த விபரீதங்களோ, உணர்ச்சிவசப்பட்ட கட்சி ஊழியர்களின் அத்து மீறிய அசம்பாவிதங்களோ அல்ல. இதே பாணியில்தான் சட்டிஸ்கர் மாநிலத்தில் மறுகாலனியச் சூறையாடலுக்கு எதிராகப் போராடிவரும் பழங்குடியின மக்கள் மீதும் பயங்கரவாத தாக்குதல் ஏவிவிடப்பட்டுள்ளது. ஆட்சியாளர்களால் கட்டியமைக்கப்பட்டு தீனிபோட்டு வளர்க்கப்படும் சல்வாஜூடும் எனும் குண்டர்படை, தாதுவளம் நிறைந்த பகுதிகளிலுள்ள பழங்குடியினர் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தி, அவர்களது மண்ணிலிருந்து வெளியேற்றி அகதிகளாக்குகிறது. சல்வாஜூடும் குண்டர் படையைக் கொண்டு சட்டிஸ்கர் அரசு நடத்திவரும் இப்பயங்கரவாதத்தை மூடிமறைக்க, நக்சல்பாரி பீதியூட்டி பெருங்கூச்சல் போடுகிறது.

நந்திகிராமத்திலும் அதே வழியிலான பயங்கரவாத வெறியாட்டம். சல்வாஜூடும் படைக்குப் 'பதிலாக சி.பி.எம். கட்சியின் குண்டர் படை. சட்டிஸ்கரைப் போலவே நந்திகிராமத்திலும் மண்ணின் மைந்தர்கள் சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டு அகதிகளாக்கப்படும் கொடூரம். சட்டிஸ்கரைப் போலவே நந்திகிராமத்திலும் இப்பயங்கரவாதத்தை நியாயப்படுத்த நக்சல்பாரி பீதியூட்டல்கள். ஒரேயொரு வேறுபாடு - சல்வா ஜூடும் குண்டர்படை செங்கொடி ஏந்திக் கொண்டு இத்தகைய பாசிச பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துவதில்லை.

மறுகாலனியாக்கத்தின் கீழ் புரட்சி சவடால் அடித்துக் கொண்டே சந்தர்ப்பவாதிகளாகவும் துரோகிகளாகவும் வலம் வந்து கொண்டிருந்த போலி கம்யூனிஸ்டுகள், உழைக்கும் மக்களின் எதிரிகளாகவும் பாசிச பயங்கரவாதிகளாகவும் சீரழிந்துவிட்டதை நந்திகிராமத்தில் நடந்துள்ள வெறியாட்டங்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டன. மறுகாலனியாக்கத்தின் விசுவாச அடியாட்படையாகச் சீரழிந்துவிட்ட இப்பாசிசக் கட்சியை புரட்சிகர-ஜனநாயக சக்திகள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். இக்கட்சியிலும் அதன் தலைமையிலான மக்கள் திரள் அமைப்புகளிலுமுள்ள புரட்சியை நேசிக்கும் அணிகள் உடனடியாக கலகத்தில் இறங்கி பாசிஸ்டுகளாகச் சீரழிந்து விட்ட துரோகத் தலைமையைத் தூக்கி எறிய வேண்டும். இத்தனைக்கும் பிறகும் ஒருவர் இப்பாசிசக் கட்சியில் இன்னமும் நீடித்தால், ஒன்று அவர் விவரம் தெரியாத ஏமாளியாக இருக்க வேண்டும்; அல்லது பாசிசத்துக்குப் பல்லக்குத் தூக்கும் பிழைப்புவாதியாகத்தான் இருக்க முடியும்!

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# வாச்சாத்தி:

# நிவாரணம்தான் நீதியா?



போலீசு மிருகங்களால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்ட பெண்கள்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள வாச்சாத்தி கிராமத்தைச் சேர்ந்த பழங்குடி இன மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு, பதினைந்து ஆண்டுகள் கழித்து நிவாரணம் கிடைத்திருக்கிறது.

சந்தன மரக் கடத்தலைத் தடுப்பது, வீரப்பனைப் பிடிப்பது என்ற பெயரில் தமிழக போலீசு நடத்தியுள்ள எத்தனையோ அட்டூழியங்களில், அரசு பயங்கரவாதத் தாக்குதல்களில் வாச்சாத்தி சம்பவமும் ஒன்று.

வாச்சாத்தி பழங்குடியினர் சந்தன மரக் கடத்தில் ஈடுபடுவதாக வதந்தியைப் பரப்பிய தமிழக போலீசும், வனத்துறையும், 1992-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 'தேடுதல் வேட்டை' நடத்த வாச்சாத்திக்குள் புகுந்தன.

இவ்வேட்டையின்பொழுது, ஆண்-பெண்-குழந்தை என்ற வேறுபாடின்றி அப்பழங்குடி இன மக்கள் அடித்து நொறுக்கப்பட்டனர்; பலரின் கை-கால் எலும்புகள் முறிக்கப்பட்டன. அவர்கள் சேமித்து வைத்திருந்த தானியங்களில் கண்ணாடித் துண்டுகள் கலக்கப்பட்டன. குடிநீருக்குப் பயன்பட்டு வந்த கிராமக் கிணற்றில் எண்ணெய் கொட்டப்பட்டு பாழடிக்கப்பட்டது.

ஆண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு, ஒருவரின் சிறுநீரை மற்றவர் குடிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். பழங்குடி இனப் பெண்களுள் அழகான, இளமையான 18 பெண்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு, அப்பெண்களைப் பல போலீசு மிருகங்கள் ஒருவர் மாற்றி ஒருவர் என கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தினர். மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்த இச்சித்திரவதைக்குப் பின் அப்பழங்குடியினர் மீது கொலை வழக்கு உட்பட பல்வேறு பொய் வழக்குகள் போடப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தமிழ்நாடு மலைவாழ் சங்கத்தின் ஆதரவோடு, வாச்சாத்தி பழங்குடியினர் கடந்த பதினைந்து ஆண்டுகளாக விடாப்பிடியாகப் போராடியதால், நடந்த அநீதிக்கு நிவாரணமாக 34 இலட்ச ரூபாயை வழங்கியிருக்கிறது, தமிழக அரசு.

எனினும், இவர்கள் மீது போடப்பட்ட பொய் வழக்குகள் திரும்பப் பெறப்படவில்லை. அதேசமயம், இப்பழங்குடி இன மக்கள் மீது சாதிவெறியோடு தாக்குதல் நடத்திய 269 போலீசு-வனத்துறை மிருகங்கள் மீதான வழக்கோ, இன்னும் விசாரணை கட்டத்தையே தாண்டவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் தீண்டத்தகாத பழங்குடியினர் என்பதாலேயே வழக்கு விசாரணை இழுத்தடிக்கப்படுகிறது.

பதினைந்து ஆண்டு காலப் போராட்டத்திற்குப் பிறகு வழங்கப்படும் நிவாரணம்.



இந்திய 'ஜனநாயக' அமைப்பில் ஒரு அநீதிக்கு நிவாரணம் பெறவே 15 ஆண்டுகள் போராட வேண்டும் என்றால், நீதி கிடைப்பதற்கு...?

● அறிவு



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ச்செல்வன் படுகொலையும் பாசிச ஜெயா-காங்கிரசின் வக்கிரமும்

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளரான பிரிகேடியர் சுப.தமிழ்ச்செல்வனின் படுகொலை உலகெங்குமுள்ள ஈழத் தமிழர்களையும் தமிழீழ விடுதலை ஆதரவாளர்களையும் பேரதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கடந்த நவம்பர் 2-ஆம் நாளன்று அதிகாலையில் கிளிநொச்சி பகுதியில் சிங்கள இனவெறி இராணுவ விமானங்களின் குண்டுவீச்சுத் தாக்குதலில் தமிழ்ச்செல்வன் மற்றும் 5 புலிகள் இயக்கப் போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

2002-ஆம் ஆண்டில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு நடத்தப்பட்ட அனைத்து அமைதிப் பேச்சு வார்த்தைகளிலும் கலந்து கொண்டு, தமிழீழத்திலிருந்து பேச்சுவார்த்தைக் குழுவுக்குத் தலைமையேற்றவர்தான் தமிழ்ச்செல்வன். புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகராக இருந்த ஆண்டன் பாலசிங்கம் உடல்நலமில்லாத காலத்திலிருந்தே இலங்கை அரசுடனும் அனைத்துலக அமைப்புகளுடனும் அமைதிப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்த அவர், பாலசிங்கத்தின் மறைவுக்குப் பிறகு புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவராகி, அதிகாரப் படிநிலையில் இரண்டாமிடத்துக்கு வந்தார்.


நார்வே நாட்டுப் பிரதிநிதிகளை நடுவராகக் கொண்டு இலங்கை அரசுடன் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தி வந்தவரையே இலங்கை இராணுவம் குண்டு வீசிக் கொன்றிருப்பதன் மூலம் சமாதானத்திற்கான அனைத்து சாத்தியக் கூறுகளையும் இலங்கை அரசு குழிதோண்டிப் புதைத்து விட்டது. ''அமைதிப் பேச்சுவார்த்தைகளில் பங்கெடுத்து அமைதிப் புறாவாக இருந்த தமிழ்ச்செல்வனை கோரமாகக் கொன்றதிலிருந்து இலங்கை அரசு போரைத்தான் விரும்புகிறது. அதற்கு நாங்கள் சரியான பதிலடி கொடுப்போம்'' என்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிவித்திருக்கிறார்.

ஈழத் தமிழர்களை மட்டுமின்றி, உலகின் பல நாட்டு அரசியல் தலைவர்களையும் தமிழ்ச்செல்வன் மரணம் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான தலைவர் ராபர்ட், தமிழ்ச்செல்வன் படுகொலையை வன்மையாகக் கண்டித்துள்ளார். நார்வே, கனடா நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் நடத்திய வீர வணக்கக் கூட்டங்களில் அந்நாடுகளின் அரசியல் தலைவர்கள் பலர் கலந்து அஞ்சலி செலுத்தியதோடு, சிங்கள இனவெறி பாசிச அரசையும் கடுமையாகச் சாடியுள்ளனர்.

தமிழகத்தில் பெரியார் தி.க. உள்ளிட்டு தமிழீழ ஆதராவாளர்களும் விடுதலைச் சிறுத்தைகளும் தமிழ்ச்செல்வனுக்கு வீரவணக்கக் கூட்டங்களை நடத்தியதோடு, சிங்கள பேரினவாத அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான கருணாநிதியும் ''செல்வா நீ எங்கு சென்றாய்'' என்ற தலைப்பில் இரங்கல் கவிதை எழுதி அரசு செய்திக் குறிப்பாக வெளியிட்டார்.

உடனே பாசிச ஜெயா, ''இந்திய அரசால் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்த பிரமுகரின் மரணத்துக்கு ஒரு மாநில முதல்வர் கவிதாஞ்சலி எழுதியிருப்பது அரசியல் சட்டத்திற்கு எதிரானது. மத்திய அரசு உடனடியாக இந்த விவகாரத்தில் தலையிட்டு கருணாநிதி அரசைக் கலைக்க வேண்டும்'' என்று அறிக்கை விட்டார். அதைத் தொடர்ந்து துக்ளக் சோ-வும் பார்ப்பன பா.ஜ.க. கும்பலும் இதற்கு ஒத்தூதின.

**சிங்கள இனவெறி இராணுவத்தின் குண்டு வீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்ட புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன்.**



''ராஜீவ் காந்தியைக் கொன்றவர்களின் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இறங்கற்பா பாடுவது எந்த விதத்திலும் நியாயம் கிடையாது. தமிழ்ச்செல்வன் அமைதித் தூதுவராக இருந்தவர் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது'' என்று சீறினார் தமிழக காங்கிரசுத் தலைவர்களில் ஒருவரான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன். காங்கிரசு தலைவர் கிருஷ்ணசாமியும் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். ''தேசத்துரோகி கருணாநிதி முதல்வராக நீடிப்பதை மத்திய அரசு கண்டு கொள்ளா விட்டால் உச்சநீதி மன்றம் செல்வோம்'' என்று சாமியாடினார் பாசிச ஜெயா. ''இலங்கையில் கொல்லப்பட்டது ஒரு தமிழன். என் உடம்பில் ஓடுவது தமிழ் ரத்தம். அதனால் தான் இரங்கல் தெரிவித்தேன்'' என்று பதிலளித்தார் கருணாநிதி. ஒண்ட வந்த பிடாரி ஜெயாவோ, ''நானும் தமிழச்சிதான்'' என்று லாவணி பாடினார்.

இது வெறும் லாவணி அல்ல; இந்த விவகாரத்தை வைத்து தி.மு.க. ஆட்சியைக் காவு கேட்பதற்கான வாய்ப்பாக கருதியே பாசிச ஜெயா கும்பல் பெருங்கூச்சல் போடுகிறது. ஈழ விடுதலையை ஆதரிப்பதும் சிங்கள இனவெறி பாசிச அரசை எதிர்ப்பதும் கூட தேச விரோதச் செயலாகச் சித்தரித்து, பிரிவினைவாத-பயங்கரவாத பீதியூட்டி 90-களில் நடந்தது போன்ற ஒரு பாசிச ஆட்சியை மீண்டும் நிறுவுவதே பார்ப்பன ஜெயா கும்பலின் நோக்கமாக உள்ளது. இதற்கு பார்ப்பன பத்திரிக்கைகள் தூபம் போட, காங்கிரசு கயவாளிகள் பேயாட்டம் போடத் தொடங்கிவிட்டனர்.

''இன்று தமிழ்ச்செல்வன்; நாளை பிரபாகரன்'' என்று முழக்க தட்டியை வைத்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரசுத் . தலைவரான கதிர்வேல், தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டதற்கு



படிப்பகம்

www.padippakam.com

வக்கிரமாக இனிப்புகள் வழங்கிக் கொண்டாடியுள்ளார். இன்னும் பல இடங்களில் காங்கிரசு கழிசடைகள் தமக்குள் இனிப்புகள் வழங்கி குதூக லித்துள்ளன. கடந்த நவம்பர் 24 அன்று கோபியில் நடந்த காங்கிரசு ஊழியர் கூட்டத்தில் பேசிய இளங்கோவன், தமிழ்ச்செல்வனுக்கு வீரவணக்கம் செலுத்திய அமைப்புகளையும் இரங் கற்பா எழுதிய கருணாநிதியையும் கடு மையையாக சாடி ஊழியர்களை உசுப் பேற்றியுள்ளார்.

பின்னர், காரில் ஏறிச்சென்ற காங்கி ரசு குண்டர்படை, முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏ.வான வெங்கிடுவின் டீக் கடையில் தமிழ்ச்செல்வனுக்கு வீர வணக்கம் செலுத்தி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியைக் கிழித்தெறிந்தது. தி.மு.க.வினரும் பெரியார் தி.க.வின ரும் இதை எதிர்க்க, அவர்களைத்தாக்கி விட்டு இக்கும்பல் தப்பியோடி யுள்ளது. கீழ்த்தரமான இச்செயலைக் கண்டு ஆத்திரமடைந்த தன்மான முள்ள இளைஞர்கள் கோபியில் இளங் கோவனின் கொடும்பாவியை முச்சந்தி யில் தொங்க விட்டனர். இதை எதிர்த்து கோபியிலும் சென்னையிலும் காங்கி ரசு கழிசடைகள் கண்டன ஆர்ப்பாட் டங்களை நடத்தியுள்ளன.

ஈழ ஆதரவாளர்களின் செயல்பாடு கள், பாசிச ஜெயா-காங்கிரசு கும்பல் விரித்துள்ள சதித்திட்டத்திற்கு வலுவூட் டும் வகையில் செல்வதைக் கண்டு கரு ணாநிதி பீதியடைந்தார். தனது ஆட்சி யைக் காப்பாற்றிக் கொள்ள, ''விடுத லைப் புலிகள் உட்பட தடை செய்யப் பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக ஊர் வலம், பொதுக்கூட்டம், உள்ளிருப்பு கூட்டம், இரங்கல் கூட்டங்கள் நடத்து பவர்கள்; பிரசுரம், சுவர் விளம்பரம் செய்பவர்கள்; ஆர்ப்பாட்டம், உருவப் பொம்மை எரித்தல், சாலை மறியல் போராட்டங்களில் ஈடுபடும் அமைப்பு கள் மற்றும் தனிநபர்கள் மீது சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட் டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று போலீசு தலைமை இயக்குனர் மூலம் எச்ச ரிக்கை விடுத்துள்ளார். ராமன் பாலம் விவகாரத்தில் சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டு பின்வாங்கியதைப் போலவே இப்போதும் பார்ப்பன - பாசிச கும்பலுக்கு அஞ்சி பம்மிப் பதுங்குகிறார்.



இறுதி அஞ்சலி செலுத்தும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

காங்கிரசு தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, ஈழ மக் களை கொன்றொழித்து வரும் இலங்கை அரசுக்கு ரேடார் சாதனங்க ளையும் ஆயுதங்களையும் வழங்கி யுள்ளது. போரினால் வாழ்விழந்த ஈழத்தமிழர்களுக்கு உணவும் மருந்துப் பொருட்களையும் செஞ்சிலுவைச் சங் கத்தின் மூலம் அனுப்பும் முயற்சிகளை யும் தடுத்து வருகிறது. பதவிக்காக இக் கூட்டணி அரசில் பங்கேற்கும் கருணா நிதி, இந்திய அரசின் இக்கேடு கெட்ட கொள்கைகளுக்கு எதிராக வாயே திறப்பதில்லை. தமிழன், தமிழினம், தன்மானம் என்றெல்லாம் சவடால் அடிக்கும் கருணாநிதி, வீரமணி, இராம தாசு முதலானோர் தம்மையும் தமது ஆட்சியையும் சொத்துக்களையும் பாதிக்காத வகையில் மிகவும் பொது வான சவடால் அறிக்கைகளோடு பதுங்கி விடுவார்கள்; மீறினால் ஒடுக்க வும் செய்வார்கள் என்பதற்கு அரசு வெளியிட்டுள்ள எச்சரிக்கையே சான்று கூறப் போதுமானது.

பாசிச காங்கிரசு கயவாளிகளின் வக்கிரம்: தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டதை இனிப்பு வழங்கிக் கொண்டாடும் காங்கிரசு தலைவர் கதிர்வேல்.



ஈழ ஆதரவாளர்களில் ஒரு பிரிவி னர் இன்னமும் இந்திய அரசின் தய வில் ஈழ விடுதலையைச் சாதிக்க முடி யும் என்று நம்புகின்றனர். ஆனால் இந் திய அரசோ சிங்கள பேரினவாத பாசிச அரசுக்கு மறைமுகமாக உதவி செய்து வருவதோடு, ஈழ விடுதலைக்கு ஆதர வாகக் குரல் கொடுக்கும் தமிழர்களின் நியாயவுரிமையைக் கூட பயங்கர வாதப் பீதியூட்டி ஒடுக்கி வருகிறது. அதற்கு தி.மு.க. அரசும் துணை நிற்கிறது.

காந்தியைக் கொன்ற கோட்சே வுக்கு நினைவு தினமும், ஹிட்லருக்கு வீரவணக்கமும் செலுத்துகிறான் ஆர்.எஸ்.எஸ்.காரன். அதை அனும திக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர் மரணத்திற்கு அஞ் சலி செலுத்தக்கூடாதாம். இதுதான் தேசியம்!

● தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# “ஆர்.எஸ்.எஸ்.காரனும் தமிழன்தான்!”

## — ‘மாவீரன்’ நெடுமாறன் பரப்பும் புது சித்தாந்தம்

உலகத் தமிழர் பேரமைப்பு எனும் ‘தமிழர்’ அமைப்பு, கடந்த அக்டோபர் 28-ஆம் தேதியன்று தமிழர் தொழில் வணிகச் சிறப்பு மாநாட்டை திருப்பூரில் நடத்தியது. இந்தப் பேரமைப்பின் தலைவரான ‘‘மாவீரன்’’ பழ.நெடுமாறன் இம்மாநாட்டைத் தலைமையேற்று நடத்தினார்.

இந்த மாநாட்டில் ஆர்.எஸ்.எஸ். அரைடவுசர் அண்ணாச்சி பொள்ளாச்சி மகாலிங்கத்துக்கு ‘‘உலகப் பெருந் தமிழர்’’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆர்.எஸ்.எஸ்.-இன் பார்ப்பனிய நச்சுக் கருத்துக்களைக் கொண்ட ஒரு பிரசுரம், மகாலிங்கம் வழங்கிய ஏற்புரை என்ற பெயரில் இலவசமாக வழங்கப்பட்டது.

அந்தப் பிரசுரத்தில், ‘தமிழ் ஆய்வு என்ற கட்டை வண்டியில் ஏறிக் கொண்டு போனால், 800 பி.சி. (கி.மு.) வரைதான் போகமுடியும். சமஸ்கிருத ஆய்வு என்ற காரில் ஏறிக் கொண்டு போனால் 8000 பி.சி. (கி.மு.) வரை போக முடியும்’’ என்றும், ‘‘தமிழர்களில் ஒரு பிரிவினர் வடக்கிலிருந்து தெற்கே வந்தார்கள்’’ என்றும் ‘‘நாம் வாழும் காலம் திரேதாயுகம்’’ என்றும் அதற்கு பார்ப்பன சப்தரிஷி பஞ்சாங்கத்திலிருந்து கணக்குப் போட்டுக் காட்டியும், பார்ப்பன புரோகிதர்கள் சங்கல்பம் செய்யும்போது சொல்கிற மந்திரத்தை ஆதாரம் காட்டியும் எழுதப்பட்டுள்ளது. தமிழா நீ வந்தேறி; உன் மொழி, வேசி மொழி; சமஸ்கிருதமே உயர்ந்த மொழி - இதுதான் அந்தப் பிரசுரத்தின் சாரம். இதையே பொள்ளாச்சி மகாலிங்கம் தனது ஏற்புரையாகப் பேசியுள்ளார்.

கோவையில் இந்து மதவெறி எனும் நச்சுமரம் வளர உரமிட்டவர்தான் இந்த ‘‘அருட்செல்வர்’’ மகாலிங்கம். ‘‘ஓம் சக்தி’’ எனும் இந்து பக்தி-ஆன்மீகப் பத்திரிகையின் நிறுவனரும் புரவலருமாக இருந்து ஆர்.எஸ்.எஸ்.-க்கு சேவை செய்து வருபவர். ‘‘நமது வேத மந்திரங்கள், உபநிடதங்கள் - சமஸ்கிருதத்தில்தான் உள்ளன. ஆகவே சமஸ்கிருதம் ஒரு மொழி மட்டுமல்ல; அது நமது கலாச்சாரத்தின் சின்னம்’’ என்று அப்பத்திரிகையில் தொடர்ந்து எழுதியவர். பார்ப்பனியத்தின் மீதும் வருணாசிரமத்தின் மீதும் மாறாத நம்பிக்கை கொண்டவர். பொள்ளாச்சியில் அவருடைய கட்டுப்பாட்டிலுள்ள மாரியம்மன் கோயிலில் வழக்கமாக இருந்து வந்த ‘சூத்திர’ பூசாரிகளை மாற்றிவிட்டு பார்ப்பன பூசாரிகளை அமர்த்தியவர். பொள்ளாச்சி வட்டாரத்தில் நடைபெறும் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்புகளுக்கு காக்கி அரைடவுசருடன் சென்று நிதியுதவியும் செய்து வருபவர். எல்லாவற்றுக்கும் மேலாக, கோக்-பெப்சி ஆகிய அமெரிக்க மூத்திரங்களுக்கு கோவை, ஈரோடு மாவட்ட ஏஜெண்டாகச் செயல்படுபவர். கவுண்டர் சாதிக்காரன் கரும்பு விவசாயியாக இருந்தாலும், கரும்புக்கு அடிமாட்டு விலைபேசி பட்டை நாமம் போடும் சர்க்கரை ஆலை முதலாளிதான், இந்த ‘‘சாதிப் பற்றில்லாத அருட்செல்வர்’’ மகாலிங்கம்.

பார்ப்பன - ஆர்.எஸ்.எஸ்.-இன் பாதுகாவலரும் சமஸ்கிருதமே நமது கலாச்சார சின்னம் என்று முழங்கிக் கொண்டு தமிழை இழிவுபடுத்தியவருமான இந்த பெருமுதலாளிக்கு உலகப் பெருந்தமிழர் விருது! இந்த வெட்கக்கேட்டிற்கு ஒரு மாநாடு! அதற்கு ஒரு வரவேற்புக் குழு. அந்த வரவேற்புக் குழுவின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு, அதில் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்று, சுவரொட்டி - சுவரெழுத்து விளம்பர வேலைகளைச் செய்து ‘புரட்சிப் பணி’யாற்றியுள்ளனர். இம்மாநாட்டில் தமிழால் வயிறு வளர்க்கும் பல அறிஞர்களும், அறிஞர் இயக்கத்தினரும் உலகப் பெருந்தமிழர் விருது பெற்ற பொள்ளாச்சி மகாலிங்கத்தை கல்வித் தந்தை, வள்ளல், தமிழ் ஆய்வாளர், தொழிற்துறை முன்னோடி என்றெல்லாம் துதி பாடினரே தவிர, அவர் ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர் என்றோ,

‘‘இது நம்ம ஆளு’’: இந்துவெறிக் கும்பலின் புரவலருக்கு ‘உலகப் பெருந்தமிழர்’ விருது வழங்கும் நெடுமாறனும், வைகோவும்.





படிப்பகம்

www.padippakam.com

தமிழை இழிவுபடுத்தி சமஸ்கிருதத்தை உயர்த்திப் பிடிப்பவர் என்றோ குறிப்பிடவில்லை.

இப்படி எல்லோரும் மகாலிங்கத்துக்கு முதுகு சொறிந்து கொண்டிருந்த நிலையில், ஆதித்தமிழர் பேரவையைச் சேர்ந்த நீலவேந்தன், ''சேரித் தமிழன் இன்னமும் அவலத்தில் உழலும்போது, எந்தத் தமிழனின் தொழில்-வணிகச் சிறப்பைப் பற்றிப் பேச முடியும்'' என்று கேட்டு, சாதி ஒழிப்பின் அவசியத்தை வலியுறுத்திய அவர், ''இந்த மேடையிலேயே தமிழை இழிவுபடுத்தி சமஸ்கிருதத்தை உயர்த்திப் பிடித்தவருக்கு உலகப் பெருந்தமிழர் விருது வழங்குவது தகுதியுடையதல்ல'' என்றும் ''பொள்ளாச்சியில் அரசுக் கல்லூரி வந்தால் தனது கல்வி வியாபாரம் பாதிக்கப்படும் என்பதால் அதைத் தடுத்து, சேரி இளைஞர்களோடு சேர்த்து தன் சாதி ஏழை இளைஞர்களுக்கும் துரோகமிழைத்துக் கொண்டிருப்பவருக்கு உலகப் பெருந்தமிழர் விருது தருவதை அங்கீகரிக்க முடியாது'' என்றும் குறிப்பிட்டு, மகாலிங்கத்தின் வேட்டியை விலக்கி அவரது காக்கி அரைடவுசரை அடையாளம் காட்டினார். பெரியார் தி.க.வின் கோவை இராமகிருஷ்ணனும், மற்றவர்கள் பேசத் துணியாத நீலவேந்தனின் கருத்தை ஆதரித்துப் பேசியுள்ளார்.

உடனே 'மாவீரன்' நெடுமாறனுக்கு 'தமிழ் வீரம்' பொங்கியெழுந்துவிட்டது. ''இது தனிப்பட்ட அரசியல் மேடை அல்ல; உலகத் தமிழர்களுக்கான பொது மேடை. இங்கு அனைவரும் பங்கேற்பார்கள். கருத்து வேறுபாடு உள்ளவர்கள் வராமலேயே இருந்திருக்கலாம். அந்தத் தம்பி (நீலவேந்தன்) பேசியதை வன்மையாகக் கண்டிக்கிறேன். பண்பாட்டோடு நடந்து கொள்ளுங்கள். நான் ஆதித் தமிழர் பேரவையைச் சேர்ந்த நண்பர் அதியமானைத்தான் பேச அழைத்திருந்தேன். அவர் அனுப்பியதாகக் கூறிக் கொண்டு யாரோ வந்து என்னென்னவோ பேசியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கருத்துக்களோடு இனி யாரும் இங்கே வரவேண்டியதில்லை'' என்று எச்சரித்து, காக்கி அரைடவுசர் வெளியே தெரியாமல் மகாலிங்கத்துக்கு வேட்டியைச் சரி செய்து கட்டிவிட்டார். நெடுமாறன் இப்படிப் பேசி முடித்தவுடன், ஆதித் தமிழர் பேரவையைச் சேர்ந்தோரும், தோவை இராமகிருஷ்ணனோடு வந்த பெரியார் தி.க.வினரும் அரங்கை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்கள் பின்னாலேயே வந்த கவுண்டர் சாதிவெறியர்கள் சிலர் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, ''வள்ளல் மகாலிங்கத்தைப் பற்றி எப்படித் தவறாகப் பேசலாம்?'' என்று கேட்டு வாக்குவாதம் செய்ததோடு, கைகலப்பிலும் இறங்கியுள்ளனர்.

தமிழை இழிவுபடுத்தி சமஸ்கிருதம் உயர்வானது என்று பகிரங்கமாக மேடையிலேயே மகாலிங்கம் அறிவித்துள்ளாரே, அதுதான் நெடுமாறனைத் தலைவராகக் கொண்டுள்ள உலகத் தமிழர் பேரமைப்பின் நிலைப்பாடா? அவரவர் கருத்துக்களை அவரவர் மேடையில் வைத்துக் கொள்ளுங்கள் என்றால், மேடைக்கேற்ப சந்தர்ப்பவாதமாக நடந்து கொள்வதுதான் நெடுமாறன் கற்றுத் தரும் புது அரசியலா? ஆர்.எஸ்.எஸ். ''ஷாகா''வுக்கு காக்கி அரைடவுசருடன் செல்லும் இந்து வெறியர்களின் புரவலருக்கு, உலகப் பெருந்தமிழர் விருது வழங்குவதை விமர்சிக்கக் கூடாதா?

''இப்படி உள்விவகாரங்களையெல்லாம் நோண்டக் கூடாது. தமிழனா என்று பார்! அப்படியானால் இது நம்ம ஆளு!'' - இதுதான் நெடுமாறனின் புதிய சித்தாந்தம். நெடுமாறன் மட்டுமல்ல; பல வண்ணத் தமிழினவாதிகளும் சந்தர்ப்பவாத அரசியலையும் பிழைப்புவாத வாழ்வியலையும் இணைத்து ஒரு வீரிய ஒட்டுரக சித்தாந்தத்தை உருவாக்கி வளர்த்து வருகிறார்கள். வர்க்கக் கண்ணோட்டமோ, சாதிஎதிர்ப்பு - ஏகாதிபத்திய எதிர்ப்புக் கண்ணோட்டமோ இன்றி, ''தமிழன் - சூத்திரன்'' என்ற பெயரால் எல்லாவகையான அயோக்கியர்களையும் துரோகிகளையும் ஆதரித்து நிற்பதும், ''தமிழன்-தமிழினம்'' என்ற கூப்பாடு போட்டு இவற்றை மூடிமறைத்து நியாயம் கற்பிப்பதும் இப்பிழைப்புவாதிகளின் கைவந்த கலையாகி விட்டது. அதன் அடுத்த பரிணாமம்தான் ஆர்.எஸ்.எஸ்.காரனுக்கு விருது!

**— பு.ஜ. செய்தியாளர்கள், திருப்பூர்.**

**இப்போது விற்பனையில் . . .**

**''இந்து என்று சொல்லாதே
இராமன் பின்னே செல்லாதே!''**

*— கவிஞர் தோழர் துரை. சண்முகம் (ம.க.இ.க.)*

**''அமெரிக்க வல்லூறுக்கு இரையாகுது
இந்தியாவின் இறையாண்மை''**

**— தோழர் எஸ். பாலன்**
*(கர்நாடக உயர்நீதி மன்ற வழக்குரைஞர், பெங்களூரு)*

மனித உரிமை பாதுகாப்பு மையம் (HRPC) மதுரை மாவட்டக் கிளையின் நான்காம் ஆண்டு விழாவில் நடந்த கவியரங்க-கருத்தரங்க நிகழ்ச்சி ஒளிக் குறுந்தகடாக (DVD) வெளிவந்துள்ளது.

ஒளிக்குறுந்தகடு விலை : ரூ. **30/-** அஞ்சல் (கூரியர்) செலவு : ரூ. **25/-**

வெளியீடு : *மனித உரிமை பாதுகாப்பு மையம்* (HRPC), *தமிழ்நாடு.*

*தோழர் துரை. சண்முகத்தின் கவியரங்கக் கவிதை விரைவில் நூல் வடிவில் வெளிவர உள்ளது. நூல் விலை: ரூ.20/- அஞ்சல் செலவு தனி.*

**ஒளிக் குறுந்தகடு மற்றும் நூல் கிடைக்குமிடங்கள்:**

எஸ். ராஜு,
வழக்குரைஞர்,
ஒருங்கிணைப்பாளர்,
ம.உ.பா. மையம்,
702/A, ஜங்ஷன் ரோடு,
விருத்தாசலம் - 606 001.

ம. லயனல் அந்தோணிராஜ்,
மாவட்ட செயலர்,
ம.உ.பா.மையம்,
158, சேதுபதி குறுக்குத் தெரு,
(இராமையா தெரு கடைசியில்)
ஜெய்ஹிந்த்புரம்,
மதுரை - 625 011.
✆: 9443471003


கீழைக்காற்று,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 2.
☎ : 044-28412367



படிப்பகம்

www.padippakam.com





# குண்டு வைப்புகளில் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. பயங்கரவாதிகள்

**இந்து மதவெறி அமைப்புகள், இசுலாமியத் தீவிரவாதிகளைப் போல குண்டுவெடிப்பு போன்ற பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்ற பொதுக் கருத்து அடிப்படையிலேயே ஆதாரமற்றது.**

நாட்டின் எந்த மூலையிலும் ஏதாவது ஒரு பயங்கரவாதக் குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தாலும், ஒன்று இசுலாமிய பயங்கரவாதிகள் செயல் என்று முத்திரை குத்தப்படுகிறது. அல்லது நக்சலைட்டு தீவிரவாதிகளின் தாக்குதல் என்று சந்தேகப்பார்வை திரும்புகிறது. ஆனால், அது பார்ப்பன-இந்துமத பயங்கரவாதிகளின் செயலாகவும் இருக்கலாம் என்ற கோணத்தில் செய்தி ஊடகங்களோ, போலீசு-உளவுத்துறையோ சந்தேகிப்பதும் இல்லை; அந்தத் திசையில் விசாரணையை நடத்துவதுமில்லை.

ஆனால், நவீன வெடிகுண்டுகள் முதல் தாக்குதலுக்கான ஏவுகணைகள் வரை தயாரிக்கவும் அவற்றைக் கொண்டு இசுலாமிய சமுதாயத்துக்கு எதிராகப் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தவும் பார்ப்பன-இந்து மதவெறிக் கும்பல்கள் பயிற்றுவிக்கப்பட்டு நாடுதழுவிய வலைப்பின்னலை அமைத்திருக்கின்றது என்பது சமீபத்தில் அம்பலமாகியிருக்கிறது.

● மத்திய மராட்டிய மாநிலம் பார்பானி நகரின் ரெஹமத் நகரில் உள்ள மெகமதியா மஸ்ஜித்தில் 2003-ஆம் ஆண்டு நவம்பர் 21 அன்று வெள்ளிக்கிழமை ஒரு குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது.

● அதே பார்பானி மாவட்டம் புர்ணா நகரின் சித்தார்த் நகரில் உள்ள மிராஜ்-உல்-உலூரம் மதார்சா மற்றும் மஸ்ஜித்தில் 2004-ஆம் ஆண்டு ஆகஸ்டு 27 அன்று வெள்ளிக்கிழமை குண்டு வெடிப்புகள் நடந்தன.

● மத்திய மராட்டிய மாநிலத்தின் ஜால்னா நகரின் சதர் கடைவீதியில் உள்ள காதிரியா மஸ்ஜித்தில் 2004 ஆகஸ்டு 27 அன்று வெள்ளிக்கிழமை குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது.

மேற்கண்ட மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் சில வியத்தகு பொதுத்தன்மைகள் உள்ளன. எல்லாம் மத்திய மராட்டிய மாநிலத்தில் உள்ள நகரங்களின் பிரபல மசூதிகளில், வெள்ளிக் கிழமைகளில் மிக அதிகமாக இசுலாமியர்கள் திரளும் மதியம் தொழுகைக்குப் பிறகு, 1.45 முதல் 2 மணிக்குள் நடந்திருக்கின்றன. இந்தக் குண்டுவெடிப்புகளில் இசுலாமியர்கள்தாம் பலியாகியிருக்கின்றனர்.

இருந்தபோதும், இவையெல்லாம் அண்டை நாடுகளில் இருந்து, மிதவாத இசுலாமியர்களைப் பலிவாங்கவோ அல்லது மதவெறியைத் தூண்டிவிட்டு இந்துக்களோடு மோதவிடவோ இசுலாமியப் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகள் என்று உளவுத்துறையும், செய்தி ஊடகங்களும், பா.ஜ.க. மற்றும் காங்கிரசு போன்ற அரசியல் கட்சிகளும் கூறி வந்தன; இன்னமும் கூறி வருகின்றன.

ஆனால், 2006, ஏப்ரல் 7 அன்று வெள்ளிக்கிழமை மத்திய மராட்டியத்தில் உள்ள ஔரங்காபாத் மசூதியில் குண்டு வைக்க வெடிகுண்டுகள் தயார் செய்யும்போது, நாண்டெட் நகரில் நடந்த வெடிகுண்டு விபத்தில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - வி.இ.ப. - பஜ்ரங்தள் கூட்டத்தைச் சேர்ந்த இரண்டு பேர் மாண்டு போய், ஐந்து பேர் படுகாயமுற்றுக் கைதான போது உண்மை வெளியானது.

இந்தக் கும்பல் கைதான பிறகும், 2006-ஆம் ஆண்டு, செப்டம்பர் 8, வெள்ளிக்கிழமை அன்று மதியம் தொழுகைக்குப் பிறகு நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் 38 இசுலாமியர்கள் கொல்லப்பட்டார்கள்; நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமுற்றார்கள். அதன்பிறகு, இந்த ஆண்டு ஐதராபாத் மெக்கா மசூதி மற்றும் அஜ்மிர் தர்கா ஆகிய குண்டுவெடிப்புகள் அதேபாணியில் நடந்துள்ளன.

பார்பானி, ஜால்னா, புர்ணா மசூதிகளின் குண்டுவெடிப்புகளுக்குக் காரணமான ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., வி.இ.ப., பஜ்ரங்தள் சதிகாரக் கும்பல் நாண்டெட் நகர வெடிகுண்டு தயாரிப்பு விபத்துக்குப் பிறகு கைது செய்யப்பட்டு விட்டது; என்ற போதும், அந்தக் கும்பலின் அதே பாணியிலான, இசுலாமியர்களைப் படுகொலை செய்யும் குண்டுவெடிப்புகள் தொடர்ந்து நிகழ்த்தப்படுகின்றன.

இனிமேலும் இதேபாணியிலான குண்டுவெடிப்புகளைத் திட்டமிட்டு நடத்துவதற்காகப் பார்ப்பன-இந்துமத வெறி சதிகாரக் கும்பல் ஒரு பயங்ரவாத வலைப்பின்னலைக் கொண்டிருப்பதை நாண்டெட் நகர வெடிகுண்டு தயாரிப்பு விபத்தில் சிக்கிய குற்றவாளிகளின் வாக்குமூலங்களே காட்டுகின்றன.


பர்பானி, புர்ணா, ஜல்னா மற்றும் நாண்டெட் குண்டு வெடிப்புக் குற்றவாளிகளான சஞ்சய் எனப்படும் பாபுராவ் சௌதுரி மற்றும் ஹிமான்சு பான்சே ஆகிய இருவரும் பெங்களூருவில் உள்ள குற்றவியல் ஆய்வுக் கூடத்தில் பயங்கரவாத எதிர்ப்பு அதிரடிப் படை போலீசால் 2006, ஜூலை 19 அன்று நரம்பியல் ஆய்வு மற்றும் மூளை வரைவு சோதனைகளுக்குட்படுத்தப்பட்டனர்.

சஞ்சய் என்பவனிடம் நடத்தப்பட்ட சோதனையின் அறிக்கைப்படி, அவனும் மேலும் மூன்று பேரும் அடங்கிய குழு, பூனே அருகே சிங்காகு பகுதியில் உள்ள ஆகாஷ் சுற்றுலா விடுதியில் 2003-ஆம் ஆண்டு வெடிகுண்டு தயாரிப்புப் பயிற்சியளிக்கப்பட்டனர். குண்டுவெடிப்புகளையெல்லாம் பான்சேதான் திட்டமிட்டுக் கொடுத்தான். பான்சேவுக்குத் தலைமையிடமிருந்து செல்பேசி மூலம் உத்தரவுகள் வந்தன; இதற்கென்று பான்சே தனியான செல்பேசி இணைப்புப் பெற்றிருந்தான். நாண்டெட்டில் உள்ள பஜ்ராங் நகரில்



படிப்பகம்

www.padippakam.com



வசிக்கும் உள்ளூர் பஜ்ரங் தள் தலைவன் பாலாஜி பகாடியாவுடன் அவர்கள் தொடர்பு வைத்திருந்தார்கள். விசுவ இந்து பரிசத் தலைவன் கோவிந்த் புரானிக், ஔரங்காபாத் ஆர்.எஸ்.எஸ். தலைவன் அபய் மதுக்கர், பஜ்ரங் தள் தலைவன் வினோத்ராவ் கம்தேகர் ஆகியோர் சதிக் கும்பலுக்கு உதவிகள் செய்து வந்தனர். நாண்டெட் குண்டு வெடிப்பில் காயமடைந்த குருராஜ் ஜெயராம் துப்டேவர் குண்டு வைப்பதற்காக ரூ. 45,000 முதல் 50,000 வரை தலைமையிடமிருந்து பெற்றார்.

குறித்த நேரத்தில் வெடிக்கும் வெடி குண்டு தயாரிப்பதற்கு இந்தச் சதிகார கும்பலுக்கு மிதுன் சக்ரவர்த்தி என்பவன் புனேயில் பயிற்சியளித்தான். தண்ணீர் இணைப்புக் குழாயை வைத்து குழாய் வெடிகுண்டு தயாரிக்கவும் கற்றுக் கொடுக்கப்பட்டது. அவ்வாறான ஒன்றுதான் நாண்டெட்டில் வெடித்து விபத்து ஏற்பட்டது. அவன்தான் ஒரு பையில் வெடிமருந்துகள் போட்டு, புனே ரயில் நிலையத்தில் வைத்துச் சதிகாரர்களுக்குக் கொடுத்தான். விசுவ இந்து பரிசத்தின் அகில உலகப் பொதுச் செயலாளர் பிரவீன் தொகாடியா (குஜராத் 2002 இசுலாமியர் படுகொலையில் முக்கிய பங்காற்றிய இந்து வெறித் தலைவன்) இந்த சதிகாரக் கும்பலுக்கு வகுப்பு நடத்தியிருக்கிறான்.

சஞ்சய் என்பவனிடம் நடத்தப்பட்ட நரம்பியல் ஆய்வின் அறிக்கையை, ஹிமான்சு பான்சே என்ற மற்றொரு குற்றவாளியிடம் நடத்தப்பட்ட மூளை வரைவு ஆய்வு அறிக்கை உறுதி செய்தது.

புனேயில் வெடிகுண்டுகள் தயாரிப்பில் பயிற்சி பெற்ற பிறகு ஹிமான்சு பான்சே இரண்டு ஆண்டுகளுக்கு விசுவ இந்து பரிசத் மற்றும் பஜ்ரங் தள் உறுப்பினர்களோடு கோவாவில் தங்கிப் பயிற்சி பெற்றான். அதன்பிறகு, நாண்டெட் குண்டுவெடிப்பில் படுகாயமுற்ற மரோட்டி கிஷோர் வாகா என்பவனோடு நாக்பூரில் உள்ள போன்ஸ்லே இராணுவப் பள்ளியில் நாற்பது நாட்கள் பயிற்சி பெற்றான்.

புகைப்படத் தொகுப்பு, ஆர்.எஸ்.எஸ். நாட்குறிப்பு, ஆர்.எஸ்.எஸ். தனிச் சுற்றுக்கு வெளியிடும் பத்திரிக்கை, இன்னும் பல ஆர்.எஸ்.எஸ். ஆவணங்கள், குண்டு வைப்பதற்காக ஔரங்காபாத் போனபோது பான்சே எடுத்த புகைப்படங்கள், குறிப்பாக அந்நகர மசூதியைப் பல கோணத்தில் காட்டும் புகைப்படங்கள், ஔரங்காபாத் மசூதியை தெளிவாகக் குறியீடு செய்துள்ள ஒரு வரைபடம் (மேப்) மற்றும் ஒரு ஒட்டுத்தாடி ஆகியவை பான்சேவின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டன.

இவை ஔரங்காபாத் தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்தில் மராட்டிய பயங்கரவாத எதிர்ப்பு அதிரடிப்படை உதவி ஆணையாளர் அனில் தமாய்சேகர் என்பவரால் முன்வைக்கப்பட்டன.

பார்ப்பன - இந்துமதவெறி பயங்கரவாதக் குழுக்களுக்கு ஆள் பிடிப்பதற்காக உடற்பயிற்சிக் கூடம், அனாதை இல்லம் போன்றவைகளை இந்தச் 'சதிகாரர்கள் நடத்தினார்கள். மராத்தி புத்தாண்டு, விஜயதசமி, விநாயக சதுர்த்தி, ராம நவமி போன்ற பண்டிகைகளை கொண்டாடினார்கள்.

இவ்வளவு ஆதாரங்களைத் திரட்டி பார்ப்பன - இந்து வெறி பயங்கரவாதிகள் 21 பேரைக் கைது செய்த மராட்டிய பயங்கரவாத எதிர்ப்பு அதிரடிப் போலீசு, அவர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிக்கைகள் தாக்கல் செய்யும்போது போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி 11 பேரை விடுவிக்க எத்தணித்தது. இதை அறிந்த உள்ளூர் இசுலாமிய அமைப்பினர், மத்திய உளவுத் துறை விசாரணை கோரி மும்பை உயர்நீதி மன்றத்தின் ஔரங்காபாத் கிளையில் வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு வரவிருந்த நிலையிலேயே, ஒருபோதும் இல்லாதவாறு நீதிமன்ற தாக்கீது ஏதுமின்றியே மத்திய உளவுத் துறைக்கு கூடுதல் வேலைச்சுமை உள்ளதாகவும், போதிய விசாரணை அதிகாரிகள் இல்லை என்றும் தானே முன்வந்து வக்காலத்துப் போட்டு ஒதுங்கிக் கொள்ள எத்தணித்தது. மத்திய உளவுத் துறையுங்கூட பார்ப்பன இந்து மதவெறி பயங்கரவாதத்துக்குத் துணை போவதுதான் என்பதற்கு வேறு என்ன சான்று தேவை. நாடு தழுவிய அளவில் பார்ப்பன - இந்து மதவெறி பயங்கரவாதிகள் பயிற்சியும் ஆயுதங்களும் கொண்ட வலைபின்னலை உருவாக்கியிருக்கிறார்கள். நாண்டெட் நகரக் குண்டுவெடிப்பு விவகாரத்தில் வெளியான (பயங்கரவாத எதிர்ப்பு அதிரடிப்படை போலீசு திரட்டிய) ஆதாரங்கள் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

ஆர்.எஸ்.எஸ். என்றால் முரட்டுத்துணி காக்கி அரை டிராயரும், வெள்ளை பனியனும் ஒரு நாலடிக் கம்பும் கொண்ட ஆட்கள்தாம் என்று வெளியுலகுக்குத் தெரியும். அதன் இன்னொரு அவதாரமாகிய விசுவ இந்து பரிசத் மற்றும் இளைஞர் அணியான பஜ்ரங் தள் என்றால் கழுத்திலும் தலையிலும் காவித்துணி சுற்றிக் கொண்டு ஒரு மூன்றங்குல திரிசூலம் ஏந்திய குண்டர்கள்தாம் பலரின் கண்ணுக்குத் தெரிகிறார்கள். சில சமயம் நீண்ட வாளோடும், குறுங்கத்திகளோடும் அவர்கள் தெருவில் அலைவதைக் கலவரப் பகுதிகளில் காண


**குஜராத் 2002: இந்து மதவெறி பயங்கரவாதிகள் நடத்திய கொலைவெறி குண்டு வீச்சில் அகமதாபாத் நகரமே பற்றி எரிந்தது.**





படிப்பகம்

www.padippakam.com



லாம். இந்த ஆயுதங்கள் எல்லாம் தனிநபர் படுகொலைகளுக்குத்தான் பயன்படும். 1992 மும்பை, 2002 குஜராத் போன்ற பெருந்திரளான கொலைவெறியாட்டம் போடவும் பயங்கரவாதப் படுகொலைகளை நிகழ்த்தவும் கையெறி குண்டுகள், நேரங் குறித்து வெடிக்கும் குண்டுகள் முதல் குண்டுவீசித் தாக்கும் ஏவுகணைகள் வரை அதிநவீன ஆயுதங்களும் அவற்றைத் தயாரிக்கவும் கையாளவும் கற்றுத் தரும் பயிற்சி முகாம்களை இந்து மதவெறி பயங்கரவாதிகள் நடத்துகின்றனர்.

1992 பாபரி மசூதி இடிப்புக்காக குஜராத்திலுள்ள சர்கேஜ் எனுமிடத்தில் முன்னாள் இராணுவத்தினரை வைத்து பயிற்சியளிக்கப்பட்டது என்று காலஞ்சென்ற முன்னாள் மத்திய அமைச்சர் ராஜேஷ் பைலட் நாடாளுமன்றத்திலேயே அறிவித்தார். அது உண்மைதான் என்றும் நாட்டிலேயே முதன் முறையாக பஜ்ரங் தள் உறுப்பினர்களுக்குத் தான் 1987 முதல் பயிற்சி அளித்து வருவதாகவும் 2002 குஜராத் படுகொலையைத் தொடங்கி வைத்த கோத்ரா எம்.எல்.ஏ. ஹரேஷ் பட் ஒப்புதல் வாக்குமூலமளித்துள்ளார். மத்திய உளவுத்துறை விசாரணைக்குப் பின்னும் இன்னமும் அங்கே பயங்கரவாதப் பயிற்சி தரப்படுகிறது.

இந்த ஹரேஷ் பட்டுக்குச் சொந்தமான பட்டாசு தொழிற்சாலையில் டீசல் வெடிகுண்டு, குழாய் வெடிகுண்டு போன்றவை தயாரிக்கப்பட்டு 2002 இஸ்லாமியர் படுகொலை வெறியாட்டத்தின்போது இந்துமதவெறி பயங்கரவாதிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

"பஞ்சாபில் இருந்து இரண்டு லாரிகள் நிறைய வாட்கள் வரவழைக்கப்பட்டன. ம.பி., உ.பி., பீகார் ஆகிய வெளிமாநிலங்களில் இருந்து நாட்டுத் துப்பாக்கிகள் கொண்டு வரப்பட்டன. எங்கள் பட்டாசுத் தொழிற்சாலையிலேயே குழாய்களைக் கொண்டு முக்கால் அடி சுவர்களையும் துளைத்துச் செல்லும் வெடிகுண்டு முனைகளைக் கொண்ட முழு ஏவுகணைகளைத் தயார் செய்தோம்" என்கிறார் ஹரேஷ் பட்.

தவால் ஜெயந்தி பட்டேல் என்ற விசுவ இந்து பரிசத்தின் சபர்கந்தா மாவட்டத் தலைவருக்குச் சொந்தமான கல் குவாரியில் வைத்து சக்தி வாய்ந்த ஆர்.டி.எக்ஸ் கலவையுடன்கூடிய வெடிகுண்டுகள் ஏராளமாக தயாரித்து வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டன. இதற்காக வெடிகுண்டுகள் தயாரிப்பு தொழில்நுட்ப வல்லுநரும் ஆர்.எஸ்.எஸ்.காரருமான அம்ருத் பட்டேல் பயிற்சியளித்திருக்கிறார். இவர் ஏற்கெனவே வெடிகுண்டு தயாரிப்பு வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர். இவ்வாறு சபர்கந்தா மாவட்ட விசுவ இந்து பரிசத் தலைவர் ஜெயந்தி பட்டேலும், குஜராத் மாநிலப் பிரச்சார செயலாளர் அனில் பட்டேலும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

நாட்டில் எங்கு குண்டுவெடிப்பு பயங்கரவாதத் தாக்குதல் நடந்தாலும், போலீசின் உளவுப் பிரிவும் தடயவியல் நிபுணர்களும் செய்யும் முதல் ஆய்வு எந்தவகை வெடிபொருள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் அதிலிருந்து எந்த பயங்கரவாதக் குழு / கும்பல் அந்தத் தாக்குதலை நடத்தியிருக்கும் என்றும் அனுமானிக்கிறார்கள். முக்கியமாக ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்து பயன்படுத்தியிருந்தால் எல்லைக்கப்பால் இருந்து ஏவிவிடப்படும் பயங்கரவாதிகளின் செயல் என்று முடிவு செய்கிறார்கள். ஆனால், பலவகை வெடிகுண்டுகள் மட்டுமல்ல, ஆர்.டி.எக்ஸ் வெடிபொருள் கலந்த வெடிகுண்டுகள் சபர்கந்தாவிலுள்ள கல்குவாரியில் தயாரித்து 2002 குஜராத் கொலைவெறியாட்டத்திற்காக விநியோகப்பட்டிருப்பதை விசுவ இந்து பரிசத் மற்றும் பஜ்ரங் தள் பிரமுகர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆகவே, குண்டுவெடிப்புப் பயங்கரவாதச் செயல்கள் என்றாலே இசுலாமியப் பயங்கரவாதிகளின், குறிப்பாக எல்லைக்கப்பால் அதாவது பாகிஸ்தான் அல்லது வங்க தேசத்திலிருந்து ஏவிவிடப்படும் / ஊடுருவி வரும் பயங்கரவாதிகளால் நடத்தப்படுவன என்றும் இந்தமத தீவிரவாதிகள் தனிநபர் தாக்குதல் அல்லது கலவரம் மூலம் படுகொலைகள் தாம் செய்வார்கள் என்றும் கருதுவது தவறாகும்.

இந்தியப் போலீசும் உளவுப்படையும் இந்தக் கோணத்திலேயே குண்டுவைப்புக் குற்றவாளிகளைத் தேடி அலைகிறது. அதனால் குண்டுவைப்பு குற்றவாளிகள் என்று அப்பாவி இசுலாமிய இளைஞர்களைப் பிடித்துக் கொண்டு போய், சட்டவிரோதமாக நடத்தப்படும் இரகசிய சித்திரவதைக் கூடங்களில் வைத்துப் பல நாட்கள் சித்திரவதை செய்கின்றனர். அதன்பிறகு ஆதாரம் இல்லை என்று கூறி போலீசும் உளவுப் படையுமே பலரை விடுவித்துள்ளனர்.

பெங்களூரு இந்திய விஞ்ஞானக் கழக மாநாட்டில் துப்பாக்கிச் சூடு நடத்திய வழக்கில் சென்னை கொடுங்கையூரைச் சேர்ந்த ஒரு இசுலாமியரைப் பயங்கரவாத முத்திரை குத்தி, கைது செய்து சித்திரவதைக்குள்ளாக்கிய பிறகு ஆதாரம் இல்லையென விடுவிக்கப்பட்டார். ஐதராபாத் தொடர் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர் என்று வங்கதேசத்தைச் சேர்ந்த வேலூர் கல்லூரி மாணவி, பலநாள் விசாரணைக்குப் பிறகு, கடவுச்சீட்டு ஆவணத்தைக் கையில் வைத்திருக்கவில்லை என்ற வழக்குடன் விடுவிக்கப்பட்டார். குண்டுவெடிப்புக்கும் அம்மாணவிக்கும் சம்பந்தமில்லை என்று ஆந்திர டி.ஜி.பி.யே மறுத்தபோதும் அந்த மாணவிக்கு எதிரான அவதூறுகளையும் வதந்திகளையும் பத்திரிக்கைகள் எழுதிவந்தன.

அதே ஐதராபாத் தொடர் குண்டுவெடிப்பில் சந்தேகத்துக்குள்ளான 20 இசுலாமிய இளைஞர்களை பிடித்துக் கொண்டு போய் இரகசிய இடத்தில் வைத்துச் சித்திரவதை செய்த பிறகு, ஆதாரமில்லையென போலீசு விடுதலை செய்தது. அஜ்மீர் தர்கா வெடிகுண்டு வைப்பிற்குக் குற்றவாளி என்று ஒரு மசூதியின் மௌலவியைப் பிடித்துக் கொண்டு போய் சித்திரவதை செய்து, பிறகு ஆதாரமில்லை என்று விடுவிக்கப்பட்டார்.


சென்னை, கோவை, ஐதராபாத் (1993) போன்ற இடங்களில் நடந்த குண்டுவெடிப்புகளுக்கு இசுலாமியர்கள்தாம் காரணமாக இருப்பார்கள் என்ற அடிப்படையில் கைது செய்து, சித்திரவதைக்குப் பிறகு, கட்டாய ஒப்புதல் வாக்குமூலங்கள் பெற்று சம்பந்தமில்லாதவர்கள்மீது குற்றப் பத்திரிகைகள் போட்டு, பல ஆண்டுகள் சிறையிலடைத்து, விசாரணைகள் நடத்தியபிறகு ஆதாரங்கள் நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானிக்கப்பட்டு, வழக்கு மன்றங்களால் விடுவிக்கப்பட்ட விவகாரங்களும் உண்டு.

இந்து மதவெறி பயங்கரவாதிகளும் பல குண்டு வெடிப்புகளுக்கு காரணமாயிருப்பார்கள் என்ற கோணத்தில் புலன் விசாரணைகள் நடத்தப்படாததால், ஐதராபாத் மெக்கா



படிப்பகம்

www.padippakam.com



மசூதி குண்டுவெடிப்பு, 2007-ஆம் ஆண்டு இரட்டை குண்டுவெடிப்பு, லூதியானா சினிமா கொட்டகை குண்டு வெடிப்பு, அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு, மராட்டிய மாநிலம் மாலேகான் குண்டு வெடிப்பு போன்றவற்றுக்கு காரணமானவர்கள் இது வரை "கண்டுபிடிக்கப்" படாமலேயே இருக்கின்றனர்.

குஜராத் - அக்சார்தம் கோவில் துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணமானவர்கள் என்று மாநிலப் போலீசார் சிலரைப் பிடித்துச் சித்திரவதை செய்தும், சிலரைப் போலீசுடன் மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொன்றும் இருக்கும் அதே சமயம், அந்தத் துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணமானவர்கள் என்று காசுமீர் போலீசு வேறு சிலரைப் பிடித்தது. இப்படிக் குண்டுவெடிப்பு-துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களுக்குச் சம்பந்தமில்லாமலேயே உளவுத்துறையின் வழக்கமான பொய்யான எச்சரிக்கைகள் அடிப்படையில் பயங்கரவாதிகளுக்கு எதிரான சோதனை, தேடுதல் வேட்டை என்கிற பெயரில் அப்பாவி இசுலாமியர்கள் கைது செய்யப்படுவதும், சுட்டுக் கொல்லப்படுவதும் கூட நடக்கிறது. தலைநகர் புது தில்லியிலேயே பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரிலும் பயங்கரவாதிகளைச் சுட்டுக் கொன்றால் பதவி உயர்வு கிடைக்கும் என்பதற்காகவும் இரண்டு சீக்கியத் தொழிலதிபர்கள் நகரின் மையமான கடைத்தெருவில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவைதவிர, மோடி போன்ற தலைவர்களைக் கொலை செய்ய வந்த பயங்ரவாதிகள் என்ற பெயரில் போலி மோதல்கள் நடத்தி இசுலாமியர்களைப், படுகொலை செய்வதும் அடிக்கடி நடக்கிறது. பாகிஸ்தானில் இருந்தும், வங்கதேசத்திலிருந்தும் ஊடுருவ முயன்ற பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற பெயரில் பல அப்பாவிகள் படுகொலை செய்யப்படுவதும் நடக்கிறது.

அப்படியென்றால், இசுலாமியப் பயங்கரவாதச் செயல்கள் - குண்டுவெடிப்புகள் நடப்பதே இல்லையா என்ற கேள்வி எழுகிறது. இசுலாமியர்கள் ஈடுபடும் பயங்கரவாதச் செயல்கள் நடக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவை அனைத்தும் ஒரே அடிப்படையை உடையனவென்றோ, அவற்றுக்காக இசுலாமிய சமுதாயம் முழுவதையுமோ காரணமாக்குவது சரியல்ல.

"திரும்பத் திரும்ப அநீதியிழைப்பது தீவிரவாதத்தை பெற்றெடுக்கிறது என்பது மிகப் பெரிய பாடமாகும். குஜராத்தின் போலீசு நிலையங்களில் குரான் மீது சிறுநீர் கழிப்பது, (டி.ஐ.ஜி. வன்சாரா செய்ததைப் போல) போலி மோதல் படுகொலை செய்து விடுவதாக மிரட்டி, "தடா" பொய்வழக்கில் கைது. செய்யப்பட்டவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவது முதலானவற்றால் வன்முறை எதிர் விளைவுகளை எதிர்பார்க்காமல் இருக்க முடியாது" என்கிறார் மூத்த பத்திரிக்கையாளரான பிரஃபுல் பித்வாய்.

ஆமாம். கிட்டத்தட்ட இதே கருத்தைத்தான் சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வெடித்த "அல் உம்மா"வினருக்கு ஆயுள் தண்டனை வழங்கிய நீதிபதியும் கூறியிருக்கிறார். 1992-இல் பாபரி மசூதியை இடித்ததோடு இந்து மதவெறி பயங்கரவாதிகள் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான இசுலாமியர்களைப் படுகொலை செய்தனர். அதன் நேர் விளைவாகத்தான் அல்-உம்மா போன்ற இசுலாமியத் தீவிரவாதக் குழுக்கள் தோன்றின. இவர்கள் எந்த வெளிநாட்டிலும் பயிற்சியோ, ஆயுதங்களோ, நிதியோ பெறவில்லை.

கோவையில் இந்துவெறியர்கள் கொலைவெறியாட்டம் போட்டு பல அப்பாவி இசுலாமியர்களைக் கொன்றபோது தடுக்கவும் இல்லை; கொலையாளிகள் கைது செய்து, தண்டிக்கப்படவும் இல்லை. விளைவு: தொடர்குண்டு வெடிப்புகளும்; 53 அப்பாவி மக்கள் சாவும். அதேபோன்று மும்பையில் 1992-இல் மூன்றாயிரம் முசுலீம்கள் ஆர்.எஸ்.எஸ். - சிவசேனா இந்து மதவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டனர். விளைவு: 1993-இல் மும்பை தொடர்குண்டு வெடிப்புகள், நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் மாண்டு போயினர்.

1992 மும்பை முசுலீம்கள் படுகொலைக்கு, 2002 குஜராத் கொலைவெறியாட்டத்துக்கு காரணமான இந்து மதவெறி பயங்கரவாதிகளில் ஒருவர் கூட தண்டிக்கப்படாத அதேசமயம், இசுலாமிய தீவிரவாதிகள் பலருக்கு மரண தண்டனைகளும், ஆயுள் தண்டனைகளும் அளிக்கப்படுகின்றன; குற்றங்கள் நிரூபிக்கப்படாமலேயே பல ஆண்டுகள் சித்திரவதை, சிறைத்தண்டனைகளை அப்பாவி இசுலாமியர்கள் அனுபவிக்கின்றனர்.

அதுமட்டுமல்ல, இசுலாமிய சமுதாயம் முழுமையுமே, இந்திய தேசத்துக்கு எதிரானது, விரோதமானது என்றும் தடா, பொடா போன்ற கருப்புச் சட்டங்களும், போலீசு - இராணுவத்தை வைத்து போலி மோதல் கொலைகள் போன்ற கடுமையான நடவடிக்கைகளும் மேற்கொள்வது கூட அவசியமானதுதான் என்றும் வலதுசாரி மற்றும் அரசியலற்ற அறிவுஜீவிகளால் பகிரங்கமாகவே வலியுறுத்தப்படுகிறது.

இத்தகைய குரூரமான, அநீதியான யதார்த்தமே சில இசுலாமியர்கள் மத்தியில் பயங்கரவாத எண்ணங்கள் வேரூன்ற


**விசுவ இந்து பரிசத்தின் கோத்ரா எம்.எல்.ஏ. ஹரேஷ் பட்டின் (வலது) தொழிற்சாலையில்தான் கையெறி குண்டுகள் முதல் ஏவுகணைகள் வரை கள்ளத்தனமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஹரேஷ் பட்டுடன் வி.இ.ப.வின் அகில உலகப் பொதுச் செயலர் பிரவீன் தொகாடியா.**





படிப்பகம்

www.padippakam.com



வும் வளரவும் வளமான பூமியாக அமைகின்றன. இதையே வங்கதேச மற்றும் பாகிஸ்தான் மதவெறி பயங்கரவாதிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்தியாவில் அல்-கொய்தா அமைப்பு காலூன்றி இருப்பதற்கான சான்று எதுவுமே இல்லாதபோது, செய்தி ஊடகங்கள் அதுபற்றி வெறுமனே பீதி கிளப்பிக் கொண்டிருக்கின்றன.

இந்த யதார்த்தத்தை மாற்றாமல் - சுதந்திரமாகவும், ஜனநாயகமாகவும், எல்லா அரசியல், மத உரிமைகளோடும், குடியுரிமைகளோடும் இந்த நாட்டில் வாழ முடியும் என்ற நம்பிக்கையை ஒவ்வொரு இசுலாமியரிடமும் உருவாக்காமல், இசுலாமியப் பயங்கரவாதத்தை ஒடுக்க முடியாது.

(முற்றும்)

● ஆர்.கே.

# ராமன் பாலம் என்பது புராணப் புரட்டு! பார்ப்பன மதவெறிக் கும்பலை விரட்டு!

## – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் தொடர் பிரச்சாரம்



தமிழகத்தில் காலூன்றத் துடிக்கும் பார்ப்பன மதவெறி பாசிசக் கும்பல், ராமன் பாலம் எனும் புராணப்புரட்டை வைத்துக் களத்தில் இறங்கியதும், அதற்கெதிராக ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமக்கே உரித்தான போர்க்குணத்துடன் நடத்திய பிரச்சார இயக்கம் கடந்த அக்டோபர் மாதத்தில் தமிழகமெங்கும் சூறாவளியாய்ச் சுழன்றடித்தது. பெரு மழை காரணமாக இப்பிரச்சார இயக்கம் அக்டோபர் மாத இறுதியில் தற்காலிகமாகத் தடைபட்டு, மீண்டும் நவம்பர் மாதத்திலிருந்து தொடர்ந்து நடந்து வருகிறது.

கடந்த நவம்பர் 3-ஆம் தேதியிலிருந்து தொடர்ச்சியாக கம்பம், போச்சம்பள்ளி, பொன்னேரி, சென்னை - ஈக்காடுதாங்கல், உளுந்தூர்பேட்டை, சென்னிமலை, சிவகங்கை, கீழச்சீவல்பட்டி, கோவில்பட்டி, உடுமலைப்பேட்டை, உசிலம்பட்டி ஆகிய இடங்களில் இவ்வமைப்புகளின் சார்பில் பொதுக்கூட்டங்களும் அரங்கக் கூட்டங்களும் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடைபெற்றன. ம.க.இ.க. மாநிலச் செயலர் தோழர் மருதையன், இணைச்செயலர் தோழர் காளியப்பன், பொருளாளர் தோழர் சீனிவாசன், பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர் சுப.தங்கராசு, வி.வி.மு. தோழர் ஜெயகாந்த் சிங், மற்றும் தோழர் நாகராஜ் ஆகியோர் இக்கூட்டங்களில் சிறப்புரையாற்றினர்.



பொன்னேரியில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் பேராசிரியர் பெரியார்தாசன்; பார்ப்பனக் கும்பலின் சதிகளை அவர் தோலுரித்துக் காட்ட மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்கும் மக்கள்.

சென்னை-ஈக்காடுதாங்கல் மற்றும் பொன்னேரியில் நடந்த பொதுக்கூட்டங்களில் பேராசிரியர் பெரியார்தாசனும், ம.க.இ.க. தோழர் கவிஞர் துரை.சண்முகமும் சிறப்புரையாற்றினர். பார்ப்பன - பாசிசக் கும்பலின் சூழ்ச்சிகள்-சதிகளைத் தோலுரித்துக் காட்டி, இந்துவெறி கும்பலுக்குப் பக்கமேளம் வாசித்த வைகோ, சரத்குமார், விஜயகாந்த் முதலான விபீடணர்களையும் பார்ப்பனச் சாக்கடையில் சங்கமமாகி விட்ட தி.மு.க.வின் சந்தர்ப்பவாதத்தையும் அம்பலப்படுத்தி, பார்ப்பன பாசிசத்தை வீழ்த்தக் களத்தில் இறங்கிப் போராட அறைகூவுவதாக இக்கூட்டங்கள் அமைந்தன.

இந்த 'சூத்திர' ஆட்சியில், தருமபுரியிலும் கோவையிலும் பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சி நடத்த அனுமதி பெற்று ஏற்பாடுகளைச் செய்து வந்த நிலையில், போலீசும் - அதிகார வர்க்கமும் திடீர்த்தடை விதித்து கருத்துரிமையைப் பறித்துள்ளன. அதிகார வர்க்கம் - போலீசு - நீதித்துறை அடங்கிய அரசு எந்திரம் காவிமயமாகியிருப்பதை இது நிரூபித்துக் காட்டுகிறது.

— பு.ஜ.செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# அசாம்:
# பயங்கரவாத எதிர்ப்பின் கோர முகம்

அசாம் மாநிலத்தில் 1998 தொடங்கி 2001 வரையிலான நான்கு ஆண்டுகளில், பொதுமக்களில் பலர், அடையாளம் தெரியாத மர்ம மனிதர்களால் இரவோடு இரவாகச் சுட்டுக் கொல்லப்படுவது சர்வ சாதாரணமாக நடந்து வந்தது. அப்பொழுது ஆட்சியில் இருந்த அசாம் கன பரிசத் அரசு இப்படுகொலைகள் பற்றி மேலோட்டமான போலீசு விசாரணையை நடத்தி, கொலைக்கான காரணத்தையும், கொலையாளிகளையும் கண்டுபிடிக்க மறுத்து வந்தது.


2001-க்குப் பின் நடந்த அம்மாநில சட்டமன்றத் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்த காங்கிரசு அரசு, அசாமிய மக்களின் நிர்பந்தம் காரணமாக இப்படுகொலைகள் பற்றி விசாரிக்க நீதிபதி கே.என். சைக்கியா என்பவர் தலைமையில் விசாரணைக் கமிசனை அமைத்தது. இக்கமிசன் தற்பொழுது அசாம் மாநில அரசுக்கு அளித்துள்ள அறிக்கையில், ''கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஐக்கிய அசாம் விடுதலை முன்னணியில் (ULFA-உல்ஃபா) செயல்படும் போராளிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; அல்லது அப்போராளிகளின் நெருங்கிய உறவினர்கள்; இப்படுகொலைகள் அனைத்தும் அப்பொழுது அசாம் மாநிலத்தின் முதல்வராகவும் போலீசு துறை அமைச்சராகவும் இருந்த பிரஃபுல்லா குமார் மகந்தா அளித்த உத்தரவின் பேரில்தான் நடந்துள்ளன; இப்படுகொலைகளைச் செய்வதற்கு போலீசும், சரணடைந்த போராளிகளைக் கொண்டு அசாம் போலீசு கட்டியுள்ள ''சுல்ஃபா'' என்ற கூலிப் படையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்படுகொலைகள் பற்றிய உண்மை அசாமில் பணியாற்றும் இராணுவத் தலைமைக்கும் தெரியும்'' எனக் குறிப்பிட்டு, இதற்கான ஆதாரங்களையும் சமர்ப்பித்துள்ளது.

''ஐக்கிய அசாம் விடுதலை முன்னணியில் செயல்படும் போராளிகளின் வீடுகளுக்கு மர்ம மனிதர்கள் அனுப்பப்படுவார்கள்; அந்த மர்ம மனிதர்கள் வீட்டில் உள்ளவர்களிடம் போராளி அமைப்பில் இயங்கும் தங்களது உறவினரைச் சரண் அடையும்படிச் செய்ய வேண்டும் எனக் கட்டளை போடுவார்கள். தங்களது உத்தரவுக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டால், அடுத்து அனுப்பப்படும் மர்மக் குழு, போராளியின் வீடு இருக்கும் பகுதியை நோட்டம் போடும். பிறகு திடீரென ஒருநாள் நள்ளிரவில் அவ்வீட்டின் கதவைத் தட்டும். ஆயுதம் தாங்கிய மர்ம மனிதர்கள், அவ்வீட்டைச் சேர்ந்த ஒருவரையோ / பலரையோ வெளியே இழுத்துப் போட்டுச் சுட்டுக் கொன்று விடுவார்கள். அல்லது, கண் காணாத பகுதிக்குக் கடத்திக் கொண்டு போய் சுட்டுக் கொன்று விட்டு, சடலத்தை வீசியெறிந்து விடுவார்கள்.''

இந்த இரகசியக் கொலைகள் அனைத்தும் மேலே சொன்ன முறையில்தான் நடந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள நீதிபதி கே.என். சைக்கியா, ''சிவிலியன்கள் வைத்துக் கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள - போலீசாராலும் இராணுவத்தாலும் மட்டுமே பயன்படுத்தப்படும் துப்பாக்கிகள்தான், இப்படுகொலைகளை நடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன; சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் சடலத்தைப் பரிசோதன்ன செய்தால், இந்த உண்மை அம்பலத்துக்கு வந்துவிடும் என்பதாலேயே, பிரேதப் பரிசோதனை நடத்துவது தவிர்க்கப்பட்டது; இப்படுகொலைகளை நடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கார்கள் அனைத்தும் ஒரே வகையான மாருதி கார்களாகவோ / மாருதி வேன்களாகவோ இருந்திருப்பதோடு, அவை அனைத்தும் பதிவு எண் இன்றி இயக்கப்பட்டிருப்பதாகவும்'' சுட்டிக் காட்டியுள்ளார்.

''இப்படுகொலைகள் பற்றி அசாம் போலீசாரால் நடத்தப்பட்ட விசாரணைகள் அனைத்தும், மொட்டையான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டோ அல்லது விசாரணையை நீண்ட காலம் கிடப்பில் போட்டோ், எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை என்ற சாக்குபோக்கு சொல்லியோ முடிக்கப்பட்டிருப்பதையும்'' கமிசனின் அறிக்கை அம்பலப்படுத்தியிருக்கிறது.

''எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சட்ட விரோதமான படுகொலைகள் நடப்பது தவிர்க்கப்பட வேண்டுமானால், தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையை மேற்பார்வையிடுவதற்காக இராணுவத்தின் தலைமையில், அரசு அதிகாரிகள் - போலீசு - இராணுவம் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள 'ஒருங்கிணைந்த அதிகார அமைப்பு' கலைக்கப்பட வேண்டும்'' என நீதிபதி சைக்கியா கமிசன் அசாம் மாநில அரசிற்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அசாம் மாநில அரசு இப்பரிந்துரையை உடனடியாக நடைமுறைப்படுத்த மறுத்துவிட்டாலும், 20 இரகசியப் படுகொலைகள் பற்றி மறுவிசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது.



**இரகசியக் கொலைக் குழுக்களின் தலைவன் - அசாம் மாநில முன்னாள் முதல்வர் பி.கே.மகந்தா**

அசாமில் மட்டுமல்ல, தேசிய இன சுயநிர்ணய உரிமைக்காகப் போராட்டம் நடைபெற்று வரும் காசுமீர், மணிப்பூர், நாகலாந்து, திரிபுரா ஆகிய மாநிலங்களிலும், அதிரடிப்படையாலும், இராணுவத்தாலும் பதவி உயர்வுக்காகவும், பரிசுத் தொகைக்காகவும் அப்பாவிகள் இரகசியமாகப் படுகொலை செய்யப்படுவது அன்றாட நிகழ்வாகி விட்டது. மணிப்பூரில் 26,000 பேரும், காசுமீரில் 10,000 பேரும் 'காணாமல் போய் விட்டதாக' மனித உரிமை அமைப்புகள் குற்றஞ் சுமத்தி வருகின்றன. கூலிக்குக் கொலை செய்யும் ரவுடித்தனம் போல, அரசின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் சீரழிந்து போய் விட்டன. ஆனால், இச்சீரழிவு ''தேசபக்தி'' என்ற சல்லாத் துணி போர்த்தப்பட்டு போற்றப்படுவதுதான் வெட்கக் கேடானது!

● குப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# டாலர் மதிப்புச் சரிவு:
# இந்தியா இடிதாங்கியா?

**டாலர் மதிப்புச் சரிவினால் இந்தியாவில் 80 இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.**

இந்தியப் பொருளாதாரம் 9 சதவீத வளர்ச்சியை எட்டப் போகிறது என மன்மோகன் சிங் கும்பல் ஒருபுறம் ஆரவாரம் செய்து கொண்டிருந்தாலும், இன்னொருபுறம், அமெரிக்க டாலரின் மதிப்பு வீழ்ச்சி என்ற கத்தி அவர்களை அச்சுறுத்தத் தொடங்கியிருக்கிறது.

சர்வதேச நிதிச் சந்தையில் அமெரிக்க டாலர் சந்தித்து வரும் சரிவுதான் டாலருக்கு இணையான இந்திய ரூபாயின் மதிப்பை உயர்த்தி வருகிறதே தவிர, இதில் இந்தியப் பொருளாதாரத்தின் சாதனை எதுவும் இல்லை. தாராளமயம் - தனியார்மயம் தீவிரமாக அமலுக்கு வந்த 1991-ஆம் ஆண்டில், ஒரு அமெரிக்க டாலருக்கு இணையான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 26,90 ஆக இருந்தது. இது, கடந்த பதினைந்து ஆண்டுகளில் படிப்படியாகச் சரிந்து ரூ.45/-ஐத் தொட்டது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே, அமெரிக்க டாலரின் மதிப்பு சர்வதேச நிதிச் சந்தையில் விழத் தொடங்கியதையடுத்து, தற்பொழுது, ஒரு அமெரிக்க டாலருக்கு இணையான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 39/- ஆக அதிகரித்திருக்கிறது.

நமது நாட்டுச் செலாவணியான பணம் வலுவாக இருப்பது நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்லதுதானே எனப் பாமரன் கருதலாம். ஆனால், ஏற்றுமதிக்கு முன்னுரிமை தரப்படும் தற்போதைய இந்தியப் பொருளாதாரத்தில், பணத்தின் மதிப்பு உயர்வு மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும். அதனால்தான், ஏற்றுமதி நிறுவன அதிபர்கள் இந்த ''உயர்வை'' வரவேற்க மறுக்கிறார்கள்.

அமெரிக்க டாலரின் மதிப்பு வீழ்ச்சியும்கூடத் திடீரென, எதிர்பாராதவிதமாக நடந்துவிட்ட விபத்து அல்ல; மாறாக, அமெரிக்கா திணித்துவரும் உலகமயம் மற்றும் அதனின் மேலாதிக்க நடவடிக்கைகளின் நேரடி விளைவுகள்தான் இந்த வீழ்ச்சி.

•••

தனியார்மயம் - தாராளமயத்தை ஏற்றுக் கொண்டுள்ள அனைத்து ஏழைகளிடமும், உலக வங்கி கூறும் முதல் 'அறிவுரையே' பட்ஜெட் பற்றாக்குறையையும், வர்த்தகப் பற்றாக்குறையையும் (ஒரு நாட்டின் ஏற்றுமதியைவிட, இறக்குமதி அதிகமாகும்பொழுது ஏற்படும் பற்றாக்குறை) குறைக்க வேண்டும் என்பதுதான். ஆனால், அமெரிக்காவின் பொருளாதாரமோ, உலக வங்கியின் இந்த அறிவுரைக்கு நேர் எதிராகத்தான் இயங்கி வருகிறது. உலகத்திலேயே, பட்ஜெட் பற்றாக்குறையும், வர்த்தகப் பற்றாக்குறையும் அதிகமுள்ள நாடு அமெரிக்காதான்.

ஒரு நாடு, தனது வர்த்தகப் பற்றாக்குறையை ஈடுகட்ட வேண்டும் என்றால், ஒன்று அமெரிக்க டாலரை ஈட்ட ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்; இல்லையென்றால், இறக்குமதியைக் குறைக்க வேண்டும். இவை இரண்டும் சாத்தியமில்லாத நிலையில், அந்த நாடு சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

தனது நுகர்பொருள் தேவைக்கு இறக்குமதியையே பெரிதும் சார்ந்திருக்கும் அமெரிக்காவால், இறக்குமதியை ஈடுகட்டும் வண்ணம் ஏற்றுமதியை அதிகரிக்க வாய்ப்பில்லை என்பதை முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே ஒத்துக் கொள்கிறார்கள். எனினும், உலக நாடுகளுக்கு இடையேயான ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம் பெரும்பாலும் அமெரிக்க டாலரிலேயே நடப்பதால், மிதமிஞ்சிய அளவில் அமெரிக்க டாலரை அச்சடித்துத் தள்ளுவதன் மூலம், அமெரிக்கா தனது வர்த்தகப் பற்றாக்குறையைச் செயற்கையாக ஈடுகட்டி வருகிறது. சர்வதேச ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகம் அமெரிக்க டாலரிலேயே நடந்து வரவேண்டும் என்பதற்காகவே, அமெரிக்கா, 75,000 கோடி அமெரிக்க டாலர்களைப் புழக்கத்தில் விட்டுள்ளது.

இரண்டாவதாக, கச்சா எண்ணெயை உற்பத்தி செய்வது மேற்காசிய நாடுகளாக இருந்தாலும், அதன் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவது அமெரிக்காதான். ஒரு பேரல் கச்சா எண்ணெயை உற்பத்தி செய்ய ஆகும் செலவு 10 அமெரிக்க டாலருக்குக் குறைவாகவே இருந்தாலும், சர்வதேசச் சந்தையில் அதனின் விற்பனை விலை தற்பொழுது 100 அமெரிக்க டாலராக இருக்கிறது. கச்சா எண்ணெயின் தேவை அதிகரித்துக் கொண்டே செல்வதால்தான், அதனின் விலை உயர்ந்து கொண்டே செல்வதாகக் கூறப்படுவது முழுப் பொய்.

2004-இல் உலக அளவில் கச்சா எண்ணெயின் தேவை வெறும் 4 சதவீதம் அதிகரித்த பொழுது, அதனின் விலை 34 சதவீதம் அதிகரித்தது. 2005-இல், கச்சா எண்ணெயின் தேவை 1.6 சதவீதம்தான் அதிகரித்தது. ஆனால், அதன் விலையோ மேலும் 35 சதவீதம் அதிகரித்தது. இந்தச் செயற்கையான விலையேற்றத்தை ஈடுகட்டுவதற்காகவே, அமெரிக்கா 46,000 கோடி டாலர்களை அச்சிட்டு, உலக நாடுகளிடையே புழக்கத்தில் விட்டுள்ளது. உற்பத்தியின் மதிப்பைவிட, பல மடங்கு மித மிஞ்சிய அளவில் அமெரிக்கக் காகிதப் பணம் உலக நாடுகளிடையே புழக்கத்தில் இருந்து வருகிறது.

மூன்றாவதாக, 1990-களின் இறுதியில் தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை அடுத்து, இந்தியா உள்ளிட்ட பல்வேறு ''வளர்ந்து'' வரும் நாடுகள், தங்களின் ஏற்றுமதி வர்த்தகத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே, தங்களின் பணத்தின் மதிப்பை குறைத்துக் கொண்டே சென்றன. இதன் எதிர்விளைவாக அமெரிக்க டாலரின் மதிப்பு செயற்கையாக ஊதிக் கொண்டே போனது. ஏழை நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை மலிவாக இருக்கும் என்பதால், அமெரிக்க ஏகாதிபத்தியமும் தனது டாலர் ஊதிப் பெருக்கப்படுவதை அனுமதித்தது.



படிப்பகம்

www.padippakam.com

உலகின் பல்வேறு நாடுகளின் அந்நியச் செலாவணி கையிருப்பு அமெரிக்க டாலராகவே இருப்பதாலும்; பல்வேறு நாடுகள் தங்களின் சேமிப்பை அமெரிக்க அரசின் கடன் பத்திரங்களிலேயே முதலீடு செய்திருப்பதாலும், அமெரிக்க டாலரின் மதிப்பு வீழ்ந்து விடாமல் செயற்கையாகத் தடுக்கப்பட்டது. இந்தச் சூதாட்ட நடவடிக்கைகள் - அமெரிக்க டாலர் மிதமிஞ்சிய அளவில் புழக்கத்தில் இருப்பதும்; அதனின் மதிப்பு செயற்கையாக ஊதிப் பெருக்கப்பட்டிருப்பதும் - தமது வரம்பை எட்டிவிட்டதையடுத்துதான் அமெரிக்க டாலரின் மதிப்பு சர்வதேசச் சந்தையில் வீழ்வது அனுமதிக்கப்பட்டது.

•••

இம்மதிப்புச் சரிவினால், அமெரிக்காவில் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழக்கலாம் என மதிப்பிடப்படுகிறது. எனினும், ஏகாதிபத்திய நாடுகளுக்கு, தங்களின் பணத்தின் மதிப்பை தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் அரசியல் பலம் இருப்பதாலும்; அந்நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு / தேசங்கடந்த தொழில் நிறுவனங்கள் முன் பேர வர்த்தக ஒப்பந்தங்களைப் (இருநாடுகளின் பணத்தின் மதிப்பை முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டு வியாபாரத்தில் ஈடுபடுவது) போட்டுக் கொள்வதாலும்; ஐரோப்பிய யூனியன் நாடுகள் அமெரிக்க டாலருக்குப் பதிலாக, ''யூரோ''வை அந்நியச் செலாவணியாகப் பயன்படுத்துவதாலும், இந்த வீழ்ச்சி ஏகாதிபத்திய நாடுகளில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தப் போவதில்லை.

அதேசமயம், ஏழை நாடான இந்தியாவிலோ, ஜவுளித் துறை, ஆயத்த ஆடைத் தொழில், கடல்வாழ் உயிரின உணவுப் பொருட்கள், தோல் பொருட்கள், தகவல்-தொழில் நுட்பத் துறை ஆகிய ஏற்றுமதியை நம்பியிருக்கும் தொழில்கள் பலத்த சரிவைச் சந்திக்கத் தொடங்கியுள்ளன.

சர்வதேச அளவில் நடைபெறும் ஜவுளி ஏற்றுமதி வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 3 சதவீதம்தான்; சீனாவின் பங்கோ 20 சதவீதம். டாலரின் மதிப்புச் சரிவுக்கு ஏற்றவாறு, சீனா தனது நாட்டு செலாவணியின் மதிப்பு உயர்ந்து போய்விடாமல் தடுத்ததன் மூலம், அதனின் ஜவுளி ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கப்படாமல் காப்பாற்றி விட்டது. ஆனால், இந்திய ஆளும் கும்பலுக்கு பணத்தின் மதிப்பு உயர்வைத் தடுத்து நிறுத்தும் அரசியல் துணிவு இல்லாததால், இந்தியா, ஜவுளி ஏற்றுமதியில் இந்தோனேஷியா, வங்காள தேசம் ஆகிய ஏழை நாடுகளைவிடப் பின்தங்கிப் போய்விடக் கூடும் என முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். ஜவுளித் தொழிலை நம்பியிருக்கும் 3.5 கோடி தொழிலாளர்களின் வாழ்க்கையைவிட, சந்தையின் சூதாட்டத்திற்குப் பக்க மேளம் வசிப்பதைத்தான் மன்மோகன் சிங் கும்பல் விரும்புகிறது.

டாலரின் மதிப்புச் சரிவினால், திருப்பூரில் ஏற்கெனவே 10,000 தொழிலாளர்கள் வேலையிழந்து விட்டதாகவும், . இவ்வேலையிழப்பு 50,000-ஐத் தொடும் என அந்நகரைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவனங்கள் கூறியுள்ளன. கரூர் ஜவுளித் தொழிலில் மட்டும் 600 கோடி ரூபாய் முதல் 800 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும்; ஏற்றுமதியை நம்பியுள்ள சிறுவீத உற்பத்தியாளர்கள் போண்டியாக நேரிடும்; தொழிலாளர்களுக்குக் கூலியிழப்பு ஏற்படும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. தகவல்-தொழில் நுட்பத் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள், ஊழியர்களுக்கு அளிக்க வேண்டிய சம்பள உயர்வை அறிவிக்காமல், தள்ளிப் போட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.



**இந்திய ஆளும் வர்க்கத்திற்கு ரூபாயின் மதிப்பு உயர்வைத் தடுத்து நிறுத்தும் அரசியல் துணிவு இல்லாததால், ஜவுளி ஏற்றுமதியில் இந்தோனேஷியா, வங்காள தேசம் ஆகிய ஏழை நாடுகளைவிட இந்தியா பின்தங்கிப் போய்விடக் கூடும்.**

இப்பாதிப்புகள் ஒருபுறமிருக்க, ரூபாயின் மதிப்பு உயர்ந்துவிட்டதால் உள்நாட்டில் தயாரிக்கப்படும் நுகர் பொருட்களை விட, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் விலை மலிவாகக் கிடைக்கும். இதனால், இறக்குமதி அதிகமாகி, உள்நாட்டுத் தொழில்கள் அழிவைச் சந்திக்க நேரிடும் என ''பிஸினஸ் வேர்ல்டு'' போன்ற முதலாளித்துவ பத்திரிகைகளே எச்சரிக்கின்றன. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், டாலரின் மதிப்புச்சரிவு இந்தியாவில் மட்டும் 80 இலட்சம் வேலை வாய்ப்புகளைப் பறித்துவிடக் கூடும் எனக் கூறப்படுகிறது.

•••

அமெரிக்க டாலருக்கு இணையான இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்து கொண்டே போவதை



படிப்பகம்

www.padippakam.com

இந்தியத் தரகு முதலாளிகள் விரும்பவில்லை. எனவே, பணத்தின் மதிப்பு உயர்வதைக் கட்டுப்படுத்தும் முகமாக, நாட்டிற்குள் அமெரிக்க டாலர் நுழைவதைக் கட்டுப்படுத்தும் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது.




வெளிநாடுகளில் வசிப்போர், தங்களது அடையாளம் / முகவரி ஆகியவற்றை வெளிக்காட்டிக் கொள்ளாமல், இந்தியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய, பங்கேற்புப் பத்திரம் என்றொரு குறுக்கு வழி இருக்கிறது. கருப்புப் பணக் கும்பலுக்கு, தங்களின் பணத்தை முதலீடு செய்வதற்கு மிகவும் சாதகமான வழி இது. இந்தப் பங்கேற்பு பத்திர விதிமுறைகளைக் கடுமையாக்கப் போவதாக பங்கு பரிமாற்ற வாரியம் (செபி) அறிவித்தவுடனேயே, பங்குச் சந்தை சரிந்து, இந்திய முதலீட்டாளர்களுக்கு 4 இலட்சம் கோடி ரூபாய் நட்டமேற்பட்டது.

அந்நிய நிதி நிறுவனங்கள், இந்தியப் பங்கு சந்தையில் செய்துள்ள முதலீட்டில் 52% முதலீடு, பங்கேற்பு பத்திரம் வழியாகத்தான் செய்யப்பட்டுள்ளது. பங்கேற்பு பத்திர விதிமுறைகளைக் கடுமையாக்கினால், அந்நிய நிதி நிறுவனங்களின் கோபத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதனை விரும்பாத மன்மோகன் சிங் கும்பல், செபியின் அறிவிப்பைக் கைவிட்டது.

76 சதவீத இந்திய ஏற்றுமதி வர்த்தகம், அமெரிக்க டாலர் மூலம்தான் நடைபெறுகிறது. இதனை ''யூரோ''வுக்கு மாற்றிக் கொண்டால், பணத்தின் மதிப்புச் சரிவைத் தடுக்கலாம் என்று இன்னொரு ஆலோசனையைப் பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்திய அரசு இந்த ஆலோசனையைப் பரிசீலித்தாலே, அதன் விளைவாக என்னென்ன பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பது மன்மோகன் சிங்குக்குத் தெரியும்.

சதாம் உசேன் தனது ஆட்சியின் இறுதிக் கட்டத்தில், கச்சா எண்ணெய் ஏற்றுமதி வியாபாரத்தை அமெரிக்க டாலரில் இருந்து யூரோவுக்கு மாற்றினார். ஆனாலும் அவரைக் காப்பாற்ற ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த ஏகாதிபத்திய நாடுகள் கூட முன்வரவில்லை.

ஈரான் கச்சா எண்ணெய் வியாபாரத்தில் அமெரிக்காவுக்குப் போட்டியாகச் சர்வதேச சந்தை ஒன்றை ஏற்படுத்தப் போவதாகவும்; தனது கச்சா எண்ணெய் வியாபாரத்தை அமெரிக்க டாலரில் இருந்து யூரோவுக்கு மாற்றப் போவதாகவும் ஒரு செய்தி வெளியானது. உடனே, அமெரிக்கா ஈரான் சட்ட விரோதமாக அணுகுண்டு தயாரிப்பதாகக் குற்றஞ்சுமத்தி, அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை ஏவிவிட்டது; மேலும், அந்நாட்டின் மீது ஒரு ஆக்கிரமிப்புப் போரைத் தொடுக்கவும் தருணம் பார்த்துக் கொண்டுள்ளது.

அமெரிக்க டாலருடன் மோதவேண்டும் என்றால், அது இறுதியாக அமெரிக்க இராணுவத்துடன் மோத வேண்டிய அபாயத்திற்குள் தள்ளிவிடும் என்பது மன்மோகன் சிங்குக்குத் தெரியும். ஏனென்றால், அமெரிக்க டாலர் என்பது வெறும் காகிதப் பணம் அல்ல. அது, மேலாதிக்கத்திற்கான ஒரு ஆயுதம். பங்குச் சந்தைச் சூதாட்ட நிறுவனங்களின் மிரட்டலுக்கே பணிந்து விடும் இந்திய அரசிடம், அமெரிக்க டாலரின் மேலாதிக்கத்தை எதிர்த்து நிற்கும் துணிவை எதிர்பார்க்க முடியுமா?

பணத்தின் மதிப்பைத் தீர்மானிப்பதில் அரசாங்கம் தலையிடக் கூடாது என்ற கொள்கையைக் கொண்டவர், மன்மோகன் சிங். பணத்தின் மதிப்பை வர்த்தகச் சூதாடிகள் தீர்மானிக்கும்படி, இந்திய நிதிச் சந்தையைத் தாராளமயமாக்க முயன்று வருகிறார் அவர், எனவே, இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து ஏற்றுமதி நிறுவன முதலாளிகளின் இலாபத்தைப் பாதுகாக்க, வரிச்சலுகை என்ற எளிய வழிக்குள் புகுந்து கொண்டுள்ளார், மன்மோகன் சிங். இதுவரை ஏற்றுமதியாளர்களுக்காக, 1,400/- கோடி ரூபாய் வரிச் சலுகையை அளித்திருக்கிறார், மன்மோகன் சிங். அவர்களோ, இன்னும் வேண்டும் என ஆளாய்ப் பறக்கிறார்கள்.

இந்த வரிச் சலுகை, இறுதியில் பட்ஜெட்டில் பற்றாக்குறை என்ற பெயரில் இந்திய மக்களின் மீது சுமத்தப்படும். ஏற்றுமதி முதலாளிகளுக்கு அளிக்கப்படும் வரிச் சலுகையை ஈடுகட்ட, மக்களுக்கு வழங்கப்படும் உணவு மானியம் வெட்டப்படலாம்; மண்ணெண்ணெய், சமையல் எரிவாயுவின் விலை உயர்த்தப்படலாம். அமெரிக்க டாலர், அந்நியச் செலாவணி சேமிப்பு, ஏற்றுமதி வர்த்தகம் என்பதெல்லாம், இந்திய உழைக்கும் மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள் என்பது தான் இந்த நெருக்கடி நமக்கு உணர்த்தும் பாடம்!

**அமெரிக்க டாலருடன் மோதவேண்டும் என்றால், அது இறுதியாக அமெரிக்க இராணுவத்துடன் மோத வேண்டிய அபாயத்திற்குள் தள்ளிவிடும் என்பது மன்மோகன் சிங்குக்குத் தெரியும்.**

● திப்பு



படிப்பகம்

www.padippakam.com

## ஒப்பந்தத் தொழிலாளர்களின் உரிமை பறிப்புக்கெதிராக

# ஆர்ப்பாட்டம்

ஓசூர்-சிப்காட் 1 பகுதியில் உள்ள அசோக் லேலண்டு தொழிற்சாலை 1980 முதல் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் நிரந்தரத் தொழிலாளர்கள் 2332 பேரும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 1100 பேரும் வேலை செய்து வருகின்றனர். 2006-07 நிதியாண்டில் ரூ.441 கோடி இலாபம் ஈட்டிய இந்திறுவனம் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு ரூ.23,000 போனஸ் வழங்கியது. ஆலை நிர்வாகத்தால் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்கப்பட்டுள்ள போதிலும், ஒப்பந்ததாரர்கள் தொழிலாளர்களுக்கு போனசைக் கொடுக்காமல் முழுப்பணத்தையும் ஏப்பம் விட்டுள்ளனர்.

போனஸ் உரிமை மட்டுமல்ல; எந்த உரிமையும் அசோக் லேலண்டில் வேலை செய்யும் ஒப்பந்தத் தொழிலாளிக்குக் கிடையாது. 8 மணி நேர வேலை என்ற பெயரில் இவர்கள் 16 மணிநேரம் வேலை வாங்கப்படுகிறார்கள். ஒப்பந்ததாரர்கள் சுருட்டிக் கொண்டது போக, அற்பத்தொகைதான் இவர்களுக்குச் சம்பளமாகத் தரப்படும். ஓவர்டைம் வேலை செய்தாலும் இரட்டிப்புச் சம்பளம் முழுவதையும் ஒப்பந்தக்காரர்களே பறித்துக் கொள்வார்கள். மருத்துவ ஈட்டுறுதித் தொகை, சேமநல நிதி முதலானவற்றை சம்பளத்தில் பிடித்தம் செய்து கொள்ளும் இக்



கொள்ளையர்கள், அவற்றைப் பயன்படுத்த தொழிலாளிக்கு எந்த உரிமையும் தராமல் ஏய்க்கிறார்கள்.

ஒப்பந்தத் தொழிலாளர்கள் சங்கமாக அணிதிரண்டு போராடினால் மட்டுமே உரிமைகளை மீட்டெடுக்க முடியும் என்பதை உணர்த்தி, லேலண்டு ஆலையில் செயல்படும் பு.ஜ.தொ.மு. பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக ஒப்பந்தத் தொழிலாளர்களை அணிதிரட்டி மாபெரும் ஆர்ப்பாட்டத்தை ஆலை வாயில் முன்பாக 20.11.07 அன்று நடத்தியது. நிரந்தரத் தொழிலாளர்களையும் அணிதிரட்டி நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் ஓசூர் தொழிலாளர்களிடம் புதிய பார்வையையும் புதிய நம்பிக்கையையும் விதைத்துள்ளது. ஒப்பந்தத் தொழிலாளர்களுக்காக லேலண்டு ஆலை முன் இத்தகையதொரு ஆர்ப்பாட்டம் இதுவரை நடந்ததில்லை என்று குறிப்பிடுமளவிற்கு ஏறத்தாழ 400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்புடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் ஒரு தொடக்கம்தான்; அடுத்த கட்டப் போராட்டம் தொடரும் என முன்னணியாளர்கள் சூளுரைத்துள்ளனர்.

*— புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, ஓசூர்.*

# வாசகர் கடிதம்

• நாங்கள் பேருந்துகளில் அரசியல் பிரச்சாரத்துடன் பு.ஜ. இதழை விற்பனை செய்து கொண்டிருந்தபோது, ஒரு வாசகர் இதழை வாங்கிக் கொண்டு ரூ.5/- கொடுத்தார். விலை உயர்ந்துள்ளதை அவரிடம் நாங்கள் தெரிவித்த போது, பு.ஜ.வுக்கு என்ன விலை கொடுத்தாலும் தகும் என்று கூறி ரூ.7/- செலுத்தி இதழை ஆர்வத்தோடு படிக்கத் தொடங்கினார். விலையேற்றத்தால் இதழ் விற்பனை பாதிக்கப்படக்கூடும் என்று நாங்கள் கருதினோம். ஆனால், எந்தச் சிரமமுமின்றி விறுவிறுப்பாக இதழ் விற்பனையாகியுள்ளது. இது, பு.ஜ. இதழின் அரசியல் செல்வாக்கை மீண்டும் நிரூபித்துள்ளது.

**- பு.ஜ.செய்தியாளர், பென்னாகரம்.**

• குஜராத் இனப்படுகொலைகளைப் பற்றி இந்துவெறி பயங்கரவாதிகளிடமிருந்தே வாக்குமூலம் பெற்று ஆதாரத்துடன் வெளியிட்ட தெகல்கா வார இதழின் துணிவு பாராட்டத்தக்கது. முஸ்லிம் என்றாலே தீவிரவாதி, பயங்கரவாதி என்று இந்து வெறியர்களாலும் செய்தி ஊடகங்களாலும் முத்திரை குத்தப்பட்டுள்ள இன்றைய சூழலில், இந்து வெறியர்கள்தாம் மிகக் கொடிய பயங்கரவாதிகள் என்பதையும், வீதியில் இறங்கிப் போராடாமல் இப்பயங்கரவாதிகளை முறியடிக்க முடியாது என்பதையும் தொகுத்து விளக்கிய நவம்பர் இதழ் சிறப்பு.

ரேஷன் பொருட்களைக் கூட முறையாக விநியோகிக்க வக்கற்று கிடக்கும் சி.பி.எம்.-ஆட்சியாளர்கள், இப்போது போராடும் மக்களையே ஒடுக்கும் பாசிஸ்டுகளாகச் சீரழிந்து விட்டார்கள். இவர்கள் இன்னமும் கையில் ஏந்தியுள்ள செங்கொடியை உழைக்கும் மக்கள் பறித்தெடுக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

**- வாசகர் வட்டம், திருச்சி.**

• பு.ஜ. தலையங்கக் கட்டுரையும் குண்டு வைப்புகளில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க பயங்கரவாதிகள் எனும் தொடர் கட்டுரையும் இந்து பயங்கரவாத பேரபாயத்தை ஆதாரங்களுடன் உணர்த்தி, இப்பாசிச பயங்கரவாத கும்பலைத் தாக்கி அழிக்க அறைகூவுவதாக அமைந்துள்ளது. நீதிமன்றமும் நீதிபதிகளும் புனிதமானவர்கள் என்ற மாயையைத் தகர்த்து, நீதிபதிகளின் தேசவிரோத-மக்கள் விரோதத் தீர்ப்புகளை அம்பலப்படுத்திக் காட்டியது சிறப்பு. சென்னை மாநகர விரிவாக்கத் திட்டம் என்ற பெயரில் ஏழை மக்களை நகரை விட்டு வெளியேற்றும் சதியைத் தோலுரித்துக்காட்டி, இம்மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராக உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று உணர்த்திய கட்டுரை எடுப்பாக அமைந்துள்ளது.

**- வாசகர் வட்டம், ஓசூர்.**

• நவம்பர் இதழின் முன் அட்டை இந்துவெறி பயங்கரவாதத்தின் கோரத்தைப் படம் பிடித்துக் காட்டியது என்றால், பின் அட்டை சாதி வெறி பயங்கரவாதத்தின் கொடூரத்தைப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. இத்தீண்டாமைக் கொடுமைகளை ஓட்டுக் கட்சிகளின் சமூக நீதிக் கொள்கையால் ஒழித்துவிட முடியாது என்பதற்கு இரட்டைக் குவளை முறையும், சமயநல்லூர் சுரேஷ்குமார் மீதான தாக்குதலுமே சாட்சி.

**- செல்லப்பாண்டி, தேனி.**



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்காவுக்கு எரிபொருள் ஏழைக்குப் பட்டினிச் சாவு

**புவி வெப்பம் உயர்வதைத் தடுப்பதற்காக உயிரி-எரிபொருளைப் பயன்படுத்துவது என்ற ஏகாதிபத்தியத் திட்டம் உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வருகிறது.**

அமெரிக்க ஐக்கிய நாடுகளை ஒட்டி அமைந்துள்ள மெக்சிகோ நாட்டு மக்களின் அன்றாட உணவான மக்காச் சோளம் மற்றும் அதிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகள் அசாதாரணமான அளவிற்கு உயர்ந்ததையடுத்து, அந்நாட்டில் கடந்த ஆண்டு உணவுக் கலகம் ஏற்பட்டது. பட்டினி கிடக்க மறுத்து, அந்நாட்டு மக்கள் நடத்திய போராட்டங்கள், மக்காச் சோளத்தில் இருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காகத் தனிச் சட்டம் போட வேண்டிய நிலைக்கு, மெக்சிகோ அரசைத் தள்ளியது.

மெக்சிகோவுக்கு அருகில் அமைந்துள்ள பிரேசில், குவாதிமாலா நாடுகளிலும் கூட, இதே நிலைமை தான். குவாதிமாலாவில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் மக்காச் சோளத்தின் விலை 37% அதிகரித்ததால், அந்நாட்டு ஏழை மக்கள் அரைகுறை பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள சுவாசிலாந்து நாட்டு மக்கள் உணவாகப் பயன்படுத்தும் ''கசாவா'' என்றொரு கிழங்கு வகைக் கிடைப்பதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஏறத்தாழ 40 சதவீத மக்கள் முழுப்பட்டினி கிடைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

உணவுப் பொருட்களின் விலையேற்றமும், தட்டுப்பாடும் ஏமன், பர்கினோ ஃபாசோ உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உணவுக் கலகங்கள் ஏற்படும் நிலையைத் தோற்றுவித்துள்ளன.

அர்ஜெண்டினா நாட்டில் இறைச்சியைவிடத் தக்காளியின் விலை அதிகமாகிப் போனதால், விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக, அந்நாட்டு மக்கள் தக்காளியைப் புறக்கணிக்கும் போராட்டத்தை நடத்தியிருக்கின்றனர்.

இத்தாலியில் உணவுப் பொருள் விலையேற்றத்தைக் கண்டித்து, பஸ்தா என்ற உணவுப் பொருளை ஒருநாள் மட்டும் புறக்கணிக்கும் போராட்டம் நடந்திருக்கிறது.

பால், ரொட்டி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை, அடுத்த ஆண்டு சனவரி 31-ந் தேதி வரை உயர்த்தக் கூடாது என ரசியாவில் அரசாங்கத் தடை உத்தரவு போடப்பட்டுள்ளது.


''கடந்த ஓராண்டுக்குள் மக்காச் சோளத்தின் விலை 50 சதவீதமும்; அரிசியின் விலை 20 சதவீதமும்; கோதுமையின் விலை இரண்டு மடங்காகவும் அதிகரித்துள்ளதாக''க் குறிப்பிட்டுள்ள ஐ.நா மன்றம், ''உலக அளவில் தானியக் கையிருப்பு 57 நாட்களுக்கு மட்டுமே இருப்பதாகவும்; கடந்த 25 ஆண்டுகளில் இது போன்றதொரு மோசமான சூழ்நிலை ஏற்பட்டதில்லை'' என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், உலகின் ஏழை மக்கள் பட்டினியை நோக்கித் தள்ளப்படுகின்றனர். இதற்கான ஆரம்ப கட்ட அறிகுறிகள் ஜமைக்கா, நேபாளம், பிலிப்பைன்ஸ், ஆப்பிரிக்காவில் உள்ள துணை சகாரா நாடுகளில் தென்படுவதாகக் கூறப்படுகிறது. எனினும், பங்குச் சந்தை வீழ்ச்சியின் துயரம் விவாதிக்கப்படும் அளவிற்கு, உலக அளவில் எழுந்துவரும் உணவுப் பொருள் தட்டுப்பாடும், அவற்றின் விலையேற்றமும் விவாதிக்கப்படுவதில்லை.

•••


கடந்த இரண்டு ஆண்டுகளாக உணவுப் பொருட்களின் விலை விஷம் போல ஏறி வருவதற்கும், உணவுப் பொருட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்கும் வெள்ளம் / வறட்சி போன்ற நொண்டிச் சாக்குகளைக் கூறி ஆளும் கும்பல் தப்பிவிட முடியாது. மாறாக, ''உயிரி-எரிபொருள்'' (Bio-fuel) என்ற ஏகாதிபத்திய நாடுகளின் தான்தோன்றித்தனமான திட்டத்தைத்தான் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும்.

**மக்காச் சோளம் உயிரி-எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுவதால், உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.**





படிப்பகம்




**புவி வெப்பம் உயர்வைத் தடுத்து நிறுத்துவது குறித்து நடந்த சர்வதேச மாநாடுகள் மற்றும் போராட்டங்கள்.**

உயிரி எரிபொருள் தயாரிப்புக்காக மக்காச்சோளம், சோயா, கரும்பு, சில வகையான கிழங்குகள், எண்ணெய் வித்துகள் போன்ற விவசாய விளைபொருட்கள் திருப்பிவிடப்பட்டதால் தான் இந்த விலையேற்றமும், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளன.

இயற்கையாகக் கிடைக்கும் கச்சா எண்ணெய், நிலக்கரி போன்ற மரபு சார்ந்த எரிபொருட்களைப் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொண்டு, அதனிடத்தில் தாவரங்களில் இருந்து எடுக்கப்படும் உயிரி-எரிபொருளைப் பயன்படுத்துவதை அதிகரிக்க வேண்டும் என ஏகாதிபத்திய நாடுகள் உபதேசிக்கத் தொடங்கியுள்ளன. இதன் மூலம், ''சுற்றுப்புறச் சூழல் மாசு அடைவதைத் தடுக்கலாம்; புவியின் வெப்பம் உயர்ந்து கொண்டே போவதைத் தடுக்கலாம்; கச்சா எண்ணெய் இறக்குமதி; அதனின் விலை உயர்வு ஆகியவற்றால் தேசியப் பொருளாதாரம் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம்'' என உயிரி-எரிபொருள் பயன்பாட்டுக்கான காரணங்கள் அடுக்கப்பட்டு, உயிரி-எரிபொருளுக்கு ஆதரவாக உலகெங்கிலும் தீவிரமாகப் பிரச்சாரம் நடந்து வருகிறது.

ஏழை நாடுகளைவிட, அமெரிக்க ஏகாதிபத்தியமும், ஐரோப்பிய யூனியன் நாடுகளும்தான் உயிரி-எரிபொருள் பயன்பாட்டினை அதிகரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றன. ''ஐரோப்பிய யூனியன் நாடுகளில் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் எரிபொருளில் 2010-க்குள் 5.75 சதவீதமும்; 2015-க்குள் 8 சதவீதமும் உயிரி-எரிபொருளைப் பயன்படுத்த வேண்டும்'' என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ''இந்த நூற்றாண்டின் நடுப்பகுதிக்குள், அமெரிக்காவில் பயன்படும் எரிபொருளில் 30 சதவீதம், உயிரி-எரிபொருளாக இருக்க வேண்டும்'' என அந்நாட்டு அதிபர் ஜார்ஜ் புஷ் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்காவிற்கும், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் தேவைப்படும் இந்த உயிரி-எரிபொருளைத் தயாரித்துக் கொடுக்கும் சமூகப் பொருளாதாரக் ''கடமை'' ஏழை நாடுகளின் மீது சுமத்தப்பட்டு, அதற்கான திட்டங்களும் தயாராகி வருகின்றன.

- உயிரி-எரிபொருளான எத்தனால் தயாரிப்பில், 1 சதவீதமாக உள்ள மத்திய அமெரிக்க நாடுகளின் பங்கை, 2020-க்குள் 5 சதவீதமாக உயர்த்தும் திட்டத்தை அறிவித்துள்ள ''ஐ.டி.பி.'' என்ற அமெரிக்க வங்கி, இதற்காக எட்டு இலட்சம் கோடி ரூபாய் மூலதனமிடப் போவதாகக் குறிப்பிட்டுள்ளது.

- அமெரிக்காவிற்கும், மத்திய அமெரிக்க நாடுகளுக்கும் இடையே கையெழுத்தாகியுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில், உயிரி-எரிபொருள் தயாரிப்புக்கும், விற்பனைக்கும் இறக்குமதி வரி விலக்கு உள்ளிட்டுப் பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

- அமெரிக்காவின் தேசங்கடந்த தொழில்கழகமான கார்கில், பிரேசில், எல்சல்வடார் ஆகிய நாடுகளுடன் இணைந்து உயிரி-எரிபொருள் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவும் ஒப்பந்தங்களைப் போட்டுள்ளது.

- இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த டி1ஆயில் நிறுவனம், ஜமைக்கா நாட்டில் ஒப்பந்த விவசாய அடிப்படையில் காட்டாமணக்குப் பயிரிடுவதை, 4,000 ஹெக்டேர் பரப்பளவில் இருந்து அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் 1,74,000 ஹெக்டேர் பரப்பளவிற்கு விரிவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

- இந்தியாவில், 1.4 கோடி ஹெக்டேர் பரப்பளவில் காட்டாமணக்கு பயிரிடும் திட்டமொன்றை இந்திய அரசு தீட்டி வருவதாகக் கூறப்படுகிறது.

- மலேசியாவிலும், இந்தோனேஷியாவிலும் ''பாமாயில்'' உற்பத்திக்காக விளைவிக்கப்படும் கூந்தல் பனை விளைச்சலில் 40% சதவீதத்தை உயிரி-எரிபொருள் உற்பத்திக்காக ஒதுக்கப் போவதாகவும்; பிரேசில் நாட்டில் விளையும் கரும்பில் 50 சதவீதத்தை எத்தனால் தயாரிக்க ஒதுக்கப் போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி, கோதுமை, சோயா ஆகிய உணவு தானியங்களிலிருந்தும் வணிக ரீதியாக உயிரி-எரிபொருள் தயாரிக்க முடியுமா? என்பது குறித்த ஆராய்ச்சிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

●●●

உயிரி-எரிபொருள் மாசற்ற, சுத்தமான எரிபொருள் (Clean energy) தானா? இதனை எரிப்பதால் சுற்றுப்புறச் சூழல் மாசு அடையுமா, அடையாதா? என்பதெல்லாம் அறிவியல்பூர்வமாக விவாதித்துத் தீர்க்க வேண்டிய நிலையில்தான் உள்ளன. எனினும், ஏகாதிபத்தியங்களால் முன் தள்ளப்படும் இந்தத் திட்டம், ஏழை நாடுகளின் விவசாயத்தின் மீதும், ஏழை மக்களின் மீதும் பாரதூரமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு இப்பொழுதே ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

''ஒரு காரின் டாங்கை நிரப்பும் அளவிற்கு உயிரி-எரிபொருளைத் தயாரிக்கத் தேவைப்படும் உணவுப் பொருளைக் கொண்டு, ஒரு ஏழையின் ஓராண்டு உணவுத் தேவையை நிறைவு செய்து விட முடியும்'' எனக் கூறப்படுகிறது. அதனால்தான் இந்தத் திட்டத்தை எதிர்த்துப் போராடும் இலத்தீன் அமெரிக்க மக்கள், ''அமெரிக்காவில் கார்கள் ஓடுவதற்கு நாங்கள் பட்டினி கிடக்க வேண்டுமா?'' என்ற கேள்வியை எழுப்பி வருகின்றனர்.

- அமெரிக்காவில் கடந்த ஆண்டு விளைந்த மொத்த மக்காச் சோள விளைச்சலில் 20 சதவீதம் (1.4 கோடி டன்) உயிரி-எரிபொருளான எத்தனால் தயாரிப்புக்குத் திருப்பிவிடப்பட்டதன் விளைவாக, அந்நாட்டில் மக்காச் சோளத்தின் விலை கடந்த ஓராண்டுக்குள் 50 சதவீதம் அதிகரித்திருக்கிறது.

- ஐரோப்பிய யூனியன் நாடுகளில் விளையும் ஒருவித கடுகு எண்ணெய் வித்து, உயிரி-எரிபொருள் தயாரிப்புக்கும் பயன்படுத்தப்படுவதால், அதன் விலை 2005-ஆம் ஆண்டில் 75 சதவீதம் அதிகரித்தது.

- ஆப்பிரிக்க நாடான சுவாசிலாந்தில் விளையும் உணவுப் பொருளான கசாவா கிழங்கு உயிரி-எரிபொருள் தயாரிப்புக்காக ஏற்றுமதி செய்யப்பட்டதால்தான், அந்நாட்டைச் சேர்ந்த 40 சதவீத மக்கள் பட்டினி கொடுஞ்சிறைக்குள் தள்ளப்பட்டனர்.

தற்பொழுது கிடைக்கும் அதிகாரபூர்வ புள்ளி விவரத்தின்படி, உலகில் ஏறத்தாழ 85 கோடி மக்கள் அரை குறைப் பட்டினியோடுதான் காலத்தை ஓட்டுகின்றனர். உயிரி-எரிபொருள் தயாரிப்புக்காக உணவுப் பொருட்கள் திருப்பி விடப்படுவது அதிகரித்துக் கொண்டே செல்லும் பொழுது, உணவுப் பொருட்களின் விலை மட்டும் உயராது. இந்தப் பட்டினி பட்டாளத்தின் எண்ணிக்கையும் தற்பொழுது உள்ளதைவிடப் பல மடங்காக அதிகரித்துவிடும்.

**உணவுப் பொருளை, உலகில் ஓடும் 80 கோடி கார்களின் எரிபொருள் தேவைக்குப் பயன்படுத்துவதா? அல்லது உலகில் வாழும் 200 கோடி ஏழை மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்துவதா? என்ற கேள்வியில் இருந்துதான் உயிரி-எரிபொருள் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டும்.**

உணவுப் பொருளை, உலகில் ஓடும் 80 கோடி கார்களின் எரிபொருள் தேவைக்குப் பயன்படுத்துவதா? அல்லது உலகில் வாழும் 200 கோடி ஏழை மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்துவதா? என்ற கேள்வியில் இருந்துதான் உயிரி-எரிபொருள் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டும்.

உலகின் எரிபொருள் தேவையை ஈடுகட்டவும்; சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைத் தடுக்கவும்; புவி வெப்பம் உயர்வதைத் தடுக்கவும் அறிவியல் பூர்வமான வேறு வழிகள் இருக்கும் பொழுது, ஏழை மக்களைப் பட்டினிக்குள் தள்ளிவிட்டுத்தான் இதனைச் சாதிக்க முடியும் என்பது மனிதாபிமானத்திற்கு எதிரான வக்கிரத் திட்டமாகவே இருக்க முடியும்.

•••

பெட்ரோல், டீசல், நிலக்கரி போன்ற மரபுசார்ந்த எரிபொருளுக்கு முற்றிலும் மாற்றீடாக உயிரி-எரிபொருள் அமைந்து விட முடியாது. ''இந்தப் புவியில் உள்ள அனைத்து விவசாய நிலங்களிலும், வீரிய மகசூலைத் தரும் உயிரி-எரிபொருள் தாவரங்களைப் பயிரிட்டால் கூட, அது, உலகின் கச்சா எண்ணெய் தேவையில் வெறும் 20 சதவீதத்தை மட்டுமே பூர்த்தி செய்ய முடியும்'' என்பதை உயிரி-எரிபொருள் ஆதரவாளர்கள் கூட ஏற்றுக் கொள்கிறார்கள்.

புவியின் நிலப்பரப்பில் 40 சதவீதம் விவசாய நிலங்களாகவோ, மேய்ச்சல் நிலங்களாகவோ, பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளாகவோ இருந்து வருகின்றன. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் உயிரி-எரிபொருள் தேவையை ஈடு செய்யும் வண்ணம் உயிரி-எரிபொருள் தாவரங்களை வளர்ப்பதற்குப் புதிதாக நிலம் எதுவும் இல்லாததால், ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்துவரும் இந்த 40 சதவீத நிலங்களைத்தான் ஆக்கிரமிக்க வேண்டியிருக்கும்.

இது, பாரம்பரிய விவசாயம் அழிவதற்கும், வனப் பகுதிகள் அழிக்கப்படுவதற்கும் ஈட்டுச் செல்வதோடு, சுற்றுப்புறச் சூழல், பல்லுயிர் பெருக்கம் (Bio-Diversity) ஆகியவற்றில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என இயற்கை ஆர்வலர்கள் எச்சரிக்கிறார்கள்.

போக்குவரத்து வாகனங்களில் பயன்படுத்தப்படும் பெட்ரோல் - டீசலில், 10 சதவீதம் அளவிற்கு எத்தனால் கலக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் திட்டம் நிறைவேற வேண்டுமானால், அதனைத் தயாரிப்பதற்குத் தேவையான உயிரி-எரிபொருள் தாவரங்களைப் பயிரிட அமெரிக்காவின் மொத்த விவசாய நிலப்பரப்பில் 30 சதவீதமும்; ஐரோப்பாவின் மொத்த விவசாய நிலப்பரப்பில் 50 சதவீதமும் தேவைப்படும். அதாவது, பாரம்பரிய விவசாயத்தை அழிப்பதன் மூலம் மட்டுமே, அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளின் தேவையை ஈடு செய்ய முடியும்.

ஒரு ஹெக்டேர் நிலத்தில் வளர்க்கப்படும் கரும்பில் இருந்து தயாரிக்கப்படும் உயிரி-எரிபொருளான எத்தனால், ஓர் ஆண்டில் 13 டன் கரியமில வாயு, வாயு மண்டலத்தில் கலப்பதைத் தடுக்கும்; அதேசமயம், அந்த ஒரு ஹெக்டேர் நிலத்தில் வளர்ந்து நிற்கும் காடோ, 20 டன் கரியமில வாயுவைக் கிரகித்துக் கொண்டு, சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் எனக் கூறப்படுகிறது.

உயிரி-எரிபொருளைத் தயாரிக்கத் தேவைப்படும் தாவரங்களை வளர்க்க மண்ணில் கொட்டப்படும் இரசாயன உரங்களையும், பூச்சி மருந்துகளையும் கணக்கில் கொண்டால்; தாவரத்தில்

இருந்து உயிரி-எரிபொருளைப் பிரித்து எடுத்துச் சுத்திகரிப்பதற்கும், அதனைப் பிற பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கும் தேவைப்படும் எரிபொருளைக் கணக்கில் கொண்டால், உயிரி-எரிபொருளால் சுற்றுப்புறச் சூழலுக்குக் கிடைக்கும் பலன் பெரிதாக எதுவும் இராது என்றும் கூறப்படுகிறது. இதிலிருந்தே, புவியின் வெப்பம் உயர்வைத் தடுப்பதற்கும், சுற்றுப்புறச் சூழல் மாசு அடைவதைத் தடுப்பதற்கும் உயிரி-எரிபொருளைவிட, வனப்பகுதிகளைப் பெருக்குவதையும், பாதுகாப்பதையும் முக்கியமானதாகக் கருத முடியும்.

ஆனால், உயிரி-எரிபொருளை உற்பத்தி செய்வதற்காக தென் அமெரிக்க நாடுகளில் வளர்க்கப்படும் கரும்பு மற்றும் சோயா விவசாயத்தால் அமேசான் காடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்தோனேசியாவிலும், மலேசியாவிலும் கூந்தல் பனை பயிரிடும் நிலப்பரப்பை அதிகரிப்பதற்காகக் காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகளின் அழிவு, குறிப்பாக அமேசான் மழைக் காடுகளின் அழிவு புவியின் வெப்பத்தை 0.6 டிகிரி முதல் 1.5 டிகிரி சென்டிகிரேடுவரை அதிகரிக்க வைக்கும் எனச் சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கிறார்கள்.

புவியின் வெப்பம் உயர்வதைத் தடுக்கும் நோக்கத்திற்காக உலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ள கியோடோ ஒப்பந்தத்தில் இன்றுவரை கையெழுத்துப் போட மறுத்துவரும் நாடு அமெரிக்கா. இந்த ஒப்பந்தம் கையெழுத்தானபொழுது, ''மற்ற நாடுகளுக்காக, எங்கள் மக்களின் (ஆடம்பர) வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள முடியாது'' எனக் கூறி, ஒப்பந்தத்தை எதிர்த்து அறிக்கை விட்டவர் சீனியர் புஷ். அப்படிப்பட்ட அமெரிக்கா, புவி வெப்பம் உயர்வதைத் தடுக்க உயிரி எரிபொருள் தேவை என வாதாடுகிறது. ஏழை நாடுகளின் ஆளும் கும்பல்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கொண்டு, உயிரி-எரிபொருள் தாவரங்களைப் பயிர் செய்வதன் மூலம், விவசாயிகளின் ஏழ்மையை விரட்டிவிட முடியும் என ஆசை காட்டுகிறார்கள். தங்க ஊசி என்பதற்காகக் கண்ணைக் குத்திக் கொள்ளவா முடியும்?

● செல்வம்

### போலீசின் அடாவடி, பகற்கொள்ளை, பொய்வழக்கு...

# ஆட்டோ தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

மதுரை அருகேயுள்ள உசிலம்பட்டியில், கடந்த சில மாதங்களாகப் போலீசார், ஆட்டோ ஓட்டுநர்களைப் பிடித்து உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டுவதாகப் பொய் வழக்குப் போடுவதும், ஆட்டோவைக் கைப்பற்றி போலீசு நிலையத்தில் வைத்துக் கொள்வதும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. வழக்கு மன்றத்தில் ஆட்டோ தொழிலாளர்கள் பெர்மிட்டைக் காட்டி, தாங்கள் சட்டப்படி அனுமதி பெற்று ஆட்டோ ஓட்டுவதாகக் கூறினாலும் அந்நீதிபதிகள் அவற்றை ஏற்க மறுத்து கண்ணை மூடிக் கொண்டு ரூ. 2,000 முதல் ரூ. 3,000 வரை அபராதம் விதிப்பதும் தொடர்கிறது. போலீசாரும் நீதிபதிகளும் கூட்டுச் சேர்ந்து நடத்தும் இச்சட்டவிரோதக் கொள்ளையால் பாதிக்கப்பட்டுள்ள ஆட்டோ தொழிலாளர்கள் ஏராளம்.

இச்சட்டவிரோத வழிப்பறிக் கொள்ளைக்கு எதிராகக் குமுறிக் கொண்டிருந்த ஆட்டோ தொழிலாளர்கள் தோழர் செல்லபாண்டி தலைமையில் திரண்டு அனைவரையும் ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்புச் சங்கத்தில் அணிதிரட்டி, மனித உரிமை பாதுகாப்பு மையத்திடம் (HRPC) முறையிட்டு உதவி கோரினர். அதன் தொடர்ச்சியாக, மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டக் கிளையின் சார்பில், ஆட்டோ தொழிலாளர்கள் மீதான போலீசாரின் அடாவடித்தனம், பகற்கொள்ளை, பொய்வழக்குகளை எதிர்த்து உசிலம்பட்டியில் 3.11.07 அன்று எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடந்தது. மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் செயற்குழு உறுப்பினரான ரவி தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் துணைச் செயலாளர் வாஞ்சிநாதன், திருச்சி ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்க செயலாளர் முருகேசன், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் சிவா, உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணியின் செயலாளர் குருசாமி மற்றும் வழக்குரைஞர்கள், ஆட்டோ தொழிலாளர்கள் கண்டன உரையாற்றினர்.



திரளான ஆட்டோ தொழிலாளர்களின் பங்கேற்புடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், தொழிலாளர்கள் சங்கமாகத் திரண்டால் மட்டுமே உரிமைகளுக்காகப் போராட முடியும் என்பதை உணர்த்தி, போலீசு கும்பலின் அடாவடித்தனங்களுக்கு எதிரான போராட்டத்தின் நம்பிக்கையான தொடக்கமாக அமைந்தது.

–பு.ஜ. செய்தியாளர்கள்,
உசிலம்பட்டி.



படிப்பகம்

www.padippakam.com

# உழைத்தவர் மெலிந்தனர் வலுத்தவர் கொழுத்தனர்

பத்திரிக்கைகள் முதல் ப.சிதம்பரம் வரை நமது பொருளாதார வளர்ச்சி வீதம் 9 சதவீதத்தைத் தொடப் போகிறது எனச் சொல்கிறார்கள். பங்குச் சந்தைக் குறியீட்டெண் 20 ஆயிரத்தைத் தொட்டுவிட்டது. இந்திய தொழில் நிறுவனமான டாட்டா, அயல்நாட்டு நிறுவனமான கோரஸ்ஸை விலைக்கு வாங்கி விட்டது. அம்பானி உலகிலேயே பெரிய பணக்காரராகி விட்டார். இந்தியாவில் ரூ.4 கோடிக்கு மேல் சொத்து வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தொட்டு விட்டது.

மேலும் ''புதிதாய் உருவாக்கப்படும் நாற்கரச் சாலைகள். மேம்பாலங்கள், மெட்ரோ ரயில் போன்ற உள்கட்டுமானத் திட்டங்களும் புதிது புதிதாய் வந்திறங்கும் நுகர்பொருட்களும் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியைத்தானே காட்டுகிறது. இந்த வளர்ச்சியும் கடந்த 16 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உலகமய, தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளின் பலன்கள்தானே'' என்று ஆளும் வர்க்கம் வாதிடுகிறது.

ஆனால், 1991-இல் இருந்து இன்றுவரை தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உலகமய, தாராளமயப் பொருளாதாரக் கொள்கையால் வறுமையை ஒழிக்க முடிந்திருக்கிறதா?

பட்டினியால் வாடும் மக்களின் தன்மையை அளவிடும் சர்வதேச அளவிலான குறியீட்டெண்ணின் அடிப்படையில் இந்தியா. எத்தியோப்பாவை விடத் தாழ்ந்து போயுள்ளது. சீனா (47-வது இடம்), பாகிஸ்தானை விடவும் (88 ஆவது இடம்) இந்தியா (94 ஆவது இடம்) மிகவும் பின்னோக்கிச் சென்றுக்கொண்டிருக்கிறது.

மகப்பேற்றின்போது போதிய மருத்துவ வசதி இன்மையால் இறந்து போகும் இந்தியப்பெண்களின் எண்ணிக்கை மட்டும் ஆண்டுக்கு 1.17 லட்சம். வயது வந்த இந்தியர்களில் 48.5% பேர்கள் ஊட்டச்சத்துக்குறைவானவர்கள். 3 வயதுக்குக் குறைவான குழந்தைகளில் 47% பேர்களுக்கு வயதுக்கேற்ற உயரமில்லை. 15.5% பேர்களுக்கு உயரத்துக்கேற்ற எடை இல்லை என்பதெல்லாம் ஆய்வுகளில் தெரியவந்தவை.

சென்னை வளர்ச்சி நிறுவனம் அண்மையில் செய்துள்ள ஆய்வு ஒன்று, 1997 முதல் 2005 வரை இந்தியா முழுவதும் விவசாயிகளிடம் தற்கொலை விகிதம் அதிகரித்துள்ளது என்றும் உயிரை மாய்த்துக்கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை மட்டும் ஒன்றரை லட்சம் என்றும் சொல்கிறது. மராட்டியம், கருநாடகம், ஆந்திரம், மத்தியப் பிரதேசம் ஆகிய 4 மாநிலங்களில் மட்டும் 89,000 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்பதை அரசே ஒத்துக் கொள்கிறது. இந்தப் பொருளாதாரக் கொள்கையால் தற்கொலை விகிதம் 27% அதிகரித்திருப்பதுதான் சாதனை.

32 ஆயிரம் பேர்கள் தற்கொலை செய்து கொண்ட மராட்டிய மாநிலத்தில்தான் 4 கோடிக்கு மேல் சொத்து வைத்துள்ள பணக்காரர்கள் 25 ஆயிரம் பேர் வாழும் மாநகரமான மும்பை உள்ளது என்பது வேதனை கலந்த உண்மை.

விவசாயத்துக்கு 1990-இல் வங்கிகள் வழங்கிய கடன் 13.8 சதவீதமாக இருந்தது. அதே வங்கிகள் 2001-02 நிதியாண்டில் வழங்கிய கடனோ 7.2 சதவீதம் என்று ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள தகவலில் இருந்தே, ஆட்சியாளர்களுக்கு விவசாயத்தின் மீதுள்ள அக்கறை தெளிவாகப் புரியும்.

விவசாயிகளின் குடும்பத்தில் யாருக்காவது நோய்நொடி என்று வந்து விட்டால் மருத்துவமாவது பார்க்க முடிகிறதா? உலக சுகாதார நிறுவனம் தரும் அறிக்கை இந்தியாவின் பொது மருத்துவத்தின் தன்மையை அம்பலப்படுத்துகிறது. இந்தியாவில் 6 மாநிலங்களில் சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி, மருத்துவம் தனியார்மயமானதன் விளைவாக மருத்துவச் செலவால் மட்டும் 16% மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே போயுள்ளனர் என்றும் 12% பேர் தங்கள் குடும்பத்தின் மருத்துவச் செலவிற்காகச் சொத்தை விற்றுள்ளனர் என்றும், 43% பேர் நிரந்தரக் கடனாளிகளாகியுள்ளனர் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இத்தகைய பன்முனைத்தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் நிலத்தை கந்துவட்டிக்காரர்களுக்கு எழுதிக் கொடுத்து விட்டு நகரங்களுக்குத் தப்பி ஓடிக்கொண்டுள்ளனர் விவசாயிகள். 2000-த்தில் இந்தியப் பொருளாதாரத்

மூன்றில் ஒருவர் பரம ஏழை

## 91 கோடி இந்தியர்களின் தின வருமானம் ரூ.80க்கும் கீழ்!

**உலக வங்கி சொல்கிறது**

புதுடெல்லி, அக். 18: இந்திய மக்களில் 80 சதவீதம், அதாவது 91.3 கோடி பேருக்கு, தினசரி வருமா குறைவான செலவில் முடிந்து விடுகிறது. இதன் படி பார்த்தால், உலக ஏழைகளில் மூன்றில் ஒரு இராமங்களில் மாதத்துக்கு ரூ.356க்கும் குறைவாக வருமானம் உள்ளவர்கள் வறுமைக் கோட்டுக்கு



படிப்பகம்

www.padippakam.com

துக்கு விவசாயத்தின் பங்களிப்பு 25.3 சதமாக இருந்த நிலை சரிந்து, இன்று அது 19.9 சதவிகிதமாகி, இன்னும் கீழே போய்க்கொண்டிருக்கிறது.

விவசாயத்தைப் படிப்படியாய் தலைமுழுகி விடுவது என்ற அடிப்படையில், 1991-இல் விவசாயத் துறையில் அரசு செய்த முதலீடு 3.4 சதவிகிதமாக இருந்த நிலைமை மாறி, அதை 2001-இல் 1.3 சதவிகிதமாகச் சுருக்கி, விவசாயிக்கு சுருக்குக் கயிறைத் திரித்துத் தந்தது.

தேசிய ஊட்டச்சத்து நிறுவனம், ஒரு தனிமனிதன் ஆண்டொன்றுக்கு உண்ணும் தானியத்தின் எடை குறைந்தபட்சம் 157 கிலோ இருக்க வேண்டும் என நிர்ணயித்துள்ளது. 1991-இல் 161 கிலோவாக இருந்த இந்த அளவு, தாராளமயத்தின் காலகட்டத்தில் 144 கிலோவுக்கும் கீழே போய்க் கொண்டுள்ளது.

உடல் உழைப்புக்கு அவசியமாகத் தேவைப்படும் புரதத்தை வழங்கும் பருப்பின் நுகர்வோ 15.2 கிலோவில் இருந்து 10.6 கிலோவாகச் சரிந்துள்ளது. உலக அளவில் நாளொன்றுக்கு தனிநபர் உண்ணும் உணவின் கலோரி மதிப்பு 3206. ஆனால் இந்திய மக்களில் ஏழைகளான 30 சதவிகிதம் பேர் உண்பதோ வெறும் 1626 கலோரிதான் என்று புள்ளி விவரங்கள் எச்சரிக்கின்றன என்றால், இந்திய ஏழைகளின் வாழ்க்கை என்பதே ஏதோ உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதுதானே பொருள்?

மக்களை பட்டினிச் சாவுக்கு தள்ளிய இந்த நாசகாரக் கொள்கை, தொழில் துறையில் மட்டும் என்ன சாதித்திருக்கிறது?

உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்பு 1970-களில் 28.3 சதவிகிதமாக இருந்தது. அதுவே 80-களில் 16.9 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை இதனைத் தூக்கி நிறுத்தியதா? அது உருவாக்கிய வேலை வாய்ப்போ 1.7 சதவிகிதம் மட்டுமே.

அந்நிய முதலீடு உருவாக்கியதாய்ச் சொல்லப்பட்ட வேலைவாய்ப்புகளின் சதவிகிதம் என்ன? வெறும் 0.2 சதவிகிதம் மட்டுமே. அதுவும் உயர்கல்வி கற்றலை முன்நிபந்தனையாக முன்வைக்கும் தகவல் தொழில் நுட்பத் துறையில் மட்டும்தான் வேலைவாய்ப்பை அது உருவாக்கியது. இத்துறையினால் உள்நாட்டு உற்பத்திக்கு எத்தனை சதவிகிதம் பங்களிப்பு உள்ளது? வெறும் 3.2 சதம் மட்டுமே.



**கல்விக் கட்டணம் செலுத்த முடியாததால், படிப்பைப் பாதியில் நிறுத்த வேண்டிய துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொண்ட விவசாயக் குடும்பத்தை சேர்ந்த இளஞ்சிறுமி ஜெயலெட்சுமி பாலேமின் படத்தைக் காட்டும் அச்சிறுமியின் பாட்டி மங்கம்மா மற்றும் தம்பி சோமசேகர்.**

தாராளமயம் புதிது புதிதாய் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது என்று கதை சொல்கின்றன முதலாளித்துவப் பத்திரிக்கைகள். எப்படிப்பட்ட வேலைகள் என்று இந்தியாடுடேயைக் கேளுங்கள். நட்சத்திர விடுதிகளில் ஓட்கா சாராயத்தை பிராந்தியுடனும், ஒயினுடனும் எப்படிக் கலக்கி காக்டெயில் தயாரிப்பது என்பது பற்றிய புதுவகை டிப்ளமோ படிப்பை படித்துவிட்டு, மதுவகைகளை வாடிக்கையாளர்களுக்கு ஊற்றிக்கொடுக்க பெண்களுக்கு அது வழி சொல்கிறது.

இந்திய மக்களில் 91 கோடி பேர்களின் தினசரி வருமானம் 80 ரூபாய்க்கும் கீழே என்றும், அந்தக் கொஞ்ச நஞ்ச பணத்துக்குள் தங்கள் உணவு, வீட்டு வாடகை, மருத்துவம், குழந்தைகளுக்கான கல்வி ஆகிய அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் பார்த்துக் கொள்ளும்படியான அவல நிலைக்குத் தள்ளி உள்ளது என்றும் உலக வங்கியே குறிப்பிடுகிறது.

**திருமண வீட்டில் எஞ்சிய உணவைத் தங்கள் குடும்பத்தின் அடுத்த வேளை சாப்பாட்டுக்கு எடுத்துச் செல்லும் சென்னை-திருவொற்றியூரைச் சேர்ந்த சிறுவர்கள்.**



ஆனால் அதே நேரத்தில், நாட்டில் உள்ள 10 சதவீதப் பணக்காரர்கள் இந்நாட்டின் 52 சதவீத சொத்துக்களையும் வளங்களையும் அனுபவிக்கின்றனர். அடித்தட்டில் இருக்கும் 10 சத ஏழைகள் அனுபவிக்கும் வளங்களோ வெறும் 0.21 சதமாகச் சுருங்கி உள்ளது.

110 கோடி இந்திய மக்களில் வெறும் ஒரு லட்சம் பேரை மட்டும் கோடீஸ்வரர்களாக்கி, பல பத்து கோடிப்பேரை ஐந்துக்கும் பத்துக்கும் அல்லாடுபவர்களாக மாற்றியிருப்பதுதான் தனியார்மயம்-தாராளமயக் கொள்கையின் சாதனை!

● செங்கதிர்



படிப்பகம்

www.padippakam.com

## ஈராக்:

# மலிவானதோ மக்களின் உயிர்?

**அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களால் ஈராக்கில் இறக்கிவிடப்பட்டுள்ள தனியார் கூலிப்படைகள், ஈராக்கிய மக்களைக் கொலை செய்வதைப் பொழுதுபோக்காகக் கருதுகின்றன.**


விர்ரென்று ஒலிப்பானை ஒலித்தவாறு ஒரு வாகனம் மக்கள் நெருக்கம் மிகுந்த அந்த வீதியினுள் நுழைகிறது. அது, ஈராக்கினை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்கப் படையினருக்கும், அங்கு நிறுவப்பட்டிருக்கும் பொம்மை ஆட்சியாளருக்கும் பாதுகாப்பளிக்க வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள 'பிளாக் வாட்டர்ஸ்' என்ற அமெரிக்கக் கூலிப்படை நிறுவனத்தின் வாகனம்.

பாக்தாத்தை ஒட்டிய, நெரிசல் மிக்க மன்சூரில் உள்ள நிசௌர் சதுக்கத்தில், பொதுமக்கள் மட்டும் புழங்கக் கூடிய அவ்வீதியில், அந்த வாகனம் நுழைந்ததும் மக்கள் நடமாட்டத்தை நிறுத்தி வைக்க உள்ளூர் போலீசு அவசர அறிவிப்பு செய்கிறது. போலீசின் அறிவிப்பை அடுத்து ஏற்பட்ட களேபரத்தினூடே ஈராக்கியர்களை ஏற்றி வந்த ஒரு பேருந்து தடையைக் கவனிக்காமல் வழக்கமாக நகரத் தொடங்குகிறது. கண்ணிமைக்கும் நேரத்தில் அவ்வாகனம் மீது துப்பாக்கிக் குண்டுகள் சீறிப் பாய்ந்தன. 40 ரவுண்டுகளுக்கும் மேல் சுடப்பட்டன. கையெறி குண்டுகள் வீசப்பட்டன. 17 பேர் கொல்லப்பட்டனர். அந்த வாகனத்தில் வந்தவர்கள் யாரும் அல்கொய்தா தீவிரவாதிகள் அல்லர். ஈராக்கின் சாமானிய மக்கள். அவர்களில் பச்சிளம் குழந்தையும் இளம்பெண்களும் அடங்குவர்.

'பிளாக் வாட்டர்ஸ்' எனும் கூலிப்படை துப்பாக்கிச் சூட்டை ஆரம்பித்ததும் வாகனத்தின் கதவைத் திறந்து கொண்டு தரையில் ஊர்ந்தபடி உயிர் பிழைக்க முயன்ற குழந்தைகளும் பெண்களும் குறி வைத்துச் சுடப்பட்டனர். கடந்த செப்டம்பர் 16-இல் நிசார் சதுக்கத்தை இரத்தச் சகதியில் மூழ்கடித்த 'பிளாக் வாட்டர்ஸ்', இந்த ஆண்டில் மட்டும் 52 துப்பாக்கிச் சூடுகளை நடத்தியுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் 195 முறை இது போன்ற மனிதப் படுகொலைகளை ஈராக்கில் நடத்தியுள்ளது.

நிசார் சதுக்கக் கொலைவெறியாட்டத்தில் ஈடுபட்ட பிளாக் வாட்டர்ஸ் ஒப்பந்த நிறுவனம் தனது எல்லைக்குள் முடங்கிக் கொள்ள வேண்டுமென்றும், இப்படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஈராக் அரசு அறிவித்தது. அடுத்த நாலே நாட்களில் அந்நிறுவனம் பழையபடி செயல்படத் தொடங்கி விட்டது. அமெரிக்க நிர்ப்பந்தத்தாலும், அமெரிக்கப் படையினருக்கும் நிகரான சட்டப்பாதுகாப்பு இக்கூலிப்படையினருக்கு இருப்பதாலும் குற்றவாளிகள் மீது நடவடிக்கை ஏதும் இல்லை.

**நிசௌர் சதுக்கத்தில் தனியார் கூலிப்படை கும்பல் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்தவர்.**



பாக்தாத்தின் இரத்த ஞாயிறு என வர்ணிக்கப்படும் இக்கோரப் படுகொலை நடந்ததையடுத்து நாடெங்கும் கொத்தளிப்பு மிகுந்தவுடன், நடப்பது அமெரிக்காவின் பொம்மை ஆட்சியாகவே இருப்பினும், கொல்லப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் தலா 32 கோடி ரூபாயை இழப்பீடாகத் தரவேண்டும் என்றும் ஆறு மாதங்களுக்குள் பிளாக் வாட்டர்ஸ் நிறுவனம் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும் என்றும் ஈராக் பிரதமர் நூரி அல் மால்கி நிபந்தனைகளை விதித்துள்ளார். அவரால் இதற்கு மேல் எதனையும் செய்ய முடியாது.

அமெரிக்கக் கூட்டுப் படையினருடன் அழைத்து வரப்படும் இதுபோன்ற கூலிப்படை ஒப்பந்த நிறுவனத்தினர் மீது கொலை வழக்கோ, கைதோ செய்ய முடியாதபடிக்கு 'ஆணை எண் 17' என அழைக்கப்படும் சட்டம் ஈராக்கில் நடைமுறையில் உள்ளது. 2004-இல் பொம்மை அரசை நிறுவ சில நாட்கள் இருந்த நிலையில், அமெரிக்கக் கூலிப்படையினருக்குச் சட்டப் பாதுகாப்பை வழங்குவதற்கென்றே முறைகேடான இந்த ஆணையை அமெரிக்கப் பிரதிநிதி பவுல் பிரீமெர் பிறப்பித்திருந்தார்.

சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க முகமை (யு.எஸ்.எய்டு) எனும் தன்னார்வ நிறுவனத்திற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒப்பந்த நிறுவனம் ஒன்று, இப்படுகொலை நடந்த ஒரு மாதத்திற்குள் பொதுமக்கள் பயணம் செய்த கார் ஒன்றினைச் சுட்டு இரண்டு ஈராக்கியப் பெண்களைக் கொன்றுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க பன்னாட்டுப் படையினர் செய்யத் தயங்கும் அபாயகரமான வேலைகளையும், மறுசீரமைப்புப் பணிகளையும் செய்வதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் செக்யூரிட்டி நிறுவனங்களில் ஒன்றுதான் 'பிளாக் வாட்டர்ஸ்'. அமெரிக்க அதிபர் புஷ்-சின் குடியரசுக் கட்சிக்குத் தேர்தல் நிதியை அள்ளித் தந்ததற்குக் கைமாறாக, ஈராக்கில் பாதுகாப்பளிக்கும் சேவைக்கான ஒப்பந்தம், தீவிர எவாஞ்சலிகல் கிறிஸ்துவ வலதுசாரியான எரிக் பிரின்ஸ் என்பவருக்குச் சொந்தமான இந்நிறுவனத்திற்குக் கிடைத்தது. ஒசாமா பின்லேடன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட முன்னாள் சி.ஐ.ஏ. அதிகாரி கோபர் பிளாக் இந்நிறுவனத்தின் மேலதிகாரியாக இருப்பதிலிருந்தே இந்நிறுவனத்திற்கு அமெரிக்க அதிகார வர்க்கத்துடனுள்ள நெருக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும்.



பாதுகாப்பு என்ற பெயரில் பிணம் தின்னிக் கழுகுகளைப் போல ஈராக்கில் வலம் வரும் தனியார் கூலிப்படையினர்.

சென்ற ஆண்டு இதே பிளாக்வாட்டர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு சிப்பாய், ஈராக்கின் துணை அதிபரின் பாதுகாவலரை கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின்போது சுட்டுக் கொன்றான். இக்கொலையாளி மீது கைதோ வழக்கோ வராமல் இருக்க கண்ணும் கண்ணும் வைத்தாற்போல அவனை அமெரிக்காவுக்கு பத்திரமாய் அனுப்பி வைத்தனர். கொலையாளி மீது எடுத்த நடவடிக்கை என்னவென்று கேட்டால் 'அந்நபரை வேலையை விட்டு நீக்கி விட்டோமே' என்று திமிராகக் கூறுகிறது, பிளாக் வாட்டர்ஸ். அந்நபர் மீது ஈராக்கிலோ அமெரிக்காவிலோ இன்றுவரை குற்றப் பதிவுகூடச் செய்யப்படவில்லை.

மற்றுமொரு சம்பவத்தில் தங்களது வாகனத்துக்கு அருகில் பயணித்த 'மாபெரும்' குற்றத்திற்காக ஈராக்கிய கார் ஓட்டுநர் ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளனர். இவர்களின் கொலைப்பட்டியலோ நீண்ட நெடியது. கடந்த பிப்ரவரி 4-ல் ஹனா அல் அமீதி எனும் ஈராக் செய்தியாளர், பிப்ரவரி 7-இல் ஈராக் அரசு தொலைக்காட்சியாளர்கள் எனப் பல ஈராக்கியப் பொதுமக்கள் காரணம் ஏதுமின்றிக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக் முழுக்க அமெரிக்க-இங்கிலாந்து ஆக்கிரமிப்புப் படையினருடன், சுமார் 180 ஒப்பந்த நிறுவனங்களின் கூலிப்படையாட்களும் குவிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் மீது நடத்தி வரும் இப்படுகொலைகளை, 'ஒப்பந்த நிறுவனங்கள் தங்கள் கடமையைத்தான் செய்கின்றன' என்றும் 'ஈராக்கில் இருக்கும் அசாதாரண சூழலில் ஆட்சியாளரையும், படையினரையும் காக்கும் பொறுப்பு இந்த நிறுவனங்களுக்கு உள்ளது' என்றும் அமெரிக்கா நியாயப்படுத்துகிறது.

கூலிப்படையினருக்கு சட்டப்பாதுகாப்பு வழங்கும் 'ஆணை எண் 17'-ஐ திரும்பப் பெறவேண்டும் என்று பொம்மை ஆட்சியாளர்கள் முதலில் நிபந்தனை விதித்தாலும், அமெரிக்க அரசின் நிர்ப்பந்தத்தால் தற்போது 'அதே ஆணையில் உள்ள உட்பிரிவின்படி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது அமெரிக்கா விரும்பினால் ஆணையை தளர்த்த முடியும். அதனை அமெரிக்கா செய்ய வேண்டும்' என இறைஞ்சும் நிலைக்கு வந்து விட்டது.

ஏற்கெனவே நாடு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள, 1,35,000 அமெரிக்க சிப்பாய்களை எதிர்த்துப் போரிடும் ஈராக் போராளிகளுக்கு, 1,80,000 பேரைக் கொண்ட கூலிப்படையையும் எதிர்த்து சுதந்திரப் போரை நடத்த வேண்டிய காலக் கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

முதலாளித்துவப் பத்திரிக்கைகள் கூட 'போரில் கூடத் தனியார்மயத்தை எல்லை மீறி அமெரிக்கா செயல்படுத்துவதாகக்' கண்டிக்கின்றன.

இதுவரை ஈராக் விடுதலைப் போரில் அமெரிக்கத் தரப்பில் 3,900 சிப்பாய்கள் கொல்லப்பட்டு, அமெரிக்கா இன்னொரு வியட்நாமை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கையில், ஒப்பந்த அடிப்படையில் போர்முனைக்குச் சென்றுள்ள கூலிப்படையினர்களிலும் 1000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 12,000 பேருக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

எத்தனை கூலிப்படைகளை இறக்கினாலும் ஈராக்கில் இருந்து அமெரிக்கா அடித்துத் துரத்தப்படுவது உறுதி. அமெரிக்காவின் நவீன இராணுவத்தை விடவும் கூலிப்படையினரை விடவும், தாய்நாட்டுக்காகப் போராடுபவர்களின் துணிவும் வீரமுமே வலிமையும் ஆற்றலுமிக்கது என்பதே உலகெங்கும் நிரூபிக்கப்பட்டுள்ள உண்மை.

● கவி


படிப்பகம்

www.padippakam.com

# மியான்மர்: வட்டமிடும் வல்லூறுகள்

**இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு ஆதரவு அல்லது எதிர்ப்பு அரசியலின் பின்னே, மியான்மரின் இயற்கை வளங்களைக் கொள்ளையிடும் சதி உள்ளது.**

பாகிஸ்தானில் நடக்கும் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு முட்டுக் கொடுத்து வரும் அமெரிக்கா, மியான்மரில் (பர்மா) நடக்கும் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகப் பொருளாதாரத் தடையுத்தரவுகளைப் பிறப்பிக்கிறது. சோசலிச நாடு எனக் கூறிக் கொள்ளும் சீனாவும்; உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என மார் தட்டிக் கொள்ளும் இந்தியாவும், ஐ.நா. மன்றத்தைச் சேர்ந்த மனித உரிமைகளுக்கான அமைப்பில் மியான்மரின் இராணுவ சர்வாதிகாரிகளுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்துள்ளன.

இந்த நாடுகள் எடுத்துள்ள இந்த் முரண்பட்ட நிலைப்பாட்டை எப்படிப் புரிந்து கொள்வது? இந்தக் கேள்விக்கான விடையைத் தேடினால், சனநாயகம், சுதந்திரம் குறித்து ஆளும் கும்பல்கள் போடும் கூச்சல்களுக்குப் பின்னே, அவர்களின் அரசியல் - பொருளாதார ஆதிக்க நோக்கங்கள் மறைந்து கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவின் வடகிழக்கே அமைந்துள்ள மியான்மரில் (பர்மா) 1962-ஆம் ஆண்டு தொடங்கி, கிட்டதட்ட 45 ஆண்டுகளாக இராணுவ சர்வாதிகார ஆட்சிதான் நடைபெற்று வருகிறது. இளம் மாணவர்கள் தலைமையில், 1988-இல் இராணுவ ஆட்சிக்கு எதிராக மிகப் பெரிய போராட்டம் வெடித்தது. இப்போராட்டத்திற்கு இணையாக, போக்குவரத்து, அஞ்சல் துறை, தொலைதொடர்புத் துறை மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும், ஊழியர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர்.

ஆயிரக்கணக்கான கலகக்காரர்களைச் சுட்டுக் கொன்று அப்போராட்டத்தை ஒடுக்கிய இராணுவ ஆட்சியாளர்கள், அப்போராட்டத்தின் பொழுது நாட்டுக்குத் திரும்பி வந்த ஆங் சான் சுயு கியுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஜனநாயகத்திற்கான போராட்டத்திற்குத் தலைமை ஏற்றிருந்த மாணவர்களை ஒதுக்கி வைத்து விட்டு, இராணுவ ஆட்சியாளர்கள் ஆங் சான் சுயி கியுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டதற்கு, அவர் 'சுதந்திர' பர்மாவின் முதல் பிரதமர் யுநூவின் மகள் என்பது காரணம் இல்லை. மாறாக, அவர் மேற்குலக ஏகாதிபத்தியங்களால் போராட்டத் தலைமையாகத் திணிக்கப்பட்டார் என்பதுதான் காரணம்.

இந்த ஒப்பந்தத்தின்படி, மியான்மரில் தேர்தல் நடத்தவும், ஜனநாயக அரசொன்றை அமைக்கவும் இராணுவ ஆட்சியாளர்கள் ஒப்புக் கொண்டனர். இதையொட்டி நடந்த தேர்தலில், ஆங் சான் சுயு கியின் தலைமையில் அமைந்திருந்த ஜனநாயகத்திற்கான தேசிய இயக்கம் மாபெரும் வெற்றி பெற்றது. எனினும், இராணுவத் தளபதிகள் நேரடி இராணுவ ஆட்சியை விட்டுக் கொடுக்க மறுத்ததோடு, தேர்தலையும் ரத்து செய்வதாக அறிவித்தனர். போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய மாணவர் தலைவர்களுள் பலர் அண்டை நாடுகளில் தஞ்சமடைந்தனர். ஆங் சான் சுயு கி 2001-ஆம் ஆண்டு தொடங்கி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சட்டபூர்வ எதிர்க்கட்சி என்பதுகூட இல்லாதபடி, பாகிஸ்தானைவிட மிகக் கொடூரமான முறையில்தான் மியான்மரில் இராணுவ சர்வாதிகார ஆட்சி நடந்து வருகிறது. கடந்த ஆகஸ்டு மாதம், சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவுப்படி, அந்நாட்டில் பெட்ரோல்-டீசலின் விலைகள் உயர்த்தப்பட்டன. 1988-ஆம் ஆண்டு போராட்டத்தை நடத்திய (பழைய) மாணவர்கள், இவ்வுயர்வை எதிர்த்து ஒரு புதிய போராட்டக் குழுவை அமைத்தனர்.

இதனிடையே, சில புத்த மத மடாலயங்களில் இராணுவச் சிப்பாய்களால் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

**இராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிராகப் புத்த பிக்குகளும், பொதுமக்களும் இணைந்து மியான்மர் தலைநகர் யங்குனில் (ரங்கூன்) நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி.**





படிப்பகம்

இத்தேடுதல் வேட்டைக்கு இராணுவ ஆட்சியாளர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனக் கோரி, புத்த பிக்குகள் போராட்டத்தில் குதித்தனர். தனித்தனியான இந்த இரண்டு போராட்டங்களும் ஒரு கட்டத்தில் ஒன்றாக இணைந்து, ஜனநாயகத்திற்கான போராட்டமாகப் பரிணமித்தது.

1988-இல் நடந்த போராட்டம் இளம் மாணவர்கள் தலைமையில் நடந்தது என்றால், தற்போதைய போராட்டம் இளம் புத்த பிக்குகள் தலைமையில் நடந்தது. எதிர்க்கட்சிகளை விட புத்த பிக்குகள் மதரீதியில் ''சங்கா'' என்ற பெயரில் அமைப்பாகத் திரட்டப்பட்டிருப்பதால், இப்போராட்டம் நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவியது.




மியான்மர் இராணுவ சர்வாதிகாரிகளோடு கூடிக் குலாவும் இந்திய அரசைக் கண்டித்து தில்லியில் பர்மிய அகதிகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

இப்போராட்டம் புத்த பிக்குகள் தலைமையில் நடந்ததால், 1988-ஐப் போல, இராணுவ ஆட்சியாளர்கள் அடக்குமுறையை ஏவிவிடமாட்டார்கள்; பேச்சு வார்த்தைக்கு இறங்கி வருவார்கள் எனப் பலரும் எதிர்பார்த்தனர். எனினும், 1988-இல் நடந்ததைப் போன்ற போர்க்குணத் தன்மையும் இன்றி, வர்க்க அணி சேர்க்கையும் இன்றி மிதவாதமாகவே நடந்த இப்போராட்டத்தின் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு ஒடுக்கப்பட்டது. இப்போராட்டத்தின் பொழுது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 100-விருந்து 200 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்; புத்த பிக்குகள் உள்ளிட்டு ஆயிரக்கணக்கானோர் விசாரணையின்றிச் சட்ட விரோதக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்போராட்டம் பற்றிய செய்தி கடுகளவுகூட வெளியுலகுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக, வெளிநாட்டு நிருபர்கள் செய்தி சேகரிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. எனினும், ''செல்ஃபோன் காமிரா'', இணையதள தொழில் நுட்பத்தின் காரணமாக, போராட்டத்தின் மீது ஏவிவிடப்பட்ட ஒடுக்குமுறை உலகெங்கும் அம்பலமானது.

இதனையடுத்துதான், ஐ.நா. மன்றம் மியான்மர் இராணுவ சர்வாதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒரு சிறப்புத் தூதுவரை நியமித்தது. அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் மியான்மர் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என ஐ.நா.வை நிர்பந்தித்தன. சீனா, ரசியா, இந்தியா மற்றும் ''ஆசியான்'' கூட்டமைப்பு நாடுகள் ''மியான்மரின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது'' எனக் கூறி பொருளாதாரத் தடையுத்தரவு போடுவதை எதிர்த்தன.

மிகவும் வறிய ஏழை நாடான மியான்மரில் கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, காடுகள், தாதுப் பொருட்கள் போன்ற மூலவளங்கள், இன்னும் பயன்படுத்தப்படாமல் கொட்டிக் கிடக்கின்றன. இந்த மூல வளங்களை யார் கட்டுப்படுத்துவது என்பதற்கான போட்டிதான், இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு ஆதரவு / எதிர்ப்பு என்ற இரு முகாம்களாக உலக நாடுகளைப் பிரித்துப் போட்டுள்ளது.

இன்றைய நிலையில் சீனாதான், மியான்மரின் நெருங்கிய வர்த்தக மற்றும் இராணுவக் கூட்டாளி. சீன அரசு நிறுவனங்கள், மியான்மரில் 40 நீர் மின்சாரத் திட்டங்களையும்; 17 கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தித் திட்டங்களையும்; மியான்மரில் இருந்து சீனாவுக்கு கச்சா எண்ணெயையும், இயற்கை எரிவாயுவையும் கொண்டு செல்வதற்காக 1,500 மைல் நீள குழாய் வழித்தடத்தையும் உருவாக்கி வருகிறது. மியான்மருக்குத் தேவைப்படும் இராணுவத் தளவாடங்களை விற்பதோடு, தனது இராணுவ நோக்கங்களுக்காகவும் மியான்மர் நாட்டைப் பயன்படுத்தி வருகிறது, சீனா.

இந்தியா, எரிபொருள் வளங்களுக்காக மட்டுமின்றி, வடகிழக்கு இந்தியாவில் போராடி வரும் தேசிய இனப் போராளிகளை ஒடுக்குவதற்காகவும் மியான்மரின் இராணுவ ஆட்சியாளர்களோடு கூடிக் குலாவி வருகிறது. கடந்த செப்டம்பர் மாதம் பர்மிய மக்கள் ஜனநாயகத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தபொழுது, அந்நாட்டுக்குச் சென்ற இந்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் முரளி தியோரா, மூன்று எரிபொருள் வர்த்தக ஒப்பந்தங்களைப் போட்டுத் திரும்பினார்.

அமெரிக்கா, மியான்மர் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்காக 2003-ஆம் ஆண்டிலேயே ''பர்மிய விடுதலை மற்றும் ஜனநாயகச் சட்டத்தை''க் கொண்டு வந்தது. எனினும், இச்சட்டம், அமெரிக்காவின் செவ்ரான், பி.ஜே. சர்வீசஸ், சுலும்பேகர், பேகர் ஹக்ஸ் ஆகிய எண்ணெய் நிறுவனங்கள், மியான்மருடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதைத் தடுக்கவில்லை.

மியான்மரில் மூலதனம் போடுவதில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ள நாடு இங்கிலாநது. 1998-க்கும் 2004-க்கும் இடைபட்ட ஆண்டுகளில் மட்டும் இங்கிலாந்து 120 கோடி பவுண்டு மூலதனத்தைப் போட்டுள்ளது.

பர்மிய மக்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதைக் கண்டித்த

www.padippakam.com

பிரெஞ்சு அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி, ''மியான்மரில் செயல்படும் பிரெஞ்சு நிறுவனங்கள் தங்களின் வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்திக் கொள்ள வேண்டும்'' என்றும் அறிவித்தார். ஆனால், அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சரோ, ''அதிபரின் அறிவுரை, மியான்மரில் செயல்படும் பிரெஞ்சு எண்ணெய்க் கழகமான டோட்டலுக்குப் பொருந்தாது'' என விளக்கமளித்தார்.

மியான்மரில் சீனாவின் செல்வாக்கை வளரவிடக் கூடாது என்பதற்காகவே, அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியன் நாடுகளும், மியான்மரின் இராணுவ ஆட்சியை எதிர்க்கின்றன. இந்தியாவிற்கோ, மியான்மரின் எரிபொருளும் வேண்டும்; அங்கிருந்து சீனாவையும் துரத்த வேண்டும் என்ற ஆசை; மியான்மரில் அமெரிக்காவின் செல்வாக்கு வளர்ந்துவிடக் கூடாது என்பதில் சீனாவும், ரசியாவும் ஒத்துப் போகின்றன.

மியான்மரில், இராணுவ சர்வாதிகார ஆட்சியின் கீழ் மறுகாலனி ஆதிக்கத்தை நடத்துவதா? இல்லை, நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியின் கீழ் மறுகாலனி ஆதிக்கத்தை நடத்துவதா? என்பதுதான் இந்நாடுகளுக்கிடையே உள்ள ''கொள்கை'' வேறுபாடு. ஜனநாயகப் போராளியாகச் சித்தரிக்கப்படும் ஆங் சான் சுயு கியோ, இந்த நயவஞ்சகத் திட்டம் பற்றி வாய் திறக்க மறுக்கிறார். இராணுவ சர்வாதிகார ஆட்சியைப் போலவே, எதிர்த்தரப்பின் இந்த மௌனமும் அபாயகரமானது என்பதை மியான்மர் மக்கள் புரிந்து கொண்டு போராட வேண்டும்.

● ரஹீம்

# ''மோடி, அத்வானி வகையறாக்களைத் தூக்கில் போடு! இந்துவெறி பாசிச அமைப்புகளைத் தடை செய்!'' — ஆர்ப்பாட்டம்-கொடும்பாவி எரிப்புப் போராட்டம்

குஜராத்தில் இசுலாமிய மக்களுக்கு எதிராகக் கொலைவெறித் தாண்டவமாடிய பார்ப்பன-இந்துவெறி பயங்கரவாத மிருகங்களுக்கிடையே ஊடுருவி, குஜராத் கொடூரங்களை அரங்கேற்றியவர்களின் வாயிலிருந்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை மறுக்க முடியாத ஆதாரங்களுடன் ''டெகல்கா'' வார இதழ் கடந்த அக்டோபர் இறுதியில் வெளியிட்டுள்ளதைக் கண்டு நாடே அதிர்ச்சியடைந்தது.

பாசிச இட்லரையே விஞ்சும் இக்கொடிய பயங்கரவாதிகளைத் தூக்கிலிடக்கோரியும், இந்துவெறி பாசிச பயங்கரவாத அமைப்புகளைத் தடைசெய்யக் கோரியும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் உடனடியாக தாங்கள் செயல்படும் பகுதிகளில் விரிவாக துண்டுப் பிரசுரம்-சுவரொட்டிகள் மூலம் பிரச்சாரம் செய்ததோடு, முச்சந்திகளில் பயங்கரவாத மோடி-அத்வானியின் உருவ பொம்மைகளைத் தூக்கில் தொங்கவிட்டன.







அதன் தொடர்ச்சியாக 29.10.07 அன்று கோவில்பட்டி வட்டாச்சியர் அலுவலகம் அருகில் இவ்வமைப்புகள் இணைந்து எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின. அதே நாளில், திருச்சி பாலக்கரை-பிரபாத் திரையரங்கம் அருகே பயங்கரவாத மோடியின் உருவப் பொம்மையைத் தூக்கிலிட்டு விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உளுந்தூர்பேட்டையில், சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் மோடி-அத்வானியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. சென்னையில், 31.10.07 அன்று மெமோரியல் ஹால்-பொது மருத்துவமனை எதிரே அத்வானி-மோடியின் உருவப் பொம்மைகளைத் தூக்கிலிட்டு கண்டன ஆர்ப்பாட்டமும், அதைத் தொடர்ந்து கொடும்பாவி எரிப்புப் போராட்டமும் நடைபெற்றது. சென்னையில் கோயம்பேடு, கிண்டி, செங்குன்றம் முதலான மக்கள் நெரிசல் மிக்க பகுதிகளில் பயங்கரவாத மோடி-அத்வானியின் உருவப் பொம்மைகள் தூக்கில் தொங்கவிடப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்றதோடு, மோடி-அத்வானியின் உருவப் பொம்மைகளைத் தூக்கில் தொங்கவிட்டதை உற்சாகத்துடன் வரவேற்று ஆதரித்தனர். இந்த ஆர்ப்பாட்டங்களும் கொடும்பாவி எரிப்புப் போராட்டங்களும் இந்துவெறி பாசிச பயங்கரவாதத்தை முறியடிக்க வீதியில் இறங்கிப் போராட அறைகூவுவதாக அமைந்தன.

— பு.ஜ.செய்தியாளர்கள்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.
படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...



காஞ்சி சங்கராச்சாரியை எள்ளி நகையாடிய இளந்தோழர் அனுசுயா.



"நான் பெரியார் பேசுகிறேன்..." - இளந்தோழர் சங்கரி.



"குஞ்சிதம் குருசாமி பேசுகிறேன்..." - இளந்தோழர் ஓவியா.

சுப.தங்கராசு, நவம்பர் புரட்சியின் வழியில் நம் நாட்டில் புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க அறைகூவினார். பாட்டாளி வர்க்க சர்வதேசிய கீதத்துடன் நிறைவுற்ற இவ்விழாவில் இளந்தோழர்களுக்குப் பரிசளிப்புடன் அனைவருக்கும் மாட்டுக்கறி உணவும் வழங்கப்பட்டது.

**திருச்சியில்** ம.க.இ.க. கிளை சார்பில் காந்திபுரத்திலும் பு.மா.இ.மு. சார்பில் துவாக்குடி பெரியார் திடல், காட்டூர், திருவரம்பூர் ஆகிய பகுதிகளிலும், திருச்சி மாவட்டம் துறையூர் வட்டத்தில் காளிப்பட்டி கிராமத்தில் வி.வி.மு. சார்பிலும் விண்ணதிரும் முழக்கங்களுடன் செங்கொடியேற்றி, நவம்பர் புரட்சிநாள் உழைக்கும் மக்களின் திருவிழாவாக நடைபெற்றது.

**ஓசூரில்** பு.ஜ.தொ.மு. மற்றும் புதிய ஜனநாயகக் கட்டிடத் தொழிலாளர் சங்கம் இணைந்து கொத்தகொண்டப் பள்ளியில் செங்கொடியேற்றி நவம்பர் புரட்சி நாளை எழுச்சியூட்டும் விழாவாக நடத்தின. இவ்விழாவில் "ராமன்: இரட்டைக் கொலை வழக்கு" நாடகத்தை இளந்தோழர்கள் நடத்திக் கொலைகார ராமனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினர். இப்பகுதிவாழ் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நடத்தி பரிசளித்த இவ்வமைப்பினர், நிகழ்ச்சியின் இறுதியில் அனைவருக்கும் மாட்டுக்கறி விருந்தளித்தனர். ஓசூரை அடுத்துள்ள பாகலூர், சூளகிரி ஆகிய சிறுநகரங்களிலும் தேன்கனிக்கோட்டை வட்டம் நாட்ராம்பாளையத்திலும் பு.ஜ.தொ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் செங்கொடி ஏற்றித் தெருமுனைக் கூட்டங்கள் மூலம் இவ்விழாவைப் பிரச்சார இயக்கமாக நடத்தின.

**புதுச்சேரி** பு.மா.இ.மு. சார்பில் திருபுவனையில் நடந்த நவம்பர் புரட்சிநாள் விழாவில், சோசலிச ஜனநாயகத்தையும் நம் நாட்டில் நிலவும் போலி ஜனநாயகத்தையும் ஒப்பிட்டுக் காட்டியும், மறுகாலனியாதிக்கத்தை வீழ்த்த நவம்பர் புரட்சியின் வழியில் பாட்டாளி வர்க்க அரசமைக்க அறைகூவியும் முன்னணித் தோழர்கள் உரையாற்றினர். இப்பகுதித் தோழர்கள் நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சி அரங்கையே அதிர வைத்தது.

"தொழிலாளர்களை இன்று பகத்சிங் சந்தித்தால்..." - நாடகத்தில்.



**கோவில்பட்டியில்** பு.ஜ.தொ.மு. மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம் இணைந்து மறவர் காலனியில் தெருமுனைக் கூட்டம் நடத்தி, பகுதிவாழ் மக்களுக்கு இனிப்பு வழங்கி நவம்பர் புரட்சி நாளைக் கொண்டாடின. பின்னர் "புதிய ஜனநாயகம்" வாசகர் வட்டம் சார்பாக வள்ளுவர் நகர் சமுதாயக் கூடத்தில் நடந்த அரங்கக் கூட்டத்தில், பு.ஜ.ஏடு தனது புரட்சிப் பயணத்தைத் தொடங்கி 22 ஆண்டுகள் நிறைவெய்தியுள்ளதைச் சிறப்பித்தும், புரட்சிகர அரசியல் பிரச்சாரகனாக - அமைப்பாளனாகச் செயல்படுவதை விளக்கியும், நவம்பர் புரட்சிநாளின் படிப்பினைகளைத் தொகுத்தும் முன்னணியாளர்கள் உரையாற்றினர். நிகழ்ச்சியின் இறுதியில் திரையிடப்பட்ட "லெனின்: எதிர்காலத்திற்கான வரலாறு" எனும் குறும்படம் பார்வையாளர்களுக்கு அரசியல் உணர்வூட்டுவதாக அமைந்தது.

சாத்தூர், கோவில்பட்டி, விருதுநகர், விளாத்திகுளம் பகுதிகளில் பு.ஜ.தொ.மு., வி.வி.மு. அமைப்புகளின் சார்பாக நவம்பர் புரட்சியின் வழியில் நம்நாட்டிலும் பாட்டாளி வர்க்க ஆட்சியை நிறுவ உழைக்கும் மக்களை அறைகூவிப் பரவலாகச் சுவரொட்டிப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. **சாத்தூரில்** பு.ஜ.தொ.மு சார்பில் புரட்சிகர பாடல்களை ஒலிபரப்பி, இனிப்புகள் வழங்கி தெருமுனைக் கூட்டத்துடன் விழாவை நடத்திய தோழர்கள், பின்னர் பகுதிவாழ் மக்களைத் திரட்டி ம.க.இ.க.வின் தமிழ் மக்கள் இசை விழா நிகழ்ச்சிகளைத் திரையிட்டனர். **வேலூரில்** எழுச்சியுடன் நடந்த நவம்பர் புரட்சி நாள் விழாவில் ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் சிறப்புரையாற்றினார். **திருவாரூர்**-அம்மையப்பனில் திரளான இளைஞர்கள் பங்கேற்புடன் பு.மா.இ.மு. சார்பில் செங்கொடியேற்றி நவம்பர் புரட்சிநாள் வர்க்க உணர்வோடு நடைபெற்றது.

— **பு.ஜ.செய்தியாளர்கள்**



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# குஜராத்:
# "முஸ்லிம்களை நாங்கள்தான் கொளுத்தினோம்; வெட்டினோம், கற்பழித்தோம்!"
## - ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கிரிமினல்கள் வீடியோ வாக்குமூலம்.



**மத்திய அரசே!**

- **பார்ப்பன மதவெறி கொலைகாரன் மோடி, அத்வானி வகையறாக்களைக் கைது செய்!**
- **பார்ப்பன பாசிச ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., இந்து முன்னணி முதலான தேசத்துரோக கிரிமினல் அமைப்புகளைத் தடை செய்!**

- என 29.10.07 அன்று மோடி-அத்வானி உருவப் பொம்மைகளைத் தூக்கிலிட்டு தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் நடத்திய

# ஆர்ப்பாட்டம் - கொடும்பாவி எரிப்புப் போராட்டம்







குஜராத் முதல்-மந்திரியின் உருவ பொம்மையை தூக்கிலிட்டு ஆர்ப்பாட்டம்

மலைக்கோட்டை, அக்.30-
திருச்சி பாலக்கரை பகுதியில் குஜராத் முதல்-மந்

படிப்பகம்